127

# தமிழர் கண்ட கல்வி

647

புலவர்
சுந்தர சண்முகனார்

மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்.

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு : மார்ச்—64.

சாதாப் பதிப்பு விலை ரூ. 3-00
பரிசுப் பதிப்பு விலை ரூ. 3-50

அச்சிட்டோர் :
குமுதம் அச்சகம்,
76, எல்லிஸ் ரோடு,
சென்னை - 2.

# நூன்முகம்

**பு**துவை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கூடத்தில் வேலை பார்க்கும் எனக்கு ஒரு சமயம் ஒருவகைப் பொறாமை உணர்வு ஏற்பட்டது. பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர் கட்குக் கல்வித் தொடர்பான பல கொள்கைகள் பற்றியும் கற்பிக்கும் முறை பற்றியும் பேராசிரியர்கள் விளக்குவது வழக்கம். சில சமயம், மேலை நாட்டாசிரியர்களுள் அவர் அதுபற்றி அப்படிச் சொல்லியிருக்கிறார், இவர் இதுபற்றி இப்படிச் சொல்லியிருக்கிறார் என்றெல்லாம் நாங்கள் எடுத்துக் காட்டுவதுண்டு. இந்தச் சூழ்நிலையில்தான் எனக்குப் பொறாமையுணர்வு அரும்பலாயிற்று.

மேலைநாட்டுப் பேரறிஞர்களான, ரைபன், ஸ்பீக், பிரான்சஸ்ரோ, பேகன், ஸ்பியர்மன், தாமஸ்மேன், கிரீனிங், சைமன், பீனே, ரூஸோ, மோந்தாஞ், மாண்டிசரி, கேட்ஸ், ஜேம்ஸ், ஜெபர்ஸன், பாட்டியா, ஸ்டீவன்ஸன் முதலியோரின் பெயர்களையும், அவர்கள் வெளியிட்டுள்ள கல்விக் கொள்கைகளையும் ஆராயும் இன்றைய கல்வி உலகம், நம் தமிழ்ப் பேரறிஞர்களின் பெயர்களையும் அவர் கள் அறிவித்துள்ள கல்விக் கொளகைகளையும அவ்வளவாக ஆராயவில்லையே என்ற ஏக்கம்—இல்லை—பொறாமை யுணர்வு எனக்கு ஏற்பட்டது.

மேலும், மேலை நாடுகளில் பழங்காலத்திலிருந்து பின் பற்றப்பட்டு வந்த கல்விமுறை பற்றிய நூற்கள் ஆங்கிலத் திலும், பிரெஞ்சிலும் இருக்கவும் பார்த்தேன்.

எனவே, அன்றுதொட்டு இன்றுவரை—ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள்

தத்தம் தமிழ் நூற்களில் கல்விபற்றி வெளியிட்டுள்ள கருத்துக்களைத் தேர்ந்தெடுத்துத் திரட்டித் தொகுத்து ஒரு நூலாகக் கொணரவேண்டும் என்ற அவா எனக்கு ஏற்பட்டது. இது போன்ற ஒருவேலை எப்போதோ இயற்கையாகச் செய்து வைத்திருந்த நினைவு வந்தது. வரவே, தேடி எடுத்து மெருகு கொடுத்து இந்த வடிவத்தில் நூலை உருவாக்கினேன்.

பொதுவாக மக்களுக்கும்—சிறப்பாகப் பிள்ளைகட்கும் பல்வகை விளக்கங்களும் அளிக்கும் பெருவிளக்காகக் கல்வி தமிழ் நூற்களில் உருவாக்கப்பட்டிருப்பதைப் பலபட விளக்குவதாலும், என் சொந்தக் கருத்தாக இல்லாமல்—எல்லாம் தமிழர் கண்ட கல்விக் கொள்கைகளாக இருப்பதாலும், இடையிடையேயும் இறுதியிலும் மேலை நாட்டுக் கல்விக் கொள்கைகளோடு தமிழர் கண்ட கல்விக் கொள்கைகள் ஒப்பிட்டு ஆராயப்பட்டிருப்பதாலும் இந்நூலுக்குத் தமிழர் கண்ட கல்வி என்னும் பெயர் இட்டுள்ளேன்.

இந்நூலை முற்றிலும் உள நூல்—விஞ்ஞானக் கண் கொண்டு மட்டும் பார்க்காமல், இலக்கிய—வரலாற்றுக் கண்கொண்டும் பார்க்கவேண்டும். என்றாலும், பழந்தமிழர் கண்ட கல்விக் கொள்கைகளுள் பெரும்பாலான இக்காலக் கல்விக் கொள்கைகளோடு ஒப்புடையவை எனவும், சில மேம்பட்டவை எனவும் துணிந்து கூறலாம். ஒரு சில மட்டும் ஒவ்வாது முரண்படலாம்.

இந்நூலில் கல்வியின் இயல்பு, சிறப்பு, நன்மைகள், கட்டாயம், கற்கும் முறை, கற்பிக்கும்முறை, மாணவர் கடமை, ஆசிரியர் கடமை, பெற்றோர் கடமை, கற்றோர் கடமை, முதலிய பல்வகைக் கருத்துக்கள், பழந்தமிழ்



நூற்கள் பலவற்றின் துணைகொண்டு விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

தமிழர் கண்ட கல்விக் கொள்கைகளின் களஞ்சியமாகிய இந்நூல், மாணவர்க்கேயன்றி மற்றவர்க்கும் பயனளிப்பது உறுதி. அதாவது, இந்நூல் கையிலிருப்பின் சீரிய வாழ்க்கைக்கு உதவுவது அல்லாமல், சொற்பொழிவு ஆற்றுவதற்கும், கட்டுரை வரைவதற்கும், ஆராய்ச்சி நூல் வெளியிடுவதற்கும் பெருந்துணை புரியும். இந்த ஒரு நூலைக்கொண்டு பல்வகைத் தமிழ் நூற்களை எளிய முயற்சியில் ஒரு சேரச் சந்திக்க முடியுமல்லவா?

இப்படி ஒரு நூல் எழுதும் நேரத்தில் மூன்று நெடுங்கதை (நாவல்) நூற்கள் எழுதிவிடலாம். கதை எழுதுவதற்காகப் பல நூற்களைப் புரட்டிக்கொண்டு காலத்தையும் முயற்சியையும் வீணாக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை அல்லவா? இந்த அருமை உணரப்பட்டு, வெறுங்கதை படிக்கும் உலகத்தில் இந்நூலுக்கும் ஆதரவு கிடைக்க வேண்டும்.

அச்சுக்குக் கொடுப்பதற்கேற்ற அழகான முறையில் இந்நூலை விரைந்து பெயர்த்தெழுதித் தந்து பல் வகையிலும் எனக்கு உதவி புரிந்த புதுவை ஆசிரியர்களும்—என் மாணவ நண்பர்களுமான திரு. தே. முத்துக்குமாரசாமி, திரு. அ. எத்திராசு ஆகியோரை நான் என்றும் மறவேன்.

புதுச்சேரி<br>1964 } சுந்தர சண்முகன்

# பதிப்புரை

கல்வி மக்கள் நல்வாழ்விற்கு உறுதுணையாவது. புறக்கண்ணுக்குப் பொருளைப் புலப்படுத்தி அகத்தை மலரச் செய்வதும் கல்வியே. கண்ணளிக்கும் கல்வியைப் பற்றித் தமிழர் நுட்பமான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். நல்லவற்றைத் தாமும் கற்று பிறர்க்கும் எளிதில் கற்றுத்தரும் இனம் தமிழ் இனம். தமிழினத்தின் கல்விக் கொள்கைகள் பற்றி எடுத்துரைக்கும் நன்னூல் இந்நூல்.

கல்வியின் அவசியம், பயன், கல்விமுறை, கல்விச் சிறப்பு முதலியவை பற்றித் தமிழிலக்கியத்தல் காணப்படும் கருத்தோட்டத்தின் விளக்கமே இந்நூல். நுண்ணிய நூலறிவும், நிரம்பிய பட்டறிவும் வாய்க்கப் பெற்ற ஆசிரியர் சுந்தர சண்முகனார் திட்பமுடன் இந்நூலை ஆக்கியுள்ளார். விளக்கமாக ஆனால் அதே வேளையில் தேவையான செய்திகள் அனைத்தையும் திரட்டித் தந்துள்ளார். ஆசிரியர்களுக்குப் பல்லாண்டுகளாக ஆசிரியப் பயிற்சி தரும் சுந்தர சண்முகனார் நுட்பமான கல்விக் கூறுகளை மிக அழகாகக் காட்டுகிறார். உலகியல் உதாரணம் காட்டிச் செய்திகளை விளக்குவது கருத்தை எளிதில் புலனாக்குகின்றது. ஆராய்ச்சிக் கதிர், அனுபவக் கதிர், சிந்தனைக் கதிர் நூல்முழுதும் ஒளி வீசக் காண்கிறோம். திருவள்ளுவர் முதல் பாரதி வரை ஏன் இன்றுவரை தமிழிலக்கியத்தில் காணப்படும் கல்வி இயல்புகளைத் தெளிவுற ஆய்ந்து வகைப்படுத்தியுள்ளார். முப்பதுக்கு மேற்பட்ட நல்ல நூல்களை யாத்துள்ள சண்முகனார் எங்கள் வாயிலாக இந்நூலை வெளியிடுதற்கு மகிழ்ச்சி அடைகிறோம். தமிழில் புதுவகை நூல்களைத் தேடியுதவும் திரு. ச. மெய்யப்பன் அவர்கள் இந்நூலை வெளியிடப் பெருந்துணையாய் இருந்தார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி.

மணிவாசகர் நூலகத்தார்

## காணிக்கை

எங்களுக்குக் கல்விக்கண் அளித்த எங்கள் அருமைத் தாயார் பழ. ச. மீனாட்சி ஆச்சி அவர்கள் நினைவு வெளியீடு.

ச. மெய்யப்பன்,
ச. பெருமாள்,
ச. முத்துப்பழனியப்பன்.

# பொருளடக்கம்


I. தோற்றுவாய்

II. முதற் பகுதி :

1. பிள்ளைகளின் விளக்கு
2. கேடில் விழுச் செல்வம்
3. அறுவகைப் பயன்கள்
4. சென்றவிடமெல்லாம் சிறப்பு
5. தாய் மனமும் மாறும்
6. வேற்றுமை யில்லை
7. பெற்றோர் கடமை
8. எப்போதும் கற்க !
9. எல்லோரும் கற்க !
10. இருள் நீக்கும் விளக்கு

III. இரண்டாம் பகுதி

1. கல்வியின் விளக்கு
2. உணர்ச்சி விளக்கம்
3. கற்பவர் வகை
4. திருத்தும் முறை
5. ஆசிரியர்கள் கடமை
6. கற்கும் முறை
7. கல்விக் குழந்தை
8. உணர்ந்தால்தான் உண்மை விளங்கும்
9. ஒன்று கற்றாலும் உணர்ச்சி வேண்டும்
10. கல்வியின் அளவு கருவிகள்

IV. முடிப்புரை

V. பிற்சேர்க்கை

தமிழர் கண்ட கல்வி.


# தோற்றுவாய்

" குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளா தவர் "

பெருவாழ்வு :—

பிள்ளையுள்ள வாழ்வேபெருவாழ்வு. அவ்வாழ்விலேயே எழுச்சி காணப்படும். சுறுசுறுப்புத் தோன்றும். செம்மாந்திருக்கும் சீரிய நிலை வேரூன்றும். அவ்வாழ்வு வாய்க்கப் பெற்றவர்களே சில நேரத்திலாயினும் மகிழ்ச்சியாம் தேனருந்தித் தம்மைமறந்து களித்தல் கூடும். அன்னார்க்கே, வாழ்க்கையில் சிறந்த பேறு பெற்றதானதோர் அமைதியும் ஆறுதலும் உண்டாகும். அவ்வாய்ப்பு இல்லையாயின், வேறு எப்பொருள் இருந்துதான் என்ன பயன் ?

வாழ்க்கை வளம் :—

தம் பேராற்றலால் பொருள் பலவற்றைத் தேடிப் படைக்கும் திறமை யுடையவராயினும் சரியே ; பலரோடு உண்ணும் பண்புடைய பெரும்செல்வராயினும்சரியே; உலக முழுமையும் ஒரு குடைக்கீழ் வைத்தாளும் முடியுடைவேந்தராயினும் சரியே ; பிள்ளையொன்று இல்லாமற் போனால் இவ்வுடைமைகள் எல்லாம் பெருமை இழக்கின்றன, எவ்விதமோ எனில் இவ்வுடைமைகள் பெற்றோர் முன் குழந்தையைப்போல் கொஞ்சிக் கொஞ்சிக் குலாவிக் குலாவி உள்

ளத்தைக் குளிரச் செய்யுமா? குழலினும் இனிய, யாழினும் இனிய மழலை மொழிபேசி மகிழ்விக்குமா? தத்தித் தத்தித் தவழ்ந்து தவழ்ந்து தாய்தந்தையரை இன்புறுத்துமா? குந்திக் குந்திக் குறுநடை நடந்து குளிர்ச்சி யுண்டாக்குமா? கையால் அடித்தும் காலால் உதைத்தும் களிக்கச்செய்யுமா? உண்ணும் உணவில் கையை இட்டும் தொட்டும், துழாவிக் கவ்வியும் தம்மேலும் தம் தாய் தந்தையர் மேலும் பூசிப் பூசிப் பூரிப்பு உண்டாக்குமா? பெற்றோர் இறந்த பின்னும் பெயரை விளக்கிப் பெருமை யளிக்குமா? இத்தகைய ஆற்றல்கள், பெற்றபிள்ளைக்குத்தவிர வேறு எவ்வித உடைமைகட்கும் எள்ளளவும் இல்லை என்பதை எவரேனும் மறுக்கமுடியுமோ?

இவ்வளவு கூறுவானேன்? சில நேரத்தில் துன்பக்கடலில் தோய்ந்து வருந்தும் தாய் தந்தையரை அவர் தம்பிள்ளை தன் எச்சில் ஊறும் இனிய பேச்சாலும் பொலிவு மிக்க பார்வையாலும், குறு நடையாலும் குறும்புச் செயலாலும் மகிழ்வித்துக் கவலைக் கடலின் கரை கடந்து, களிப்புக் கடலில் திளைக்கச் செய்வதைக் குடும்பங்களில் நாம் கண்டு வருகின்றோம் அல்லவா? எனவே, இப்பிள்ளைப்பேறு பெற்றோர் வாழ்க்கையே, சுவையுடையதும் உயிர்ப்புடையதுமான உயர்ந்த வாழ்க்கையாகும், என்பது உறுதியாகும். வாழ்க்கைவளம் என்று சிறப்பிக்கப் பெறுவதும் இதுவே. இக்கருத்துக்களைப் பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் அரசன் பாடிய,

**படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்**
**உடைப் பெருஞ் செல்வ ராயினு மிடைப்படைக்**
**குறு குறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியுந் துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்**



**மயக்குறு மக்களை யில்லோர்க்குப்**
**பயக்குறை இல்லைத்தம் வாழு நாளே**

என்னும் புறநானூற்றுப் பொற்பாடலானும்,

**மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு**

என்பது முதலிய திருக்குறள்களானும் நன்கு தெளியலாம்.

## தம்பொருள்

மேலும் நந்திருவள்ளுவப்பெருந்தகையார், இந்நிலையை விளக்குவதில் மிகமிக முன்னேறிச் சென்றுள்ளார். "இல்லறத்தார்கள் பேறவேண்டிய நற் பேறுகட்குள் சிறந்த பேறு பிள்ளைப்பேறே; அதனினும் சிறந்தபேறு வேறொன்று இருப்பதாக எனக்கு எள்ளளவும் தோன்றவில்லை" என்னும் கருத்தில்,

**பெறுமவற்றுள் யாம் அறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட்பே(று) அல்ல பிற**

என்று பிள்ளைப்பேற்றின் பெருமையைப் பேசிப் பெருமூச்சு விட்டுள்ளார். இக்குறளைக் கூறியும் அவர் தம்மனம் அமைதியும் நிறைவும் அடையவில்லை போலும்! மேலும் 'ஏனைய பொருள்கள் எல்லாம் பொருள்கள் ஆகா; தம் மக்களே தம்பொருள் ஆவார்கள்' என்னும் கருத்தில் "தம் பொருள் என்பதம் மக்கள்" என்றும் வற்புறுத்திப்போந்தார். இப் பிள்ளைப்பேற்றின் பெருமைதான் என்னே!

## விளக்கம் வேண்டும்

ஆனால், ஈண்டுக் கூர்ந்து நோக்க வேண்டுவனவாகச் சிறந்த செய்திகள் சிலவுள. பிள்ளைகள் தம் இளமைப்பருவத்தில்தான் இங்ஙனம் பெற்றோரை இன்புறச் செய்யலாம்.

ஓரளவு வயது மிக்குப் பெரியவர்களாகிவிட்ட பின்பும் இவ்வித நிகழ்ச்சிகட்கு இடமிருக்குமா? வயது முதிர்ந்த ஒருவன் கொஞ்சிக் குலாவிக் குதலைமொழி பேசினால் அது அவ்வளவு சிறக்குமா? குந்திக் குந்திக் குறுநடை நடந்து காட்டினால் கண்டோர் நகைக்கமாட்டார்களா? பெற்றோரைக் கையால் அடித்தும் காலால் உதைத்தும் களிக்கச்செய்வேன் என்றால் வாளா விடுவார்களா? உண்ணும் உணவைத் தொட்டுத் துழாவித் தன்மேலும் தாய்தந்தையர் மேலும் பூசினால் அது அறிவுடைய செயலாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுமா? இச்செயல்கள் யாவும் சிறந்து தோன்றுவோ! எனவே இளமை கடந்த ஒருவன் இவ்விதம்நடந்து கொள்வனேயாயின், அவனைப் பித்தன் என்றும், பேதையென்றும், குணமிலி என்றும், கொடியோன் என்றும்குறை கூறி உலகம் எள்ளி இகழுமன்றோ? ஆகவே, நம் பிற்கால வாழ்க்கையிலும் பெற்றோரை மகிழ்விக்க வேண்டுமாயின் அதற்கெனச் சில விளக்கங்கள் பிள்ளைகட்குத் தேவை என்பது பெறப்படும். அப்பொழுதுதான் "தம்பொருள் என்ப தம் மக்கள்" என்னும் குறளும் பொருந்துவதாகும். ஒரு வித விளக்கமுமின்றிப் பேருக்கு மட்டும் பிள்ளையென்றிருந்து, பெற்றோருக்குப் பெருமையொன்றும் அளிக்காது, சிறுமையினையே மேலும் மேலும் மிகுவித்துக் கொண்டு செல்லும் பிள்ளைகளைக் குறித்து இக்குறள் எழவில்லை.

## அறிவறிதல்

மேலும், "பெறுமவற்றுள் யாமறிவதில்லை" என்று கூறிய திருவள்ளுவர், வாளா "மக்கட்பேறு அல்ல பிற" என்றுமட்டும் கூறிச் சென்றுவிட வில்லை; "அறிவறிந்த மக்கட் பேறு" என்று அழுத்தந் திருத்தமாகவே சொல்லிப் போந்துளார். இதனை ஊன்றி நோக்கி உண்மை உணர வேண்டும். ஆகவே



அங்ஙனம் அறிவறிதல் முதலிய விளக்கங்களைப் பிள்ளைகட்கு அளிக்கும் விளக்கு எது என்று நோக்க வேண்டும்.

இந்நூலில், பிள்ளைகளை (மக்களை) விளக்கும் 'விளக்கு இன்னது என்பது முதல் பகுதியில் ஆராயப்படும். பின், அவ்விளக்கினை விளக்கும் மற்றொரு விளக்கும் உண்டு என்பது இரண்டாம் பகுதியில் ஆராயப்படும். இனி, முறையே அவ்விரண்டு விளக்குகளைப் பற்றியும் ஆராய்ந்து செல்லலாம். மற்றும் இவ்வாராய்ச்சி, தமிழர் கண்ட கல்விக் கொள்கைகளை ஆராய்ந்ததாகவும் ஆகும்.

— O —

### முதற்பகுதி

# பிள்ளைகளின் விளக்கு

பிள்ளைகட்கு இன்றியமையாததாக இருக்கவேண்டிய விளக்கு எது என்று சிறு பிள்ளைகளைக் கேட்டால், அவர்கள் தத்தம் அறிவிற்கு எட்டியவாறு பல விளக்குகளைக் குறிப்பிடுவார்கள். ஒரு பிள்ளை, கைப்பிடி எண்ணெய் விளக்கைக் (Hurricane Light) குறிப்பிடலாம். இன்னொரு பிள்ளை கைம்மின் விளக்கைக் (Battery light) குறிப்பிடலாம். இன்னும் சிறிது அறிவு வாய்க்கப்பெற்ற பிள்ளை அழகு செய்யும் ஆடை அணிகலன்களைப் பிள்ளைகட்கு விளக்காகவும் கூறலாம். ஆனால் இவையெல்லாம் உண்மையான விளக்காகுமா? எண்ணெய் விளக்கும் மின்னொளி விளக்கும் இரவில் மட்டும், இருளை மட்டும் அன்றோ போக்கும்? மற்றும் இவ்விளக்குக்கள் திடீரென நின்று விட்டாலும் நின்று விடலாம். ஆடை அணிகலன்களும் வெளியழகை மட்டுமே தருவனவாகும். ஆதலின் பிள்ளைகட்கு இருக்கவேண்டிய ஏனைய விளக்கங்களைத் தரும் ஆற்றல் இவைகட்குச் சிறிதுமில்லை என்பது தெள்ளிதின் விளங்கும். எனவே, பிள்ளைகட்கு எல்லா விளக்கங்களையும் கொடுக்கும் இணையிலா விளக்கொன்று உள்ளதென்பது நன்கு புலப்படும். அப் பிள்ளைவிளக்குத்தான் யாது என்பதைப் பின்வரும் சிறுகதை ஒன்றன் வாயிலாக நன்குணரலாம்.



### சிறுகதை

ஒரு செந்தமிழ்க் கழகம். அன்றைய ஆண்டு விழாச் சொற்பொழிவைக் கேட்பதற்குப் பொதுமக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். முன்னணியில் ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான். அவன் அழகும் நாகரிகமும் உடையவனாகக் காணப்பட்டான். நன்றாகத் தலையழகு செய்திருந்தான். முகத்திற்கு ஒருவித மெழுகும் (Snow) போட்டிருந்தான். பட்டு வேட்டியும் சட்டையும் பட்டு விசிறிமடியும் அவன் உடம்பை மறைத்திருந்தன. அவற்றில் நறுமண நீரும் (Scent) தெளித்திருந்தான். கைவிரல்களில் கணையாழிகள் சுடர்விட்டுக் கொண்டிருந்தன. இடக்கை மணிக்கட்டில் கடிகையாரம் ஒன்று காணப்பட்டது. வலக் கையில் மின்விளக்கொன்று (Battery light) இருந்தது. விலையுயர்ந்த எழுதுகருவி (Pen) ஒன்று சட்டைப்பையை அழகு செய்தது. அவன் நடையுடையில் தன்னைக் கல்வியறிவில் சிறந்தவனாகவும் காட்டிக் கொண்டான். ஊக்கமுடையவன்போல் சொற்பொழிவு செய்யும் தலைவரை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அப்போது தலைவர், அருட்பாவிலுள்ள "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த குளிர்தருவே" என்னும் பாடலைத் தம் சொற்பொழிவில் எடுத்துக்காட்ட விரும்பினார். அதனோடு இடையில் சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் எனவும் எண்ணினார். அப்போது முன்னணியில் அமர்ந்திருக்கும் நாகரிக இளைஞன் அவர் கண்ணுக்குத் தென்பட்டான். அவனை அருகில் அழைத்தார். அவன் கையில் அருட்பாவைத் தந்து அப்பாடலைப் படித்துக் காட்டும்படிக் கூறினார். திகைத்தான் அவன். உண்மையில் அவனுக்கு எழுத்தின் நாற்றமே தெரியாது. பெற்றோர்க்கு அடங்காமலும், பள்ளிச்கூடம் போகாமலும், வீண்காலம் போக்கு

பவன். பெற்றோர்களை வருத்திப் பொருள்வாங்கித் தன்னை அழகுபடுத்திக் கொள்பவன். அவ்வியல்புடையன் அங்கு வந்தது சொற்பொழிவிற்காகவா? அல்ல. அடுத்து நடக்க விருக்கும் நாட்டியத்திற்காகவே வந்திருந்தான். முன்னணி யில் அமர்ந்திருந்ததும் அதற்காகவே. அவனு அருட்பா படிப்பவன். அப்பெருங் கூட்டத்தில் தனக்குப் படிக்கத் தெரியாதென்று உண்மையாகக்கூற வெட்கப்பட்டான். வாய் மெதுவாகவும் அரைகுறையாகவுமே கூறியது. இருப் பினும் அவன் கண்ணும் முகமும் உண்மையை ஒளிக்காமல் எடுத்துக் காட்டின. அவன் நிலையை நோக்கித் தலைவர் வருந்தினர். அவனை வெட்கப்பட வைத்ததற்குத் தாம் வெட்கப்பட்டார். அச்சமயத்தில், பின்னேயிருந்து உயர்ந்த எடுப்பில் ஒருகுரல் எழுந்தது. தலைவர் மருண்டு திரும்பினர். ஓர் இளைஞன். தனக்கு விசிறிக் கொண்டிருப்பவன்; ஒரே ஒரு துணியைமட்டும் உடுத்திக் கொண்டிருந்தான். மிகவும் எளியவனுகக் காணப்பட்டான். அவன் விசிறுவதை நிறுத் தினன். தலைவர் கூறுமலேயும் அருட்பாவைப் பாராம லேயும் பாடத் தொடங்கிவிட்டான். "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த குளிர்தருவே" எனத்தொடங்கி இனிய இசை பொழிந்தான். படிக்கத் தெரியும் என்பதோடு இசைப் பயிற்சியும் உண்டு என்பதை இனிது விளக்கினன். அனைவரும் கேட்டு மகிழ்ந்து பாராட் டினர்கள். உடனே தலைவர், விசிறுவதை நிறுத்தச் செய் தார். அவனுக்குப் பால் தரும்படிச் செய்வித்தார். அருகில் அமரவைத்தார். இந்த ஆரவாரத்திற்கிடையில் மெதுவாக நாகரிக இளைஞன் நழுவி விட்டான். சொற்பொழிவும் முறையே முடிந்தது. பின் தலைவர் அவ்வேழைச் சிறுவனைத் தம்முடன் அழைத்துக் கொண்டு சென்று மேலும் விளக்கத் திற்குக் கொண்டு வரலானர்.



## ஞாயிறும் மின்மினியும்

இக்கதை நமக்கு உணர்த்துவது என்ன? ஏழைச் சிறுவன் அக்கூட்டத்தில் ஒளியுடன் காணப்பட்டான். ஆரவார இளைஞனே ஒளிமங்கிக் காணப்பட்டான். ஏழைக்கோ மின் விளக்கும் அழகு தரும் ஆடை அணிகலன் களுமில்லை, மற்றவனுக்கே அவை இருந்தன. அப்படி யிருந்தும் ஏழைச் சிறுவனுக்கு ஒளி உண்டாக்கிய விளக்கு எது? அதுதான் கல்வி. கல்லாமை என்னும் இருள் ஆரவார இளைஞனை மங்கச் செய்தது. கல்வியாகிய கதிர வன் சுடர்விட்டெரியும் இடத்தில், ஆடை அணிகலன் என்னும் மின்மினிப் பூச்சிக்கு என்ன பெருமையுளது?

## அழகும் அணிகலமும்

ஆகவே, பிள்ளைகட்குத்தலைமயிர் அழகும், மார்பழகும், பல்லழகும் ஆடையழகும் அணியழகும் பூசிக்கொள்ளும் பூச்சழகும் அழகாகா. நூல் கற்ற கல்வியழகே அழகாகும். ஆதலின் அவர்கட்கு வேறு அணிகலங்களும் வேண்டாம். அழகுக்கு அழகு செய்யவும் வேண்டுமோ? வேண்டாவே! இக்கருத்துக்களை,

"மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்குஇயைந்த
சொல்லின் வனப்பே வனப்பு"

என்னும் சிறுபஞ்ச மூலத்தாலும்,

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு

என்னும் நாலடியாராலும்,

**கற்றோர்க்குக் கல்வி நலனே; நலனல்லால்**
**மற்றோர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற**
**முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா; யாரே**
**அழகுக்கு அழகுசெய் வார்**

என்னும் நீதிநெறி விளக்கத்தாலும் நன்குணரலாம்.

## எளிய நிலை

அன்றியும் கல்வியறிவற்ற இளைஞர் சிலர் கையில் கடிகையாரம் கட்டியிருப்பார்கள். பையில் எழுது கருவி வைத்திருப்பார்கள். மணி கேட்டால் சரியாய் நடக்கவில்லை யென்பார்கள். ஒரு கையெழுத்துப் போடச் சொன்னால் எழுதுகருவியில் மை இல்லை என்பார்கள். இன்னும் ஒரு வேடிக்கை. இளமையில் எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கும் அட்டையை மட்டும் கண்டறிந்த மாப்பிள்ளை ஒருவன் மாமியார் வீட்டுக்குப் போனானாம். அங்கு ஒரு கடிதம் வந்ததாம். அதைப் படிக்கச் சொன்னார்களாம். அவன் 'ஐயோ' என அழுதானாம். அனைவரும் துக்கச்செய்தி போலும் என்றழுது என்னவென்று கேட்டார்களாம். அதற்கவன், யான் சிறியவனாய் இருந்தபோது எழுத்துக்கள் பெரியனவாய் இருந்தனவே! இப்போது இளைத்து விட்டனவே! இதற்காகத்தான் அழுதேன். என்று கூறினானாம். அனைவரும் நகைத்து அவனை எள்ளி இகழ்ந்தார்களாம். இங்ஙனம் நம் நாட்டில் வழங்குவது உண்டு. இன்னோரின் எளிய நிலைக்கு நாம் இரங்க வேண்டியவராய் உள்ளோம்.

## கண்ணும் புண்ணும்

மற்றும் மனிதர்க்குக் கண்ணும் ஒரு விளக்குத்தான். ஆனால், அக்கண் விளக்கால் எல்லாவற்றையும் உணர



முடியாது. கல்லாதவரிடம் ஒரு நூலைக் கொடுத்தால், அவர் கண்கள் அந்நூற் கருத்துக்களைச் சிறிதும் உணரா. அப்போது அவர்கள் குருடராய்விடுகின்றனர்கள். எனவே கல்விதான் சிறந்த கண்ணாகத் தெரிகின்றது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்," "எண்ணெழுத் திகழேல்" என்பன ஔவை வாக்கு அல்லவா? ஆதலின் கற்றவர்களையே கண்ணுடையவராகக் கருத வேண்டும். கல்லாதவரைக் குருடராகவும் அவர் கண்களைப் புண்களாகவும் கருதவேண்டும்.

**"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு"**
**"கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்"**

என வள்ளுவம் கூறியுள்ளதும் இது நோக்கியே. ஈண்டு,

**"கற்றறிவாளர் கருத்திலோர் கண்ணுண்டு"**

என்னும் திருமந்திரப் பாடலையும் நோக்குக.

## குறள்களின் முழக்கம்

எனவே கல்வியழகு ஒன்றுதான் வேண்டும். ஏனைய அழகுகள் சிறிதும் வேண்டாம் என்பது பொருளன்று. ஏனைய அழகுகள் மட்டும் இருந்தால் போதா. அவற்றோடு கல்வியழகும் இருந்தால்தான் பொன்மலர் கூட மணமும் உடைத்தானவாறு போலாகும், என்பதே இங்குக் குறிப்பிடும் கருத்தாகும். மணமில்லா மலருக்கு மதிப்பென்ன உளது. பார்வைக்கு அழகாகக் காணப்பட்டாலும் அதனை ஒருவரும் விரும்பி ஏற்கமாட்டார்கள். அதுபோன்றே கல்லாதோர் அறிவுடையவர்போல் நடித்தாலும் அவர்களைக் கற்றவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கல்லாதவருடைய பொய்யான ஆரவாரங்கள் எல்லாம் கற்றவரோடு

சற்று நேரம் உரையாடிப் பார்த்ததுமே பறந்தோடிவிடும். மண்ணுக்குச் சுமையாக அவர்களும் உள்ளார்கள் என்ற அளவே தவிர, களர்நிலம் போல அவர்களால் பயனொன்றுமில்லை. அவர்களின் அழகிய உருவம் மண்ணால் செய்யப்பட்ட பொம்மைக்கே ஒப்பாகும். ஆனால் அவர்களை எலும்பு, தோலால் செய்யப்பட்ட பொம்மைகள் என்றே எளிதாகக் கூறி விடலாம். இவையெல்லாம் புனைந்துரையல்ல. இவர்களை நோக்கி,

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்.
கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.
உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்.
நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று

என்றெல்லாம் குறள்கள் முழங்குகின்றன.

## பருவத் தொடர்பு

இங்கு ஒரு கேள்விக்கு இடமுண்டு. கல்வி, பெரியவர்களையுந்தானே விளக்குகின்றது. பிள்ளைகளை மட்டும் விளக்கும் விளக்காகக் கூறுவது பொருந்துமா? என்பது அக்கேள்வி. அது உண்மையே. ஒத்துக்கொள்ள வேண்டியதுந்தான். கல்வி வேரூன்றிப் பதிதற்குரிய சிறப்புப் பருவம் இளமையேயாதலின் அங்ஙனம் கூறப்பட்டது. இளமைப் பருவம் கடந்துவிட்டால் மனிதர்கள் வாழ்க்கையில் எவ்வளவோ போராட்டங்களை எதிர்க்க வேண்டியவர்களாய் உள்ளார்கள். அச்சமயம் கல்வியில் கருத்துச் செல்லாது. அன்றியும் இளமைப் பழக்கமே முதுமையிலும்



முன்னிற்கும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' அல்லவா? 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்றபடி சில பயிர்கள் ஆடி மாதத்தில் விதைக்கப்பட்டு வேரூன்றினால்தான் அடுத்த மாதங்களிலும் ஓங்கி வளரும். அதுபோன்றே, கல்விப் பயிரும் எதையும் ஆற்றக்கூடிய இளமைப் பருவத்திலேயே கற்கப்பட்டு வேரூன்றினால்தான் மேலும் மேலும் வளர்ச்சியெய்திப் பயனளிக்கும். இளமையிலேயே கற்க முடியாதவனால் முதுமையில் கற்க முடியும் எனக் கூறுவது முயற்கொம்பே. இருபது வயதிற்குமேல் ஒரு புதிய கலையைக் கற்கத் தொடங்கி அதில் தேர்ச்சி பெறுவதென்பது மிகவும் கடினம் என்று இக்காலக் கல்வி உளநூலாரும் (Educational Psychologist) கூறுகின்றனர். 'ஐந்தில் வளையாதது, ஐம்பதிலும் வளையுமோ?' முன்றுறையரையனார் என்னும் புலவர் பழமொழி என்னும் நூலில், இக்கருத்தை இரண்டு எடுத்துக்காட்டுக்களுடன் அழகாக வலியுறுத்திச் சென்றுள்ளார்.

## இரண்டு எடுத்துக் காட்டுக்கள்

வழியில் செல்லும் வண்டிக்கு வரி (சுங்கவரி) வாங்குபவர் குறிப்பிட்ட இடத்தைக் கடந்த பிறகு (தோல்கேட்) வாங்குவது அரிது. தோணிக்காரனும் மக்களை ஆற்றைக் கடத்தி அக்கரைக்குக் கொண்டு போய் விட்டபின்பு கூலி வாங்குவதென்பது அவ்வளவு எளிதன்று. இவ்விரண்டும் முடியாமற் போனாலும்போகும். ஆதலின் வாங்க வேண்டிய இடத்திலேயே வாங்கிவிட வேண்டும். அது போலவே கல்வியினையும் நீண்ட நாளைக்கு நிலைத்துநிற்காத இளமைப் பருவம் உள்ளபோதே கற்கவேண்டும். 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்.' அல்லவா?

ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ?—ஆற்றச்

**ரம்போக்கி உக்குகோண்டார் இல்லையே; இல்லை**
**மரம்போக்கிக் கூலிகொண் டார்**

என்பது அப்பழமொழிப் பாட்டாகும். இங்கு இளமையை ஆற்றும் இளமை என்று கூறியிருப்பது மிகவும் நயமாக உளது.

## வெறும் பெட்டி

மற்றும் ஒரு பொருளை வைக்கவேண்டுமென்றால் வெறும் (காலிப்) பெட்டியில் வைப்பதுதான் எளிது. ஏற்கெனவே பல பொருள்களால் அடைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் திணிப்பதென்றால், அது மிகவும் அரிதாகும். இளமைப் பருவம் வெறும் பெட்டி போன்றது. கள்ளமற்றது. கவலையில்லாதது. முதுமையோ அதற்கு எதிர் மாறானது. தன்னலம் பற்றிக் கள்ளம் உள்ளது, கவலையும் நிரம்பியது. ஆதலின் கல்வியென்னும் இளமையென்னும் வெறும் பெட்டியிலேயே இனிது இடம் பெறற்குரியதாகும். அன்றியும் அழுக்கில்லாத வெள்ளைத் துணியில்தானே வேறு நிறங்களும் நன்றாகப் பிடிக்கும். எனவே, கற்றற்குரிய சிறப்புப் பருவமாகிய இளமைப் பருவத்தின் தொடர்பு நோக்கிக் கல்வியைப் பிள்ளைகளின் விளக்காக உரிமைப் படுத்திக் கூறுவதில் தப்பொன்றும் இல்லையென உணரலாம். உண்மையில் இளைஞர்கள் தம் இளமைப் பருவத்தில் செய்யவேண்டிய வேலையும் அதுதான் அல்லவா? "இளமையிற் கல்" என்பது ஒளவை வாக்கன்றோ!

— o —

# கேடில் விழுச்செல்வம்

## அழியா நிலை

உலகில் பிள்ளைகளை அழகுபடுத்தும் ஆடையணி முதலிய பொருள்கள் பலவிருக்கக் கல்வியை மட்டுமே அழகு செய்யும் விளக்காகச் சிறப்பித்துக் கூறுவானேன்? அதற்குக் காரணங்கள் பலவுண்டு. அவற்றை ஒவ்வொன்றாக உற்று நோக்கிச் செல்வோம். அவற்றுள் சிறந்ததொரு காரணம் அழியா நிலை உடையதாகும். ஏனைய செல்வங்கள் நிலை யுடையன அல்ல. அவை வெள்ளத்தால் அழியும்; வெந் தணலால் (நெருப்பால்) வேகும். கள்வரால் கவரப்படும். மாறுபட்ட பங்காளிகளாலும் பகைவராலும் பற்றப்படும்; கொடுங்கோல் அரசரால் கொள்ளப்படும். கொடுக்கக் கொடுக்கக் குறையும். ஆனால், கல்வியோ எவற்றாலும் அழியாது; எவராலும் கொள்ளப்படாது. கொடுக்கக் கொடுக்க வளர்ந்துகொண்டே போகும். நாம் உலகில் மிகப் பெரும் செல்வர் பலர் ஏழைகளாவதையும், கற்றோர் மேலும் மேலும் பெரும் புலவராயும் ஆராய்ச்சியாளராயும் ஆவதையும் கண் கூடாகக் கண்டு வருகின்றோம். இப் பெருமையறிந்து கல்விப் பொருளைச் சிறிதும் தேடாது ஏனைய பொருள்களையே தேடியுழலும் பேதைகளின் பிற்போக்கை என்னென்று பேசுவது? செல்வது செல்வம். கல்வி (மேலும் மேலும் தோண்டி) எடுக்கப்படுவது கல்வி.

இப்பெயர்ப் பொருத்தங்களே இதனை வலியுறுத்துகின்றன. இக்கருத்துக்களை

"வெள்ளத்தால் அழியாது; வெந்தணலால்
வேகாது; வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது; கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவு றாது;
கள்ளர்க்கோ பயமில்லை; காவலுக்கு
மிகஎளிது; கல்வி யென்னும்
உள்ளபொருள் உள்ளிருக்கப் புறத்தேயோர்
பொருள்தேடி உழல்கின் றீரே"

என்னும் தனிப்பாடல் திரட்டானும்,

"கொள்ளுநர் கொள்ளக் குறையாது ஆதலின்
நிறைஉளம் நீங்காது உறைஅருள் ஆகியும்"

என்னும் கல்லாடத்தானும்,

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயின் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர்செறின் வவ்வார்

என்னும் நாலடியாரானும் நன்கு உணரப் பெறலாம். ஆதலின் அழியும் (ஆடையணி முதலிய) ஏனைய செல்வங்களைக் காட்டிலும் அழியா அழகுடைய கல்வியன்றோ சிறந்த விளக்காகும்? 'ஒருவனுக்குக் கெடுதல் இல்லாத உயர்ந்த செல்வம் கல்வியென்றே — மற்றவையல்ல' என்னும் கருத்தில் வள்ளுவர் மொழிந்துள்ள

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்னும் குறள் ஈண்டு ஒப்பு நோக்கற் பாற்று.

— o —

# அறுவகைப் பயன்

மற்றும் ஆடையணி முதலிய ஆரவாரங்கள் வெளியழகு ஒன்றையே கொடுக்கும். இவ்வுலக இன்பம் ஒன்றுக்கே உதவும். கல்வியோ மக்கள், இவ்வுலக வாழ்க்கையில் அடைய வேண்டிய பயன்கள் பலவற்றையும் கொடுக்கும். இறந்த பின்னும் கொடுக்கும். மறுபிறவியிலும் கொடுக்கும். மறு உலகத்திலும் கொடுக்கும். குமரகுருபரர் அப்பயன்கள் அனைத்தையும் தொகுத்து அறுவகைப்படுத்தி 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலில் நயம்பட நவின்றுள்ளார். அவ்வறுவகையாவன :—

1. தீயன நீக்கி நல்லன செய்யவேண்டும் என்ற அறவுணர்ச்சி தோன்றல்.
2. பொருள்கள் பலவும் கைகூடும்.
3. இன்பம் பெறலாம்.
4. வீடு (மோட்சம்) கிடைக்கும்.
5. இறந்த பின்னும் நல்லிசை (புகழ்) நிலைபெறும்.
6. கவலை உற்றுழிக் கைகொடுத்துக் காக்கும்.

இவ்வாறினையும் அவர் பாடிய

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினூஉங் கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை

என்னும் செய்யுளால் உணரலாம். உயிர்க்கு உற்ற துணையாகக் கல்வியைக் குறிப்பிட்டிருப்பதும் இப்பல்வகைப் பயன் நோக்கியேயாம். இனி, மேற்கூறப்பட்ட அறுவகைப் பயன்களைப் பற்றியும் ஆராய்ந்து செல்வோம்.

## 1. அறவுணர்ச்சி தோன்றல்

முதலாவது, அறவுணர்ச்சி தோன்றல்; அறம், அறம் என்பது தருமத்திற்கு மட்டும் பெயரன்று. தீய செயல்களை நீக்குதற்கும் நல்ல செயல்களைச் செய்வதற்கும்கூட அறமென்றே பெயர். பெரும்பாலும் கல்வியறிவுள்ளவர்களே. நல்லன இவை, தீயன இவை என்று பகுத்தறிவார்கள். அங்ஙனமறிந்து நல்லனவற்றையே செய்வார்கள். தப்பித் தவறித் தீயன செய்துவிட்டாலும், 'ஐயோ! நீதி நூலில் இது செய்யக்கூடாதெனக் கூறப்பட்டுள்ளதே; நாம் செய்துவிட்டோமே; என்ன தீங்கு வருமோ?' என்றஞ்சிப் பின் அதனைத் திருத்திக் கொள்ளவும் முற்படுவார்கள். மேலும் படித்தறிந்த நாமே இப்படித் தீயன செய்தால், பிறர் நம்மை நோக்கிப் 'படித்தவரே இங்ஙனம் நடக்கலாமா?' என்று ஏளனம் செய்வார்களே என்றஞ்சுவார்கள்.

### கல்விப்பாகன்

மதம் பிடித்து முறை தவறி நடக்கும் யானையைப் பாகன் அடக்குவான்; அதுபோல, மடங்கொண்டு முறை தவறி நடக்கலுறும் மக்களைக் கல்வி திருத்துமாம். இது குறித்தே பெரியோர்கள் கல்வியை யானைப்பாகனாக உருவகம் செய்துள்ளனர். இதனை மணிமேகலை என்னும் காவியத்தில் உள்ள,

"கல்விப் பாகரிற் காப்புவலை யோட்டி"



என்னும் (18:165) அடியாலும், சிலப்பதிகாரம் என்னும் காவியத்தில் உள்ள,

"இடங்கழி நெஞ்சத்து இளமை யானை
கல்விப் பாகன் கையகப் படாஅது
ஒல்கா உள்ளத் தோடு மாயினும்"

என்னும் (23: 37-9) அடிகளானும் அறியலாம். எனவே, உண்மையில் கற்றவர்கள் தீமைக்கு அஞ்சுவர் என்பது தெளிவு.

### புகழ்வதுபோலப் பழித்தல்

ஆனால் கல்வியறிவு சிறிதும் இல்லாதோர்க்கு இவ்வச்சம் சிறிதும் இராது. தீயன செய்தாலும் இவை தீயன என்று அவர் அறிவிற்கு எட்டினால்தானே அச்சம் உண்டாகும். ஆதலின் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் கற்றோரைக் காட்டிலும் அவ்வறிவின்மையால் நெஞ்சத்தில் சிறிதும் அச்சமில்லாத கயவர்கள் ஒரு விதத்தில் ஆறுதல் (திரு) உடையவர்களாவார்கள். இக்கருத்தையே,

நன்றறி வாரின் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்

என்னும் திருக்குறள் தெளிவுபடுத்துகின்றது. மேலும் அக்கயவர்கள் தம் மனம் போனவாறு தாம் விரும்பியதைச் செய்வார்கள். அவ்விதத்தில் அவர்களைச் சொந்த உரிமையுடைய தெய்வத்துக்கு (தேவர்க்கு) ஒப்பாகக் கூறி விடலாம். இக்கருத்தை,

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்

என்னும் குறளால் உணரலாம். திருவள்ளுவர் உண்மையில்

அக்கயவர்களைப் புகழவில்லை. புகழ்வதுபோலப் பழித்தே கூறியுள்ளார். ஊன்றி நோக்குவார்க்கே உண்மை புலனாகும்.

### எட்டுச் சுரைக்காய்

ஆனால், அக்கல்வியறிவில்லாக் கயவர்கள் தீயன செய்து தற்போது இன்புற்றிருந்தாலும் பின்னால் பழிக்காளாகி அல்லல் பல அடைவார்கள். ஆதலின் அங்ஙனமில்லாது கல்வியைக் கற்று அறஉணர்ச்சி உடையவர்களாக ஆகவேண்டும். ஆனால் கற்றோர் சிலரும் தீயவராய் உள்ளனரே என்று கேட்கலாம். அதற்குக் காரணம் வேறு. அதனை, இந்நூலின் இரண்டாம் பகுதியில் பரக்கக் காணலாம். எனவே, படித்தும் கெட்டவராய் நடக்கும் அவர்களைப் படித்தவர்களாய் எண்ணக்கூடாது. 'படித்த முட்டாள்' எனும்தொடர்மொழி எழுந்ததும் இவ்வெட்டுச் சுரைக்காய்களை நோக்கித்தான். இது பற்றியே "கற்றபின் நிற்க. அதற்குத்தக" என வள்ளுவப் பெருந்தகையாரும் கூறியுள்ளனர். அன்றியும் 'அறஞ்செய விரும்பு' என ஆத்திசூடியில் படித்துவிட்டால் போதுமா? செய்கையில் காட்ட வேண்டாமா?

ஆனால், அற உணர்ச்சியைச் செயலிலும் காட்டிய புலவர் பெருமக்கள் பலர் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். அவர்தம் வரலாறுகளை எடுத்து விரிக்கின் பெருகும். எனவே, நெஞ்சத்தில் நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து நாம் நல்லவராய் நடந்துகொள்ள வேண்டும் என்னும் நடுவு நிலைமையான அறவுணர்ச்சியைக் கல்விதரும் என்பதில் தடை யாதொன்றுமில்லை. "நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி யழகே யழகு" என்னும் நாலடியார்ச் செய்யுளும் இதை உணர்த்தும்.



## 2. பொருள் கைகூடும்

இரண்டாவதாகப் பொருள் கைகூடும். பொருள் என்றால், உணவு, ஊர்தி, ஆடை, அணி, வீடு, வாசல், நிலம், நீர், நட்பு, உறவு முதலிய பலவாம். இப்பொருள்களைக் கல்வியால் பெற முடியும். இக்காலத்திலும் கற்றறிந்த புலவர் பெருமக்களும் அரசியல் அலுவலாளர்களும் (உத்தியோகத்தர்கள்) கல்வியின் உதவியால் நல்லஊதியம் பெறுகின்றனர். மேற்கூறப்பட்ட பொருள்களையும் பெற்று இன்புறுகின்றனர். இது கண்கூடல்லவா? இதுபோன்றே பண்டைக் காலத்தும், கற்றறிந்த புலவர்கள் அரசர்களால் பெரிதும் ஆதரிக்கப்பட்டார்கள். வீடுவாசல், நிலநீர், யானை பசுக்கள், ஆடையணி, விருந்துணவு முதலிய பொருள்கள் பலவற்றையும் பரிசாகப் பெற்றுச் செல்வமாக வாழ்ந்தார்கள். புலவர் சிலர் முழு ஊரையே (இனாம்தார், ஜமீன்தார் போல்) பரிசாகப் பெற்று வாழ்ந்தார்கள். அதற்குப் "புலவர் முற்றூட்டு" (முற்றூட்டு=முழு அனுபவ பூமி) எனப் பெயர். இவற்றிற்குக் காரணம் கல்வியே யன்றோ? ஈண்டு, சிறுபஞ்ச மூலத்தில் உள்ள,

"பொன் பெறும் கற்றான் பொருள்பெறும் நற்கவி"

என்னும் பாடலை நோக்குக.

### மாமியும் மருகியும்

ஆனால், படித்தவரிடத்தில் பணம் இருக்காது. பணக்காரரிடத்தில் படிப்பு இருக்காது. பணம் என்றால் திருமகள்; அவள் மாமியார். படிப்பு என்றால் கலைமகள்; அவள் மருமகள்; ஆதலின் மாமியும் மருகியும் ஒற்றுமையாய் வாழ மாட்டார்கள் என்று சிலர் உண்மை அறியாது உளறுகின்றனர். இது சிறிதும் பொருந்தாது. அக்காலத்திலும் அரசர் பலர் பெரும் படிப்பாளிகளாக இருக்க

இல்லையா? அறிவுடை நம்பி, தலையாலங்கானத்துச் செருவென்றோன், அதிவீரராம பாண்டியன் முதலிய பாண்டிய மன்னர்கள் பலரும் பிற மன்னர்களும் பெரும் புலவர்களாகத் திகழ்ந்து பல பாடல்களையும் இயற்றியுள்ளார்களே! இளங்கோவடிகள் என்னும் சேரமன்னர் சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காவியம் இயற்றியுள்ளனரே! இவை வரலாற்றுக்கண் கொண்டு நோக்குவார்க்கு எளிதில் புலனாகும். தற்காலத்திலும் படிப்பாளிகள் பலர் பெரும் பணக்காரர்களாகத் திகழ்வதையும் காண்கின்றோம். முழு முழு நாடுகளையே எடுத்துக் கொள்வோமே! அமெரிக்கா போன்ற அயல் நாடுகள் செல்வத்தாலும் கல்வியாலும் செழிப்புற்று விளங்கவில்லையா? அவ்வளவு ஏன்? மாமியும் மருகியும் ஒற்றுமையின்றியிருப்பது எல்லாக் குடும்பங்களிலுமா? இல்லையே. சில குடும்பங்களில் ஒன்றியும் வாழ்கின்றனரே! ஆதலின் கல்வியாம் கலைமகளும், செல்வமாம் இலக்குமியும் ஒரே இடத்தில் இருக்க மாட்டார்கள் என்று கூறுதல் தகாது.

## இருவேறு இயற்கை

ஆனால், அவர்கள் சொல்லும் கலைமகளும் திருமகளும் சில இடங்களில் ஒன்றியும் இருக்கலாம். சில இடங்களில் பிரிந்தும் இருக்கலாம். அதற்கு அவ்விருவரின் பிணக்குக் காரணமாகாது. அவ்வம் மனிதர்கள் முன் செய்த ஊழ்வினையே காரணமென்று கூறப்படுகிறது. அதைத்தான் இக்காலத்தவர் சிலர் இயற்கையின் விளைவு என்கின்றனர். உலகத்தியற்கை இருவகைப்பட்டது. அதாவது:- செல்வம் உடையவராயிருப்பது ஒரு தனிப்பட்ட செய்தி. அதுபோல் கல்வியறிவு உடையவராய் இருப்பதும் ஒரு தனிப்பட்ட செய்தி. இருவகைப்பட்ட இக்கல்வியும் செல்வமும் வாய்ப்



பிற்குத் தக்கபடி ஒன்றியிருந்தாலும் இருக்கும்; அல்லது பிரிந்திருந்தாலும் இருக்கும். ஆதலினால் தனிப்பட்ட அனைவரிடமும் ஒன்றியேயிருக்கும் என்றோ, பிரிந்தேயிருக்கும் என்றோ அறுதியிட்டு உறுதிகூற முடியாது.

**இருவே றுலகத் தியற்கை திருவேறு**
**தெள்ளிய ராதலும் வேறு**

என்னும் இக்குறளால் இதனைத் தெளியலாம். எனவே கற்றறிந்த புலவர் சிலர் மிக்க ஏழைகளாய்ப் பாடிப் பிழைப்பதை நோக்கியும், செல்வர் சிலர் கையெழுத்தும் போடத் தெரியாத மூடர்களாய் இருப்பதை நோக்கியும் இங்ஙனம் வரையறுத்துக் கூறிவிட முடியாது.

## ஏழ்மை நிலை எது?

அங்ஙனம் கற்றவர்களின் ஏழ்மைக்குக் காரணம் இயற்கையின் விளைவே யென்றால் கல்வியால் எல்லாப் பொருளும் கிடைக்கும் என்பது எப்படிப் பொருந்தும்? என்று கேட்கலாம். இவ்விடத்தில், பிறந்ததலிருந்து இறக்கும் வரையிலும் ஒருவித இன்பமுமின்றிப் பட்டினி கிடக்கும் நிலையைக் கற்றோர்களின் ஏழ்மை நிலையாகக் குறிப்பிடவில்லை. அவர் தமக்கெனத் தனித்துச் செல்வம் உடையவராகித் தாமே தம் விருப்பம்போல் எடுத்து நுகர்வதற்கு உரிமையும் வாய்ப்பும் இல்லாத ஒரு நிலைமையே இங்கு அவர்கட்கு ஏழ்மையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வேழைப் படிப்பாளிகள், அரசர் வள்ளல் முதலானோரைப் பாடியாவது தம் கல்வியின் உதவியால் எல்லாச்செல்வமும் சிறப்பும்பெற்று விடுகின்றார்கள். பின்பு பழையபடி சில நாளைக்கு ஏழைகளாகவும் இருக்கலாம். அதற்கு அக்கல்வி காரணமன்று. செல்வத்தின் நிலையாமையே காரணமாகும். பெருஞ்செல்வர்களும் சில்லாண்டுகளில் ஏழையாய் விடுகின்றனர். அல்

லவா? ஆகவே, செல்வத்தின் நிலையாமையால் மக்கள் மாறி மாறி ஏழைகளானாலும், விரைவில் செல்வம் பெறுதற்குரிய வாய்ப்பைக் கற்றவர்களே தம் கல்வித்திறமையால் பெற முடியுமென்று உணரவேண்டும். சின்னாள் அடுப்பில் காளான் பூக்கவும் கந்தைத்துணி கட்டியும் காலங்கழித்த பெருஞ்சித்திரனார், வன்பரணர்முதலிய பழங்காலப்புலவர்கள் பலர், பின்பு அரசர்களை அடைந்து எல்லாவிதச்செல்வமும் பெற்று இன்பமாய் வாழ்ந்த வரலாறுகளே இதற்குப் போதிய சான்றாகும்.

## முயற்சி திருவினையாக்கும்

ஆனால் இங்குஇன்னொரு கேள்விக்கு இடமுண்டு. செல்வம் வரவேண்டிய ஊழ்வினை இருந்தால் தானாகவே வரும் என்று வாளா இருக்கலாமே? என்பதுதான் அது. ஆனால் அங்ஙனம் வாளா (சும்மா) இருத்தலாகாது. நம்மால் இயன்றவரை முயன்று பார்க்க வேண்டும். அம்முயற்சி பெரும்பயனைக் கொடுக்காவிடினும் ஓரளவாவதுகொடுத்தே தீரும். அன்றியும் அத் தளரா முயற்சியால் ஊழ்வினையையும் சற்று அசைத்துப் பார்க்கலாம். இவற்றையே,

> " தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சி தன்
> மெய் வருந்தக் கூலி தரும் "

> " ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழா துஞற்று பவர் "

என்னும் குறள்கள் குறிப்பிடுகின்றன. முயற்சி திருவினையாக்கும் அன்றோ?

## இனிய வறுமை

மேலும் செல்வமிருந்தாலும் கல்வியில்லாதவர்களை ஏழைகளாகவும், வறுமையிருந்தாலும் கற்றவர்களைச் செல்வராகவுமே கருத வேண்டும். ஏனெனில், கல்வியறிவில்லாச் செல்வர் சிலர் செல்வத்தைப் பல கெட்டவழிகளில் செலவிடுகின்றனர். அதனால் பழியேற்றும், விரைவில் வறுமையுற்றும் வருந்துகின்றனர். மேலும், பொருள் தேடும் திறமையின்றித் திகைக்கின்றனர். வறுமையுற்ற கற்றோரோ கெட்டவழிகளில் செல்ல வழியில்லை. பழிக்கும் இடமில்லை. மேலும், பொருள்தேடக் கல்விபயன்படுகிறது. ஆதலின் கற்றறிந்த நல்லோரின் வறுமை ஒருவிதத்தில் இன்பமுடையதாகும். கல்லாத சில தீயோரின் செல்வம் பலவிதத்திலும் துன்பம் தருவதாகும். இது புனைவன்று.



> " நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
> கல்லார்கண் பட்ட திரு "

என்னும் திருக்குறளால் இதனைத் தெளியலாம்.

## ஏழ்மைக்கு வணக்கம்

இது பற்றி ஏழ்மைக்கு வணக்கம் செய்வோருமுண்டு. ஏழைக் குடும்பத்தில் பிறந்து, பெற்றோரின் பெருமுயற்சியால் அரும்பாடுபட்டுக் கற்று முன்னுக்கு வந்த இளைஞர் சிலர் இவ்வணக்கத்தை மேற்கொண்டதைக் கண்டதுண்டு. எப்படி? கடவுள் எங்கள் குடும்பத்திற்கு ஏழ்மையைக் கொடுத்ததற்கு வணக்கம் செலுத்துகின்றேன்; என் தகப்பனார் செல்வராக இருந்திருப்பாரேயானால் அச்செல்வத்தை நம்பி, என்னை இந்த அளவு படிக்க வைத்திருக்க மாட்டார். அவர் படிக்கவைத்தாலும் நமக்குத்தான் நிறைய செல்வம் உளதே! நமக்கென்ன கவலை? என்றெண்ணி நானும் படிக்காமல் திரிந்திருப்பேன். ஏழையாயிருந்ததனால்தான் தகப்பனாரும் படிக்க வைத்தார். நானும் ஊக்கமுடன் கற்று இவ்வாய்ப்பைப் பெற்றேன் என்றெண்ணியும்கூறியும் இன்புறுகின்றார்கள். இதன் கருத்தென்ன? பயன் படாச்செல்

வத்தைக் காட்டிலும் பயன் படும் வறுமையே நல்லது என்பதேயாம்.

## உண்மைக்காரணம்

மேலும், நோக்குவோமேயானால் சிலரிடத்தில் கல்வியும் செல்வமும் ஒருங்குள்ளன. ஆனால் உலகினர் பெரும்பாலும் அவர்களைக் கற்றவராகவே கருதுகின்றனர். செல்வராகக் கருதுவதில்லை, காரணமென்ன? மின்மினிப் பூச்சியாம் செல்வத்தின் மினுமினுப்பை ஞாயிறும்(சூரியன்) கல்வியின் சுடரொளி அடக்கி விடுகின்றது. செல்வம் அவரை அவ்வூரார்மட்டும் அறியச் செய்கின்றது. கல்வியோ உலக முழுதும் அறியச் செய்கின்றது. இவ்வுண்மைக் காரணத்தை உணராதோரே கல்வியும் செல்வமும் ஓரிடத்தில் இருப்பதில்லை எனக் கதைக்கின்றனர். அவர் கூற்று தவறு என்பது தற்போது விளங்கும். எனவே, கல்வியானது தன்னைக் கற்றோருக்கு எங்ஙனமாயினும் எல்லாப் பொருள்களையும் கைகூட்டுவித்து விளக்கம் பெறுவிக்கும் என்பதில் தடையில்லை.

## ௩. இன்பம் எய்தும்

மூன்றாவதாகக் கல்வியால் இன்பம் பெறலாம். இன்பம் எனினும் உவகை எனினும் பொருள் ஒன்றே. தொல்காப்பியர் இவ்வுவகையினைச் (1)செல்வத்தால் வரும் உவகை (2) புலமையால் (கல்வியால்) வரும் உவகை (3) புணர்ச்சியால் (காமம்) வரும் உவகை (4) விளையாட்டால் வரும் உவகை என நான்கு வகையாகப் பகுத்துள்ளனர். இதனை அவரியற்றிய,

" செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே "

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம். இந்



நான்கனுள் செல்வமோ நிலையற்றது. விளையாட்டோ பெருமையின்றிச் சிறுபான்மையது. அன்றியும் ஏனைய மூன்றனுள்ளும் அடக்கப் பெறுவது ஆதலின், அவ்விரண்டால் வரும் இன்பத்தைக் காட்டிலும் புணர்ச்சியால் வரும் இன்பமும் புலமை (கல்வி) யால் வரும் இன்பமுமே சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. ஆனால் உரையாசிரியர்கள் சிலர் ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் கூடி நுகரும் சிற்றின்பத்தையே பெரும்பாலும் இன்பம் என்னும் சொல்லுக்குப் பொருளாக எழுதியுள்ளனர். அச்சிற்றினபத்தைக் கல்லாதோரும் பெறுகின்றனர். ஆதலின். இங்குக் கல்வி தரும் இன்பம் என்றது அஃதன்று. அச்சிற்றின்பத்திற்கு ஒப்பான வேறோர் இன்பம் உளது. அதுதான் நூலின்பம் (நூல்-கல்வி நூல்). அவ்வின்பமே இங்குக் குறிக்கப்படுவதாகும். பத்துவயதுச் சிறுவர்கள் சிற்றின்பச் சுவையினை சிறிதும் அறியமாட்டார்கள். அதுபோலவே கல்வியறிவில்லாதோரும் இங்குக் குறிப்பிடும் நூலின்பச் சுவையினை ஒரு சிறிதும் உணரமாட்டார்கள்.

## நோக்கும் வாக்கும்

நல்ல நூற்களைப் படிக்குந்தோறும் அவற்றின் கருத்துக்களைப் பேசுந்தோறும், கேட்குந்தோறும் ஒருவிதமான சுவைத்தேன் சொட்டும். அச்சுவையறிந்தவர்கள் நூலை விட்டுப் பிரியமாட்டார்கள். உண்ணுவதற்கழைப்பினும் செல்லாமல் படித்துக்கொண்டேயிருப்பார்கள். அவர்கட்குக் கல்விச்சுவையானது காமச்சுவைக்கு எள்ளளவும் குறைந்ததாகத் தோன்றாது; மிக்கதாகவே தோன்றும். கற்றறிந்த ஆடவன் ஒருவன் தன் மனத்திற்கு இன்பம் தரும் பொருள்கள் இரண்டு கண்டான். கண்டவற்றைக் கூறலானான். " என் மனதில் நின்ற அள்விலேயே இன்பம் நிறைக்கும் பொருள்கள் இரண்டுள்ளன. அவற்றுள் ஒன்று

என் காதலியின் காமநோக்கு ; மற்ருென்று ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் வாக்கு (அவரியற்றிய நூல்) என்று தன்னை மறந்து கூறினன். அவன் மனத்திற்குக் காதலியின் காமப் பார்வையும் ஒட்டக்கூத்தர் நூலும் ஒன்ருகவே பட்டன. இதனைத் தண்டியலங்காரம்என்னும் நூலின் உரையிலுள்ள,

"சென்று செவியளக்கும் செம்மைவாய்ச் சிந்தையுளே
நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள்--ஒன்று
மலிருவரும் கூந்தலார் மாதர் நோக்கு ஒன்று
மாரிவரும் கூத்தன் தன் வாக்கு"

என்னும் வெண்பாவால் உணரலாம். ஈண்டுச் சிறப்பாகத் தான் சுவைத்த ஒட்டக்கூத்தர் நூலை அவன் குறிப்பிட்டிருப் பினும், நாம் பொதுவாக ஏனைய புலவர்கள் இயற்றிய ஏனைய இலக்கியங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

## செந்தமிழ் நூல் நயம்

இதுபோன்ற கருத்தமைந்த செய்யுள் ஒன்று பொய்யா மொழிப் புலவரியற்றிய தஞ்சைவாணன் கோவை என்னும் நூலில் உள்ளது. காதலன் ஒருவன் கருத்தொருமித்த தன் காதலியோடு கூடியின்புற்ருன். அவ்வின்பத்தைப் பின் வருமாறு புகழத் தலைப்பட்டான். "என் காதலியோடு இன்புற இன்புற எனக்குச் சிறிதும் வெறுப்புத் தோன்ற வில்லை. ஆராயுந்தோறும் மேலும் மேலும் இன்பம் பயக் கும் செந்தமிழ் நூல்களைப்போல அவள் செங்கனி வாயும் முத்தமிடுந்தோறும் மேலும்மேலும் இனிமை தந்து அமிழ்த மாகின்றது" என்று தன் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சியை,

"தேரும்தொறும் இனிதாம் தமிழ்போன்றிவள் செங்கனிவாய்
ஆருந்தொறும் இனிதாய் அமிழ்தாம் எனதாருயிர்க்கே"

என உள்ளவாறு எடுத்துக் கூறினன். அவன் தான் பெற்ற



சிற்றின்பச் சுவையைச் சிறப்பித்தற்காக அதனினும் சிறந்த செந்தமிழ் நூலின்பத்தை உவமையாகக் கூறினன். எனவே, சிற்றின்பச் சுவையைப் போலவே செந்தமிழ் நூற்களும் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் நவிலுந் தோறும் நவிலுந்தோறும் நயம்பயக்கும் என நாம் உணர வேண்டும். "நவில்தொறும் நூல்நயம்போலும்" என்பது குறளன்ருே?

## தோழன் கேள்வி

முற்றுந் துறந்த முனிவராய மாணிக்கவாசகனர் இயற்றிய திருச்சிற்றம்பலக் கோவையிலும் இதுபோன்ற தொரு செய்யுள் உள்ளது. ஓர் இளைஞன், புதிதாக ஒருத்தியைக் காதலித்தான். சிற்றின்பச் சுவையினையும் கண்டான். உன்னையே மணப்பேனென்று உறுதியும் புகன்ருன். பின்னர், பிரியா விடை பெற்ருன். அவன் தோட்களில் புது மாறுதல் தோன்றலாயிற்று. அவன் தோழன் அதனைக் கண்டான். மாறுதலுக்குக் காரணம் சரிவரப் புலப்படவில்லை. ஆதலின் தோழன் அவனை நோக்கி வினவலானன். 'தலைவா! உன் பெரிய தோள்கள் மாறுதலுற்ற காரணமென்ன? மதுரைத் தமிழ்ச் சங்கத் தில் சிவபெருமானே சென்று ஆராய்ந்து இன்புற்ற தமிழ் நூற்களை நீயும் ஆராய்ந்து ஆராய்ந்து இன்புற்ருயா? அல்லது ஏழிசை இன்பத்தில் (சங்கீதம்) திளைத்தாயா? ஆக இம்மாறுதல் நீ ஏதோ இன்பம் ஒன்றில் மூழ்கிப் பின்னர் பிரிந்துளாய் என்பதைச் சுட்டுகின்றது; உண்மை யென்ன?' என்று வினவினன். இதனை,

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்
துறைவாய் ஏழிசைச்சூழல் புக்கோ நுழைந்தனையோ வந்தி
இறைவா தட்வரைத் தோட்கென்கொலாம்புகுந் தெய்தியதே"

என்னும் திருக்கோவையாரால் உணரலாம். இச்செய்யு

னால் சிற்றின்பமும், தமிழ் நூல் இன்பமும், இசையின்பமும் ஒத்த பெருமையுடையன என்றறியலாம். அன்றியும் இச்செய்யுளில் தமிழ் நூற்கள் சிவபெருமானாலேயே ஆராய்ந்து இன்புறப்பட்டன என்று இயம்பியிருப்பது மிகவும் புகழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

## சுவைகண்ட பூனை

இச்செய்யுட்களில் உள்ள காதற்சுவை யொன்றினையே கருதாது தமிழ் நூற் சுவையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் உயர்ந்த கருத்தையே கருத வேண்டும். எனவே, கல்வியின்பம் காம இன்பத்திற்கு எள்ளளவும் குறைந்ததன்று என்பது எளிதில் புலனாகும். சிலர் எவ்வளவு படித்திருந்தாலும் திரும்பவும் நூற்களை விடாமைக்குத் தக்க காரணமும் இதுவே. சுவை (ருசி) கண்ட பூனை விடாதல்லவா? தமிழர் கண்ட தமிழ்நூல் இன்பம் இங்ஙனம் தமிழர்களால் புகழப்பட்டுள்ளது. தமிழர்களால் மட்டுமா? பிற மொழியினராலுமே, பிற நாட்டினராலுமே தமிழ் நூலின்பம் புகழப்பட்டுள்ளது என்றால் வரும் தீங்கொன்றுமில்லை. இதுபோலவே அவரவர் மொழிக்கல்வியும் அவரவர்க்குப் பெரிய இன்பம் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

## தெய்வ உலகிலும் இல்லை

மற்றும் தாமே தனித்துப் படித்தால்தான் இவ்வின்பம் கிடைக்கும் என்பதல்ல. பிறர்க்கு எடுத்துக் கூறினாலும், பிறர் கூறுவதைக் கேட்டாலும் இன்பம் பெருகும். கற்றறிந்த புலவர் கூடும் கழகங்களே (கல்விச் சங்கம்) இதற்கு ஏற்புடையனவாகும். பொதுவாக இன்பம் பெறுவதற்குத் தெய்வ உலகத்திற்குச் செல்ல வேண்டியதில்லை.



குற்றமற்ற கல்வி கேள்வி நிரம்பிய திறமைமிக்க புலவர்கள் தம்முள் மாறுபாடின்றி ஒரு கழகத்தில் கூடி நூற்கருத்துக்களை எடுத்துப் பேசியும் கேட்டும் நகைத்தும் மகிழ்வதை விட, தெய்வ உலகத்தில் சிறந்த மகிழ்ச்சி கிடைப்பதனால் அத்தெய்வ உலகத்திற்கும் செல்லலாம். ஆனால் அங்கு அது கிடைக்கப் பெறாது. எனவே, இவ்வுலகத்திலிருந்து இக்கல்வி யின்பத்தைச் சுவைப்பதே மேலானதாகும். இக் கருத்தை,

**"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்போம் அகல்வானத்
தும்பர் உறைவார் மதி"**

என்னும் நாலடியாரால் நன்குணரலாம்.

## பிறவியும் வேண்டியதே

உலகில் பெரியார் பலர், இப்பிறவியினால் உண்டாகும் துன்பத்தை நோக்கினர். இனிப் பிறவி வேண்டாம் பிறவி வேண்டாம் என்று கடவுளை வேண்டிக்கொண்டனர். பிறவா அமைதி நிலையினையே பெரிதும் விரும்பினர். ஆனால் ஒரு பெரியாரின் நோக்கம் வேறு விதத்தில் சென்றது. என்ன அது? "கற்றறிந்த நாவன்மை பூண்ட மேலோர் கூடியுள்ள பேரவையில் (கழகம்) ஒருநாள் கூடியாயினும் இன்புறக்கூடிய வாய்ப்புக் கிடைக்குமானால் பல்வித நோய்கட்கும் துன்பங்கட்கும் காரணமாய்ச் சுழன்று திரியும் இப்பொல்லாப் பிறவியும் வேண்டியதே யாகும்" என்று கூறியுள்ளார். அவர் பாடிய ஆசிரிய மாலை என்னும் நூலிலுள்ள "குடிப் பிறப்புடுத்து" என்னும் செய்யுளில் உள்ள,

**"தோலா நாவின் மேலோர் பேரவை**
**உடன்மரீஇ யிருக்கை ஒருநாள் பெறுமெனின்**
**பெறுகதில் அம்ம யாமே வரன்முறை**
**மலர்தலை உலகத்துக் கொட்கும் பிறப்பே"**

என்னும் அடிகளால் இதனை அறியப் பெறலாம். கல்விக் கழகத்தில் கூடிப் பெறக்கூடிய இன்பம், இச்செய்யுளில் சிறப்பிக்கப்பட்டுள்ளதன்றோ?

## புலவர் தொழில்

புலவர்கள் ஒரு கழகத்தில் ஒன்று கூடும்போது நாம் பல இனிய கருத்துக்களை எடுத்துப் பேசியும் கேட்டும் இன்புறலாம் என்று மகிழ்ச்சியுடன் கூடுவார்கள். பிரியும் போதோ, இனி என்று கூடி இன்புறுவது என்னும் ஏக்கத்துடன் வருத்திப் பிரிவார்களாம். பண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தை விட்டுப் பிரிந்த நக்கீரர் என்னும் புலவர் **"ஒன்றுயிர்த் துணையாம் சங்கத்து உறவை என்றுநான் காண்பேன்"** என்று புலம்பிப் பிரிந்தாராம். இது புலவர்களின் இயற்கைத் தொழிலாகும். இக்கருத்தையே,

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்**

என்னும் குறளும் குறித்துச் செல்கின்றது.

## செவியின்பம்

தாமே கற்றும் பிறர்க்கு எடுத்துக் கூறியும் இன்பம் எய்த இயலாதவர்கள் கல்விக் கழகங்கட்குச் சென்று பிறர் கூறுவதைக் கேட்டாயினும் செவியின்பம் பெறலாம். இச் செவியின்பமும் பெறாவிட்டால் செவிகளைப் பெற்றும் பயனில்லை. வயிற்று உணவைவிட இச்செவி உணவே



சிறப்புடையதாகும். செவிக்கு உணவு கிடைக்காதபோதே சிறிது வயிற்றிற்கும் உணவு தரல் வேண்டும். அங்ஙனம் செவிச் சுவையினைச் சிறிதும் விரும்பாது வாய்ச்சுவை ஒன்றையே விரும்பும் மாக்கள் இருப்பதும் ஒன்றே; இறப்பதும் ஒன்றே. ஆதலால் காதால் கேட்டாயினும் கல்வியின்பத்தை நுகர வேண்டும். இவற்றை

**செவிக்குண வில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்.**
**செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்**

என்னும் குறள்கள் குறித்துச் செல்கின்றன. திருவள்ளுவரே பொறுமைக்கு இருப்பிடமானவர். அவரே செவிச் சுவை யுணராது வாய்ச்சுவையையே விரும்புவோர்மேல் சினந்து, அவர் அவிந்தால்தான் என்ன? வாழ்ந்தால்தான் என்ன என்று வெறுத்துக் கூறியுள்ளார். இதனை நோக்கின் இவ்வின்பத்தின் சிறப்பும் கட்டாயமும் இனிது புலப்படும்.

## விலங்கொடு ஒப்பு

உலகில் மக்கள் (பிழைப்புக்காகத்) தொழில் செய்தல், குளித்தல், உண்ணல், உறங்கல், காமவின்பங் காணல், முதலியவற்றிற் கெல்லாம் தனித்தனி நேரம் ஒதுக்கியுள்ளனர். அவ்வவ் வேலைகளைச் செய்தும் முடிக்கின்றனர். அதுபோலவே, நூல்களைக் கற்பதற்கும், கேட்பதற்கும், தனி நேரம் ஒதுக்கவேண்டும். இதனை ஒரு கட்டாயமாகவும் கொள்ளவேண்டும். இவ்வின்பம் பெறாதோர்க்கும் விலங்கிற்கும் செயலால் ஒருவித வேற்றுமையும் இல்லை. ஒரு காளைமாட்டினை எடுத்துக் கொள்வோம். அதுவும்

உணவுக்காக நாள் முழுமையும் உழைக்கின்றது. குளிப்பாட்டப் படுகின்றது. உண்ணுகின்றது; உறங்குகின்றது; காமவின்பமும் நுகர்கின்றது. ஆனால் அக்காளைக்குக் கல்வியின்பம் இன்னதென்று தெரியாது. ஆகவே, கல்வியின்பம் பெறாத மனிதர்கட்கு அக்காளையை உவமையாகக் கூறினால் தண்டிப்பவர் யாவர்? அதனால்தான்,

> விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்.

என வள்ளுவர் அஞ்சாது கூறிப்போந்தார்.

## தெய்வங்களின் பித்து

சற்றுப் புராண வரலாற்றில் புகுந்து பார்ப்போம். சிவபெருமான் மதுரையில் சோமசுந்தர பாண்டியனாக வந்து தோன்றினாராம். தேவி, மீனாட்சியம்மையாராக வந்து தோன்றினாளாம். முருகன் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டியனாக வந்து தோன்றினாம். ஒரு தெய்வக் குடும்பமே இங்ஙனம் செய்ததின் காரணமென்ன? மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு, தாமும் தமிழ் நூல் இன்பத்தைப் பெறவேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும். குமரகுருபர அடிகளார், தாமியற்றிய மதுரைக் கலம்பகத்தின் ஒரு செய்யுளில் மேற்கூறியவாறு நயம்பட நவின்று சென்றுள்ளார்.

அப்பாடல் வருமாறு:—

> "தமரநீர்ப் புவன முழுதொருங்கு ஈன்றாள்
> தடாதகா தேவியென்று ஒருபேர்
> தரிக்க வந்ததுவும் தனிமுதல் ஒருநீ
> சுவுந்தர மாறன் ஆனதுவும்
> குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
> கொண்டதுந் தண்டமிழ் மதுரங்
> கூட்டுண எழுந்த வேட்கையால் எனின்க்
> கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்."



இது மிகவும் இனிய பாடல் அல்லவா! மற்றும், திருவிளையாடற் புராணத்தில் உள்ள,

> "கண்ணுதல் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து
> பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தஇப் பசுந் தமிழ்"

என்னும் செய்யுட் பகுதியும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

தெய்வங்களே இங்ஙனம் நூல் இன்பத்தில் பெரும் பித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்டிருந்தால் மனிதர்களாகிய நாம் கல்வியின்பத்தைக் கட்டாயம் விரும்ப வேண்டுமல்லவா?

## சிற்றின்பத்தினும் சிறந்தது

மேலும் இக்கல்வியானது, சிற்றின்பத்தினும் மேலானதொரு நல்லின்பத்தைக் கொடுப்பதாகும். அச்சிற்றின்பமோ நிலையில்லாதது. தொடக்கத்தில் இன்பம்போல் தோன்றுவது. பின்னால் வெறுக்கப்படுவது. அளவுமீறின் நோயையும் கொடுத்துக் கெடுக்கக் கூடியது. எல்லாப் பருவத்தினரும் எப்போதும் பெறமுயாதது. இக்கல்வியின்பமோ தொடக்கத்தில் முயற்சித் துன்பம் தோன்றினும் பின்னால் பெரும்பயன் தரத்தக்கது. எப்பருவத்தினரும் எப்போதும் நுகரக்கூடியது. எவ்வளவு நுகர்ந்தாலும் வெறுப்பின்றி மேலும் மேலும் விருப்பத்தையே அளிக்கும் ஆற்றல் மிக்கது.

**தொட்ங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்**
**மடங்கொன்றறிவகற்றுங் கல்வி—நெடுங்காமம்**
**முற்பயக்குஞ் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்**
**பிற்பயக்கும் பீழை பெரிது**

என்னும் நீதிநெறி விளக்கச் செய்யுளே இதற்குச் சான்று.

கல்வி யின்பத்திற்குள்ள இவ்விதச் சிறப்பியல்பைக் கருதியே, சுந்தரமூர்த்தி நாயனுர், தமது தேவாரத்தில் கடவுளுக்கு உவமையாக்கிக் "கற்ற கல்வியினும் இனியானை" எனக் கல்வியைக் குறிப்பிட்டுள்ளார். எல்லாம் வல்லவரும் இன்ப உருவினரும் உயிர்கட்கு இன்பம் அளிப்பவரும் ஆகிய கடவுளுக்கே ஒப்பாக வைத்துப் பேசக் கூடிய பெருமை கல்விக்கு இருக்குமானுல் இன்னும் வேறு கூறவும் வேண்டுமோ ?

ஆதலின், ஒவ்வொருவரும் இவ்வுண்மைகளை உணர வேண்டும். பிள்ளைகட்குத் திருமணம் செய்து வைப்பதற்கு முன் கல்வி மணத்தைக் கைகூட்டிவைப்பதே கட்டாயக் கடமையாகும். "கல்வியே கற்புடைப் பெண்டிர்" என்பது குமரகுருபரர் கூற்றல்லவா ?

## 4. வீடு பெறலாம்

நான்காவதாகக் கல்வியால் வீடு பெறலாம் (வீடு= மோட்சம்). கல்வியறிவு பெற்ற பெரியோர்களாலேயே எளிதில் வீடு (முத்தி) பெறமுடியும். கல்லாதோர்க்கு இவ்வுலக இன்பமே ஒழுங்காகக் கிடைக்காதிருக்கும்போது அப்பேரின்ப வாய்ப்பு எங்ஙனம் கிடைக்கும் ? இளமையிலிருந்தே எழுத்துப் பயின்று கல்வியை வளர்த்தால் வாழ்க்கையில் ஏற்படும் இழிவுகள் தீரவே, மொழியிலும் நல்ல புலமை உண்டாகும். உண்டாகவே, அம்மொழியறிவைக் கொண்டு சமயநூற்பொருள்களை உணரலாம்.



உணரவே, உலகக் கட்டுக்கள் நீங்கப் பெற்றுப் பேரின்ப வீட்டையும் பெறமுடியும்.

இன்ன பிற கருத்துக்கள், திருமூலர் திருமந்திரத்தில் உள்ள,

"கற்றவர் பேரின்பம் உற்று நின்ருரே"

என்னும் பாடல் பகுதியாலும், ஏலாதியில் உள்ள,

"பொய்தீர் புலவர் பொருள் புரிந் தாராய்ந்த
மைதீர் உயர்கதி"

என்னும் பாடலாலும், நான்மணிக்கடிகையில் உள்ள,

" கற்பக் கழிமடம் அஃகும் மடம் அஃகப்
புற்கம் தீர்ந்து இவ்வுலகின் கோளுணரும் கோளுணர்ந்நால்
தத்துவ மான நெறிபடரும் அந்நெறி
இப்பால் உலகின் இசைநிறீஇ—உப்பால்
உயர்ந்த உலகம் புகும்"

என்னும் பஃறொடை வெண்பாவாலும், திருக்குறள் பரிமேலழகர், உரையில் உள்ள,

எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தபன்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்— மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

என்னும் பழைய செய்யுளாலும் அறிவிக்கப்பட்டுள்ளன. கல்வியால்தான் வீடுபெறமுடியும் என்பதை இச்செய்யுள் நன்கு வலியுறுத்துகின்றது. அல்லவா ? கடவுளைக் குறித்து, "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி", "மற்றவர் அறியா மாணிக்கமலை" என்று திருவிசைப்பா என்னும் நூலும் தெளிவுறுத்துகிறது.

## முன் தொடர்ச்சி

ஏன், கல்லாதவரால், வீடுபெற முடியாதா? கண்ணப்பர் முதலானோர் எவ்வாசிரியரை யடுத்து எந்நூற்களைப் பாடங் கேட்டனர் என்று கேட்கலாம். அவர்கள் இப்பிறவியில் கற்றிருக்காவிட்டாலும் முற்பிறவியிலாவது கற்றே யிருப்பார்கள். இதுபற்றியே, "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன்" எனச் சுந்தரர் இயம்பியுள்ளார். ஒரு பிறவியில் கற்ற கல்வியானது தொடர்ந்து எழுபிறவிகள் வரையிலும் வந்து உதவும். இதனை,

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி, ஒருவற்(கு)
எழுமையும் ஏமாப் புடைத்து

என்னும் திருக்குறளால் தெள்ளிதின் தெளியலாம். இதன் உண்மை, ஆழ்ந்த (தத்துவ) ஆராய்ச்சி உடையோர்க்கு நன்கு விளங்கும்.

## இறுதி உணர்ச்சி

எவ்வளவு கற்றாலும் இறுதியில் உயிர் எய்தும் நிலையை உணர்ந்து பார்க்கவேண்டும். அதற்கு நல்வழி தேடவும் முயலவேண்டும். அல்லாவிடின் அக்கல்வியால் பயனில்லை. ஊழ்வினையிலும் முத்தியிலும், கடவுள் மேலும் நம்பிக்கையில்லாவிடினும், முடிவில் உயிர் என்ன ஆகின்றது, என்பதை உணர்ந்து பார்ப்பதால் வரும் தப்பொன்று மில்லை. அங்ஙனம் உணர்ந்து பார்க்கின், உயிர்முடிவில் எல்லாவித உரிமைப் பொருள்களையும் விட்டு, உடம்பினின்றும் பிரிந்துவிடும் என்பது விளங்கும். அது விளங்கவே, நாம் உலகில் பிற உயிர்களை வருத்திக் கெட்ட வழிகளில் உடைமைகளையும் இன்பத்தையும்தேடி உழலலாகாது என்ற



நல்லெண்ணம் தோன்றும். அது தோன்றவே, மக்கள் தம் வாழ்க்கையைப் பழிச்செயல்கட்கு இடமில்லாதபடி நடாத்துவார்கள். கிட்டத்தட்ட இவ்வளவு ஒழுங்கான நடவடிக்கை இருந்தாலேயே போதும். இதுவே கடவுள் நெறியாம் சமய நெறியாகும். இதைக் கொண்டே உயிர் ஒருவிதமாக உயர்நிலை (சாந்தி) அடையும். எனவே, இவ்வுணர்ச்சிகட்கெல்லாம் சிறந்த தூண்டுகோலாய் உள்ள கருவி கல்வியே.

## கற்றதனால் ஆய பயன்

இக்கருத்துக்கள் பலவற்றையும் அடிப்படையாகக் கொண்டே நம் திருவள்ளுவப் பெருந்தகையாரும் கடவுள் திருவடியை வணங்காவிடின் கற்றதனால்பயனில்லை என்னும் கருத்தில்,

கற்றனாதல் ஆய பயன்என்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்

எனக் கூறிப்போந்துள்ளார். 'இஃதென்ன விந்தை! கற்றதன் பயன் கடவுளைத் தொழுதல் மட்டுந்தானோ? உலகில் மக்கள் கல்வியால் வேறு எவ்வளவோ பயன்களை அடைகின்றனரே! ஆதலின் இக்குறள் பொருத்தமில்லாததாகும்' என்று சிலர் கூறவுஞ் செய்யலாம். இக்குறளைப் பற்றி அப்படி எண்ணிவிடக் கூடாது. உலகில் கல்வியால் பல பயன்கள் உண்டென்பது உண்மையே. ஆயினும் அவற்றுள் முதன்மையானதும், சிறப்புடையதும், உயிர்ப்புடையதும், முடிவானதும் ஆகிய பயன் இப்பேரின்பப் பயனே. எடுத்துக் காட்டாக, ஒன்று நோக்குவோம். ஒருவர் போதிய திறமையற்ற தன் மகனை நோக்கி, 'இவனால் ஒரு நன்மையும் இல்லை' என்று குறை கூறுவதை நாம் உலகில் காண்கின்றோம். உண்மையில் அம்மகனால் ஒரு நன்மையும் இல்லாமலா போய்விடும்? அம்மகன் தன் தந்தைக்குப் பல நன்மைகளைச்

செய்தே தீருவான். இருப்பினும் இன்றியமையாத ஒரு செயலில் தற்செயலாய்த் தவறிவிட்டிருப்பான். அவ்வொன்றைக் கொண்டே தந்தை அங்ஙனம் கூறிவிடுவார். இஃது உலகியற்கை. இதுபோலவே இத்திருக்குறளினையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

## உண்மை நோக்கம்

ஆனால் உலகில் கடவுள் இல்லை என்னும் கொள்கை ஒன்று என்றும் சிலவி வருவது அனைவரும் உணர்ந்ததே. ஆனால், அக்கொள்கைக்கும் இக்குறள்கட்கும் முற்றிலும் முரண்பாடு காணப்படுகின்றதல்லவா? அக்கொள்கையினர் சிலரும் கூறுவதென்ன? "கடவுள் என ஒரு பொருளும் இருக்கலாம்; அதற்கு வணக்கமும் செலுத்தலாம்; ஆனால் அதன் பெயரால் வீண் ஆரவாரங்கள் அறவே கூடாவாம்" என்று தம் உண்மை நோக்கத்தை ஒத்துக் கொள்கின்றனர். ஒத்துக் கொள்ளாமலும் இருக்க முடியாது. மேலும் கருத்து வேற்றுமையுடையோர் இக்குறள்களையெல்லாம் மறுப்பின் மறுப்பாராக. மறுத்துத் திருவள்ளுவரையே பொய்யராக ஆக்கின் ஆக்குவாராக. இங்கு இன்னும் இதைப் பற்றிய ஆராய்ச்சி வேண்டியதின்று. எனவே, இங்குப் பொதுவாகவும் முடிவாகவும் கூறப்படுவதென்ன? ஒவ்வொருவரும் தத்தம் கல்வியறிவினை முழுதும் பயன்படுத்தி ஆராய்ந்து பார்ப்பார்களாக. பின்பு தத்தமக்கு ஏற்படும் முடிவின்படி, உயிர் இறுதியில் பேரின்பப் பெருவாழ்வாம் அமைதி நிலையினை அடையும் வண்ணம் நடந்து கொள்வார்களாக.

## உறுதிப் பொருள்கள்

மேற்கூறப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் மனிதர்க்கு இருக்க வேண்டிய



'உறுதிப் பொருள்கள்' என நூலோர் கூறியுள்ளனர். வடமொழியில் இந்நான்கிற்கும் 'சதுர்வித புருஷார்த்தம்' எனப் பெயரிட்டுள்ளனர். 'அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே' என்னும் நன்னூற்படி, இவற்றைக் கல்வியானது தருமென்றால், இக்கல்வியைவிட, மக்கட்கு வேறென்ன விளக்குவேண்டும்? ஈண்டு, திருக்குறள் பரிமேலழகர் உரையிலுள்ள,

> "அறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
> திறமாமோ எண்ணிறந்தால் செப்பு"

என்னும் பழம் பாடலையும் ஒப்பிட்டு நோக்குக.

## 5. நல்லிசை நாட்டும்

ஐந்தாவதாகக் கல்வி நல்லிசை (புகழ்) நாட்டும். இசையெனினும் புகழ் எனினும் ஒன்றே. இறக்கும்வரையும் உள்ள புகழ், இறந்த பின்னும் உள்ள புகழ் எனப் புகழ் இருவகைப்படும். ஆனால், உயிர் வாழும்போது உள்ள புகழுக்கு ஒளி என்றே பெயர். இறந்த பின்னும் நிலைநிற்கும் புகழுக்குப் புகழ் என்று பெயர். இவ்விரண்டு புகழையும் தருவது கல்வியே. ஏனைய செல்வங்கள் தாராவாம். ஏன்? செல்வமும் இவ்விரண்டு புகழையும் தருகின்றதே. செல்வர்கள் உயிர் வாழும் போதும் புகழப்படுகின்றனர். அச்செல்வத்தால் சத்திரம் சாவடி கட்டிப் போனால் இறந்த பின்னும் புகழப்படுகின்றனரே என்று கேட்கலாம். உண்மைதான். இருப்பினும் அச்செல்வத்தால் வரும் புகழ்கள் நிலைத்தனவல்ல. ஏனெனின் மனிதர் உயிர் வாழும் போதே நிலையற்ற அச்செல்வம், தான் அழிந்து புகழைக் குறைப்பினும் குறைக்கும். அதேபோன்று மனிதர் இறந்த பின்னும் அவர் கட்டிப்போந்த சத்திரஞ் சாவடிகள் தாமும் இடிந்தழிந்து ஏற்படுத்தியவர் புகழை மறைத்து விடினும்

மறந்துவிடும். இதற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுக்கள் உலகில் காணலாம். கல்வியோ அங்ஙனமன்று,

### என்றும் உள்ளவர்

கற்றவர்கள் இறக்கும்வரையிலும்புகழப்படுகின்றனர். இறந்த பின்னும், பாழடைந்த சிறு கல்லறைக்குள் இருந்தபடியே, உலகம் முழுவதும் உலவுகின்றனர்—எல்லாக் காலத்தும் இயங்குகின்றனர். அதாவது அவரிறந்த பின்னும் அவரியற்றிய நூல்கள் என்றும் அழியாமல் இருக்கின்றன. தப்பித் தவறி ஒருநூல் அழிந்தாலும் அதன் பெயர் அழிவதில்லை. பெயர் அழிந்தாலும் கருத்துக்கள் அழிவதில்லை. எல்லாக் கருத்துக்களும் நிற்காவிடினும் இரண்டொரு கருத்தாயினும் மக்களால் கருதப்படும். எனவே, அந்நூற் கருத்துக்களைப் படிக்குந்தோறும் இயற்றிய புலவரின் நினைவுந் தோன்றுகின்றது. அப்போது அப்புலவர்களும் படிப்பவரால் புகழப்படுகின்றனர். இவ்வளவு சுற்றுவானேன்? திருவள்ளுவரையே எடுத்துக் கொள்வோமே! அவர் காலத்தில் எத்தனையோ செல்வர்கள் இருந்திருப்பார்கள். அவர்தம் பெயரெல்லாம் தற்போது மறைந்து பட்டன. அவர்களின் அறிகுறியாகவும் ஒன்றும் காணப்படவில்லை. ஆனால், திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளோ இன்றும் உளது. இனியும் என்றும் இருக்கும். அதனால் திருவள்ளுவரும் மறக்கப்படாமல் உலக மக்களால் அடிக்கடிப் புகழப்படுகின்றார். மேலும் இக்கற்றறிந்த புலவர் பெருமக்கள் இறந்தவராகக் கருதப்படமாட்டார்கள். இன்றும், என்றும் உயிர்வாழ்வதாகவே அவர்களைக் கருதவேண்டும். அவர்கள் இயற்றிய நூற்களைக் கண்டதும் அவர்களையும் மனக்கண்ணால் காண்கின்றோம். அந்நூற் கருத்துக்களைப் படிக்கும்போதும் அவர்கள் அருகிலிருந்து சொல்வது போலவே தோன்றுகின்றது. எனவே, இன்றும் நம் மனக்



கண்ணின் முன்பு தொல்காப்பியர் தோன்றுகின்றார். திருவள்ளுவரும் திகழ்கின்றார். இளங்கோவடிகள் இலங்குகின்றார். கம்பரும், காளிதாசரும், சேக்கிழாரும் ஷேக்ஸ்பியரும் காட்சியளிக்கின்றார்கள். ஏனைய புலவர் பெருமக்களும் புலப்படுகின்றார்கள். இவர்கள் எல்லாம் இறக்கவே இல்லை. இவ்வின்ப உலகில் இசைமயமாய் இன்றும் உள்ளனர். இனியும் என்றும் உள்ளவராவார்கள்—ஈண்டு.

> "கனவித்தை கொண்டவர்கள்...காவியம் செய்த கவிஞர்...
> சரீரங்கள் போகினும் சாகாத மனிதர் இவர்"

என்னும் குமரேச சதகப் பாடலை நோக்குக.

### அழியாப் படைப்பு

எனவே, பல்லாற்றானும் கற்றவரே மற்றையோரினும் சிறந்தவராகக் கருதப்படுகின்றனர். கற்றவரை, உலகைப் படைக்கும் நான்முகனை (பிரமன்) விடவும் சிறந்தவராகக் கூறி விடலாம். நான்முகனால் படைக்கப்படும் உடம்புகள் அழிவதைக் காண்கின்றோம். கற்றவரால் படைக்கப்படும் நூற்களாகிய உடம்புக்கோ அழிவில்லை. இவ்விதத்தில் கற்றவரை நான்முகனிலும் சிறந்தவராகப் பாராட்டுவதில் தப்பென்ன உளது? ஒன்றுமில்லை. இக்கருத்தைக் குமரகுருபர அடிகளாரால் இயற்றப்பட்ட,

> கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
> மலரவன் வண்ட மிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
> வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
> மற்றிவர் செய்யும் உடம்பு

என்னும் நீதிநெறி விளக்கச் செய்யுளால் உணரலாம். எனவே, இறந்த பின்னும் ஒளி (புகழ்) தரும் விளக்கு கல்வியே என்பது வெட்ட வெளிச்சம்.

## 6. கவலை மருந்து

ஆறுவதாகக் கல்வி, கவலையைப் போக்கும் மருந்தாய் உளது. தளர்ந்த சமயத்தில் முன்னின்று உதவி செய்யும் ஆற்றல் உடையது. கல்லாதவர்க்கு ஒரு துன்பம் வந்தால் அவர் விரைவில் ஆற்றிக்கொள்ள முடியாமல் தவிப்பர். கற்றவர்க்கோ அப்படியில்லை. தற்செயலாய் ஒருகாரியத்தில் முட்டுப்பாடு நேர்ந்தாலும், 'ஊக்கமது கைவிடேல்', 'முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்' என்னும் தொடர்மொழிகள் நினைவிற்கு வரும். மற்றும் பல உயர்ந்த நூற்கருத்துக் களும் நினைவுக்கு வந்து மனத்திற்கு ஆறுதல் அளிக்கும். மேலும், அவர்கள் கற்றறிந்த நாமே இங்ஙனந் தளர்ந்தால், நம்மை நோக்கிப் பிறர் ஏளனஞ் செய்யமாட்டார்களா? என்றஞ்சியாவது தளராமல் இருப்பார்கள். அன்றியும் கழிந்துபோன (நடந்துபோன) செயல்களை எண்ணி எண்ணி இரங்குவது கற்றவரின் நல்லிலக்கணமும் ஆகாது. "கற்றார்முன் தோன்றா கழிவு இரக்கம்" என்பது நான்மணிக் கடிகை யன்றோ?

### நூலே நண்பன்

உலகில் மக்கள் ஒருபெரிய துன்பத்தால் மனம் வருந்து வராயின், அவ்வருத்தத்தை மாற்றுவதற்காகத் தம் நண்பர் முதலானோர் வீட்டிற்குச் சென்று ஏதாவது பேசிக் கொண் டிருப்பது வழக்கம். ஆனால் கற்றவர்க்கோ நண்பர் வேண்டுவதில்லை. அச்சமயத்தில் நல்லதொரு நூலை எடுத்துப் படிக்கத் தொடங்குவார்களேயானால் அவ் வருத்தம் எளிதில் மறக்கப்பட்டு மாறிவிடும். தனியே வெளியூருக்குப் புறப்பட்டுப் புகைவண்டி முதலியவற்றில் செல்லும்போதும் ஒரு நல்ல நூலிருந்தால் போதும். எளிதாகப் பயணத்தை முடிக்கலாம். இன்பமாகவும்



தோன்றும். "நூலே நண்பன்" என்று அறிவுடையார் கூறுவதும் இதுபற்றியே. தளர்ந்த சமயத்தில் ஒரு நண்பன் செய்யக்கூடிய உதவியைக் கல்வி நூல் செய்யும் என்பதில் ஐயமில்லை.

### செல்வரும் கற்றோரும்

செல்வர் ஒருவரும், கற்ற புலவர் ஒருவரும் ஒரேயள வாகப் பணம் எடுத்துக் கொண்டு வெளியூருக்குச் சென்ற தாகவும், சென்றவிடத்தில் பணமுழுவதும் இருவரிடத் திலும் திருட்டுப்போய் விட்டதாகவும் வைத்துக் கொள் வோம். அச்சமயம் செல்வர் வேறு வழியின்றித் திகைத்துத் திண்டாடுவார். புலவரோ தன் புலமையைக் காட்டி எங்ஙனமாவது பிழைத்துக் கொள்வார். அங்குள்ள பொது மக்களும் புலவரை நோக்கி 'அந்தோ! படித்த மனிதராகக் காணப்படுகின்றார்' என்றிரங்கி அவர்க்கு உணவு முதலிய உதவிகளைச் செய்வர். இதைப் போன்ற நிகழ்ச்சிகளை நாம் வாழ்க்கையில் கண்டிருப்போம். இதனை உறுதிப்படுத்தும் பழைய வரலாறுகளும் உள்ளன.

### தளர்ந்துழி உதவுங் கல்வி

நல்லாற்றூர் சிவப்பிரகாச அடிகளாரும் பிரபுலிங்கலீலை என்னும் நூலில் உவகை கூறும் வாயிலாக இக்கருத்தை வலியுறுத்திப் போந்துள்ளார். பல முனிவர்களின் தளர்ச்சி யைப் போக்கிய துருவாசமுனிவர்க்கு உவமையாகக் குறிப் பிட்டு,

"தளர்ந்துழி உதவும் கல்வி தானென"

எனக் கூறியுள்ளார்.

## யானை படுத்தால் குதிரை மட்டம

யானை படுத்தால் குதிரை மட்டம் இருக்கும் என்பார்கள். ஆனால் பூனை படுத்தால்...? இதுபோலவே, கற்றவர்கள் இடையில் தளர்ந்து சோர்ந்து போனாலும், பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு எழுந்துவிடுவார்கள். ஆனால் கல்லாதவர்கள் வாழ்க்கையில் வழுக்கி விழுந்துவிடின், கால் முறிந்தவர்போல் அல்லற்படுவர். எனவே, கல்வியின் அருமை புலப்படுமே! இக்கருத்தினை

> "கற்றான் தளரின் எழுந்திருக்கும் கல்லாத
> பேதையான் வீழ்வானேல் கால் முரியும்"

என்னும் நான்மணிக்கடிகைப் பாடலால் தெளியலாம்.

## கல்விப் புணை

தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பவனுக்கு ஒரு தெப்பம் (புணை) கிடைக்ுமாயின், அவன் அதன் துணைகொண்டு கரையேறுவான். அதுபோலவே, வாழ்க்கைக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் மக்கட்கு, கல்வியானது ஒரு தெப்பம் போன்று—தெப்பம் என்றால் சிறியதன்று—ஒரு பெரிய தெப்பம் போன்று உதவி நல்வழிகாட்டுமாம். இந்த அரும் பெரும் கருத்தினைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலை என்னும் காவியத்தில் உள்ள,

> "பிடித்த கல்விப் பெரும்புணை" (11-17)

என்னும் அழகிய அடியால் அறியலாம். எனவே, மக்கட்குத் தளர்ச்சி என்னும் இருளைப் போக்கி ஒளிதரும் விளக்கு, கல்வியே என்பது இனிது பெறப்படும். ஆகவே, கூறிவந்த இவ்வறுவகைப் பயன்களையும் நல்கும் சிறப்பு நோக்கிக் கல்வியைச் "சிற்றுயிர்க்கு உற்ற துணை"யாகக்



குமரகுருபரர் கூறியிருப்பது மிகவும் பொருத்தமாகவே தோன்றுகின்றது. ஈண்டு,

> "துணையாய் வரும்தூயநற் கல்வியே"

என்னும் திருமந்திரப் பாடலையும் நோக்குக.

—O—

# சென்ற இடமெல்லாம் சிறப்பு

இவ்வறுவகைப் பயன்களோடு மற்றொரு பயனும் உண்டு. கல்வியானது தன்னைக் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புக் கொடுக்கும். செல்வர்கட்கோ அந்த வாய்ப்புக் கிடைக்காது. அவர் இருக்கும் ஊரில் மட்டுந்தான் சிறப்புக் கிடைக்கும். அங்கேயும் அவரிடம் வேலை செய்து பிழைப்பவர்களும் அவர் உதவியை நாடியிருப்பவர்களுமே அவரை மதிப்பர். அவ்வுதவி நாடாத மற்றையோர், அச்செல்வர் தீங்கிழைத்தால் என்ன செய்வது என்றஞ்சி அவரை மதித்தால்தான் மதிக்கலாம். அவ்வச்சமும் சிலர்க்கு இருக்காது. அச்செல்வர்கள் வெளியூர்கட்குச் சென்றால் எல்லோரையும் போலவே சாதாரணமாகக் கருதப்படுவார்கள். அங்கே, தம் சொந்த கைப்பொருளைக் கொண்டே உணவு முதலியன தேடித் தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ளவேண்டும். ஏன்? செல்வர்களும் வெளியூர்களில் சிறப்பிக்கப்படுகின்றார்களே என்று வினவலாம். உண்மைதான். ஆனால் அங்குக் குறிப்பிட்ட தம்நண்பர்களாலேயோ உறவினர்களாலேயோதாம் சிறப்பிக்கப்படுவார்கள். அவ்வுதவியெல்லாம் கைம்மாறு கருதியதாகும். கைம்மாறு கருதாத பேரன்போடு பொதுமக்களால் போற்றப்படும் சிறப்புரிமை செல்வர்க்குச் சிறிதும் கிடைக்காது. செல்வர்கள் என்ன? அரசர்களும் கற்றோர்க்கு ஒப்பாக முடியாது. அரசர்க்குத் தம் தேசத்தில்தான் சிறப்புக் கிடைக்கும். வேற்றுத் தேசங்களில் அவ்வளவு கிடைக்காது. சில வேற்றுத்தேசங்கட்குச் செல்லவுங் கூடாத அரசர் சிலரும்



உண்டு. அங்ஙனம் சென்று சிறப்புப் பெற்றாலும் அது கைம்மாறு கருதியதாகவே இருக்கும். பதிலுக்குப் பதில் செய்துகொள்ளும் வாணிகமே அது. கற்றவர்க்கோ அப்படியில்லை. அவர் எந்நாட்டிற்குச் சென்றாலும், எவ்வூர்க்குச் சென்றாலும் சிறப்புப் பெறுவர். எந்நாடும் அவர் நாடாம்; எவ்வூரும் அவர் ஊராம்; அவர்கள், அங்குள்ள அரசர், வள்ளல், செல்வர், ஏழைகள் முதலிய அனைவராலும் போற்றப்பட்டு உணவு முதலிய உதவிகளைப் பெறுவார்கள். அவ்வுதவி கைம்மாறு கருதியதன்று. உண்மையான உள்ளன்போடு செய்யப்படுவதாம். ஆதலின், கற்றறிந்த புலவர்கள் வெளியூர்கட்குச் சென்றால் கட்டமுது கொண்டு போகவேண்டிய கட்டாயம் பெரும்பாலும் வேண்டுவதில்லை. விலைக்கு உணவு வாங்கவேண்டுவதுமில்லை. தாமே விரும்பி வாங்கினால்தான் வாங்கலாம். சென்ற இடங்களிலெல்லாம் உண்டு உண்டு பற்களும் மழுங்கிப் போனதாக ஔவையார் முதலிய புலவர்கள் பாடிய பாடல்களால் இதனை நன்கறியலாம்.

மேலும், கற்றவர்கள் தம் அரசர்க்கு எதிரியான வேற்றரசர் நாட்டிற்கும் செல்வார்கள். அதனோடமையாது அவ்வரசரின் அரண்மனைக்கும் அஞ்சாது செல்வார்கள். வேற்றரசர்களும் எதிரிநாட்டிலிருந்து வந்தவர் புலவரானால் வெறுக்கமாட்டார்கள். விரும்பி வரவேற்றுப் போற்றுவார்கள். அவர்கட்கு அதிலோர் இன்பமுண்டு. அதனைக் கம்பர் முதலிய புலவர் பெருமக்கள் வரலாற்றால் நன்குணரலாம். இவ்விடத்தில்,

"பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றெவ்வார்"

என்னும் நன்னெறிச் செய்யுளும்,

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை ; கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாம் சிறப்பு

என்னும் வாக்குண்டாம் செய்யுளும்,

ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை—அந்நாடு
வேற்றுநாடாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில் (ஆற்றுணா=கட்டமுத

என்னும் பழமொழிச் செய்யுளும் சான்று பகரும்.

**வள்ளுவர் கேள்வி :**

இக்காலத்திலும் கற்றவர் சிலர் வெளியூர்க்குச் சென்
நூற்களிலுள்ள நயமான கருத்துக்களை எடுத்துக் கூறி
பலராலும் போற்றப்படுவதையும், அங்கேயே நாட்கண
திலும் மாதக்கணக்கிலும் தங்கியிருப்பதையும் நாம் கண்
கூடாகக் காண்கிறோம். மேலும் அவரிடம் ஒவ்வொ
ஊராரும் சென்று 'எங்கள் ஊருக்கு வரவேண்டும்! எங்கள்
ஊருக்கு வரவேண்டும்!' என்று வேண்டி விண்ணப்பித்து
கொள்வதையும் விளங்கக் காண்கிறோம். எச் செல்வ
இங்ஙனம் வெளியூரில் போற்றப்படுகின்றார் ? ஒருவரு
இலர். இதைக் கருதியே நம் திருவள்ளுவரும் 'கற்றோர்க்கு
எந்நாடும் எவ்வூரும் தம்முடையனவே; அப்படியிருப்பதால்
கல்வியை ஒவ்வொருவரும் சாகும் வரையிலும் படிக்காமல்
இருக்கும் மடமைக்குக் காரணம் என்ன?' என்று சினந்து
கேட்கின்றார் ; இக்கருத்தை அறிவுறுத்தும் குறள்

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

என்பதாகும். எனவே. இங்ஙனம் சென்ற இடமெல்லாம்



சிறப்பொளி செய்யும் கல்வியல்லவா பிள்ளைகட்குப் பெரிய தொரு விளக்காகும்.

**அரசர்க்கு அணிகலன்**

பண்டைக் காலத்திலிருந்து கற்றறிருந்த புலவர்கள் அரசர்களால் போற்றப்பட்டு வந்தமையை விரிக்கின் அதுவே ஒரு தனி நூலாகப் பெருகும். ஆதலின் அதைப் பற்றிய குறிப்புக்கள் சிலவற்றை மட்டும் ஈண்டு தரலாம். அக்காலத்தில் அரசர்கள் புலவர்களைத் தன் அரண்மனை யிலேயே இருத்தி ஆதரித்து வந்தார்கள். அப்புலவரை அவைக்களப்புலவர் என அழைப்பது வழக்கம். மேலும் அரசர்கட்குள் எவ்வரசன் மிக்க புலவர்களின் உறவைப் பெற்றும், அவர்களை ஆதரித்தும் அவர்களால் போற்றப் பட்டும் உள்ளானோ அவனே சிறந்த அரசனாகக் கருதப்பட் டான். புலவரால் பாடப்பெறாத அரசன் தாழ்ந்தவனாகக்கரு தப்பட்டான். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்னும் பாண்டிய மன்னன் 'என் எதிரிகளைக் கொல்லாது விடுவனேயாயின் என் நாட்டைப் புலவர்கள் பாடாது விடுவார்களாக' என்று சூள் உரைத்ததாகப் புற நானூற்றால் புலப்படுகின்றது. அதனை நோக்கின் புலவர் கட்கிருந்த செல்வாக்கு—(கிராக்கி) இனிது புலப்படும்.

**மறைமொழி**

அரசர்கள் புலவர்களின் வாக்கை மறைமொழியாகக் (வேதவாக்காகக்) கருதிப் போற்றி வந்தார்கள். அவர்கள் அறிவுறுத்தும் அறிவுரையைத் தட்டுவதில்லை. இதனைப் புலவர் கோவூர்கிழார் வரலாற்றால் நன்குணரலாம்.

**உதவிகள் பல**

அரசர்கள் புலவர்கட்குச் செய்துள்ள உதவிகள் ஒன் றல்ல, இரண்டல்ல, பலவாகும். புலவர்களை விட்டுப்பிரிவ

தென்றால் அரசர்கட்கு மனமே வருவதில்லை, புலவர்கள் வெளியூர்க்குச் சென்று விரைவில் வந்துவிடுவதாக அறிவித்தாலும் எளிதில் விடையளிக்கமாட்டார்கள். புலவர்கள் விரும்பிய பொருளைத் தருவார்கள். தமக்கில்லாவிட்டாலும் புலவருக்குக் கொடுப்பதை நிறுத்தமாட்டார்கள். அதிகமான் என்னும் அரசன், உண்டால் நீண்டநாளைக்கு உயிர் வளர்க்கும் நெல்லிக்கனி யொன்றைத் தான் உண்ணாமல் ஔவையாருக்கு அளித்தானாம். தம்பியால் காடடைந்த குமண மன்னன் அங்குவந்து தன்னைக்கண்ட பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவரிடத்தில், தன் தலையை அரிந்து கொண்டுபோய்த் தம்பி கையில் தந்து ஆயிரம் பொன்பெற்றுக்கொள்ளும்படி அறிவித்தானாம். நள்ளி என்னும் அரசனொருவன் வேட்டையாடச் சென்ற காட்டு வழியில் வன்பரணர் என்னும் புலவரைக் கண்டான், கண்டதும் அந்நடுக் காட்டிலேயே தானே உணவு தேடிப் (தயாரித்து) புலவரின் பசியைப் போக்கினானாம், போக்கித்தான் அணிந்திருந்த அணிகலன்களையும் அவர்க்களித்தான். அளித்து ' இது நடுக்காடாதலின் இவ்வளவே செய்யமுடிந்தது, வருந்த வேண்டாம் " என மன்னிப்புக் கேட்டுக்கொண்டானாம். அவன் அன்புதான் என்னே! கற்றவர்களின் பெருமையைத் தான் என்னென்று எடுத்தியம்புவது ?

## புலவர்தம் மிடுக்கு

ஆனால், புலவர்கள் அரசரின் தயவுக்குக் காத்திருந்து கையேந்தி நிற்கவேமாட்டார்கள். தம்மை அரசர் இழிவு படுத்துவதாக அறிந்தால் உடனே அவ்விடத்தைவிட்டு அகன்று விடுவார்கள். ஒன்றும் ஈயாத அரசர்க்கு ஒருசிறிதும் அஞ்சாமல், அவர் எதிரிலேயே அவர்தம் கல்நெஞ்சைச் சுட்டிக்காட்டுவார்கள். கடமையைக் கழிப்பதற்காகச் சிறிது கொடுத்தாலும் வாங்கமாட்டார்கள். காலம் நீட்



டித்துக்கொடுத்தாலும் வாங்கமாட்டார்கள். அச்சமயங்களில், அஞ்சாமலும் உரிமை பாராட்டியும் சினந்து பேசுவார்கள். அரசர்களும் அப்புலவர்களை ஒன்றும் செய்யமுடியாது. முடிந்தாலும் ஒன்றும் செய்யமாட்டார்கள். ' புலவர்கள் போற்றினும் போற்றுவர் ; பொருள் கொடாவிடின் தூற்றினும் தூற்றுவர் ' என்பது அரசர்களின் நினைவில் நின்றுகொண்டேயிருக்கும். அங்ஙனம் புலவர்களால் தூற்றப்பட்ட அரசனைப் பெருமையில் குறைந்தவனாக எண்ணுவது அக்கால வழக்கம். இக்காலத்தும் சிலர், கற்றோர்க்கு அஞ்சுவது அக்காரணம் பற்றியேயாம். எனவே, புலவர்கள் இங்ஙனம் எள்ளளவும் தம்மை எளியவராகக் காட்டிக் கொள்ளமாட்டார்கள். அரசர்க்கு ஒப்பான அல்லது இன்னும் மேலான பெருந்தன்மையுடனேயே நடந்துகொள்வார்கள். இந்நிகழ்ச்சிகளையெல்லாம் புறநானூறு என்னும் பழந்தமிழ்ப்பண்டகசாலையில் (பொக்கிஷம்) பரக்கக் காணலாம்.

## அரசரின் அணுக்கத்தொண்டு

மற்றும் அரசர்கள் அணுக்கத் தொண்டராய் நின்று கற்றோர்க்குத் தொண்டு செய்ததும் உண்டு. அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு வரலாறு காண்போம்.

மோசிகீரனார் என்னும் புலவர் ஒருவர், சேரமான் தகடூர் எறிந்தபெருஞ்சேரலிரும்பொறை என்னும் அரசனைக் காண விழைந்து வழிநடந்தார். பசியால் வருந்தினார். வெயிலால் வாடினார். மெல்ல அரசனது அரண்மனையையும் அடைந்தார். அரண்மனையின் ஒரு பகுதியில் கட்டில் ஒன்று போடப்பட்டிருந்தது. அது முரசு வைக்கும் கட்டிலாகும். அக்காலத்தில் அரசர்கள் முரசை ஒரு மங்கலப் பொருளாகக் கருதி அதற்குத் தனிக்கட்டில் அமைத்து வழிபாடு செய்வது வழக்கம். அம்முரசுகட்டிலில் ஒருவரும் அமர

வுங்கூடாது. அக்கட்டிலைப்பற்றியமட்டில் அன்புடனும்அச்சத்துடனும், நடந்துகொள்ள வேண்டும். மீறி நடந்தவர் அரசரால் தண்டிக்கப்படுவர். ஆனால் நம் புலவர்போன சமயத்திலோ, இம்முரசு அக்கட்டிலில் இல்லை. நீராட்டுவதற்காக வெளியில் கொண்டுபோகப் பட்டிருந்தது. அதனைப் புலவர் அறியார். பசியாலும் வெயிலாலும் தாக்கப்பட்டு வழிநடந்த களைப்பால் சற்றுப் படுக்கலாம் என அக்கட்டிலில் படுத்தார். மெய்மறந்து நன்றாகத் தூங்கிவிட்டார். அவ்வமயம் அரசன் அப்பக்கம் அணுகினான். முரசு கட்டிலில் உறங்கும் புலவரைக் கண்டான். கண்டுசினந்தானா? உடைவாளை உருவி ஓங்கித்தான் வெட்டினானா? இல்லவே இல்லை. படுத்திருப்பவர் படித்தவர் என்பதை நன்றாக உணர்ந்தமையே அவன் அங்ஙனம் வாளா விட்டமைக்குக் காரணம். அதனோடு அமைந்தானில்லை. வாள் ஏந்தவேண்டிய கையில் விசிறி ஒன்றை ஏந்தினான். ஒருவருக்கும் விசிறியறியாத அவன் கைகள் விசிறவும் தொடங்கிவிட்டன. புலவரோ அஃதொன்றனையும் உணரார். நன்றாகத் தூங்கிக் கொண்டேயிருந்தார். விசிறுவதும் நின்றபாடில்லை. பின் விழித்துக்கொண்டார் புலவர். அரசன் ஆற்றும் அணுக்கத்தொண்டைக் கண்டு அஞ்சினார். அரசனது பேரன்பை எண்ணி மகிழ்வதா? அல்லது அவனுக்குத் தாம் கொடுத்த துன்பத்தை (சிரமத்தை) எண்ணி வருந்துவதா? என்று ஒன்றும் புலப்படவில்லை. இருப்பினும் இரண்டையும்மாறி மாறிச் செய்யலானார். அரசனது உயர்நலப் பண்பைப் பல படப் பாராட்டிப் புகழவும் தொடங்கிவிட்டார். இவ்வரலாற்றை அவர் பாடிய "மாசற விசித்த வார்புறு வள்பின்" என்னும் புறநானூற்றுப் பாடலால் உணரலாம்.

## தொண்டு கல்விக்கே

ஆகவே, அக்கால அரசர்பலரும் இங்ஙனந் தொண்டாற்றியது அப்புலவர்கட்காகவா? அல்ல அல்ல; அவர்



களிடமிருந்த கல்விக்காகவே. இன்ன பிறபற்றினை மேலும் விரிக்கின் பெருகும். ஏன்? இக்காலத்திலும் மிகப் பெருஞ்செல்வர் சிலர், படித்தவர்களை தம்மிடத்திற்கு வரவழைத்துத் தம் கையாலேயே பல அணுக்கத் தொண்டுகள் ஆற்றுவதைக் கண்கூடாக நாம் காணவில்லையா? இதற்குக் காரணம் கல்வியே யல்லவா? எனவே எக்காலத்திலும் எந்நாட்டினும், எவ்வூரினும், யாவரானும் போற்றச் செய்யும் கல்வியே பிள்ளைகளை விளக்கமுறச் செய்யும் நல்விளக்காகும் என்பது எளிதின் உணரப் பெறும்.

—o—

# தாய் மனமும் மாறும்

முகப்பொலிவு, உடற்கட்டு முதலிய இயற்கையழகும் ஆடையணி முதலிய செயற்கையழகும் இல்லாவிடினும், கல்வியறிவு இருக்குமாயின் அப்பிள்ளையைத் தோட்டிமுதல் தொண்டைமான் வரையும் உள்ள அனைவரும் விரும்புவர். மற்றவர் என்ன? பெற்றதாயின் மனமே ஒருவித மாறுதல் எய்தும். எப்படி? ஒருதாய், தன் ஒரே வயிற்றில் பிறந்த பிறப்பால் ஒத்த தன் பல பிள்ளைகட்குள் கல்வியறிவு நிரம்பிய பிள்ளையினையே பெரிதும் விரும்புவாள். காரணம் கல்விச்சிறப்பே. ஏனைய பிள்ளைகளைவிட அப்பிள்ளையினையே உணவு முதலியவற்றால் நன்கு போற்றுவாள். சில படிக்காத பிள்ளைகள் தாய்க்கு நடுநிலைமை இல்லையெனத் தம் தாயை வெறுப்பதற்குக் காரணமும் இதுவே. இது உலகில் எளிதாகக் காணப்படும் வழக்கமாகும். ஆதலின் எப்பாடுபட்டாயினும் கற்றல் நன்று. இதனை ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னனால் பாடப்பட்ட,

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்பு ஓரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும்

என்னும் புறநானூற்றடிகளால் புரிந்துகொள்ளலாம். தாயையே இங்ஙனம் மனந்திரிய வைக்கின்றதென்றால் இக்கல்வியின் பெருமையை என்னென் றியம்புவது?



## தாயின் பேருவகை

பிள்ளைக்கிருக்கும் அஞ்சாமை, தொழில் செய்யும் வன்மை முதலிய ஏனைய திறமைகளைக் காட்டிலும், கல்வியறிவு உடையவனாய் இருக்கும் திறமையைக் கேட்டாலேயே பெற்றோர்கள் பெரிதும் மகிழ்வார்கள். ஒரு பெண்ணை எடுத்துக்கொள்வோம். நீண்ட நாள் பிள்ளையில்லாமல் இருந்தாள். கடிய நோன்பு கிடந்தாள். பின்பு, கருவுற்றாள்; குழந்தையும் பிறந்தது. மகன் பிறந்ததை யறிந்தாள். பெரிதும் உவகை எய்தினாள். பிறந்த மைந்தன் வளர்ந்து பெரியவன் ஆனான். கல்வியறிவிற் சிறந்த சான்றோனாகவும் திகழ்ந்தான். அவன் கல்விச் சிறப்பைப்பற்றிப் பலரும் பலவாறு புகழ்ந்து பேசினர். அப் புகழ்மொழிகளைத் தாய் காதாரக் கேட்டாள். அவ்வமயம், அம்மகனைப் பெற்ற போது அடைந்த உவகையைக் காட்டிலும் பெரியதோர் உவகை அடைந்தாளாம். இதனை நம் வள்ளுவர்,

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

என உவகை ததும்ப உரைத்துப் போந்தார். இக்குறட் கருத்தமைந்த வரலாறு ஒன்று கம்ப இராமாயணத்திலும் காணக் கிடக்கின்றது.

## சிறந்த உவகை

தசரதன் தன் வாழ்நாளில், இராமனால் நால்வகை உவகைகள் அடைந்ததாகக் கம்பர் பெருமான் கூறியுள்ளார். நீண்ட நாள் பிள்ளைப்பேறு இல்லாமலிருந்த தசரதன் இராமன் பிறந்தான் என்பதை அறிந்ததும் பெரிய மகிழ்ச்சியடைந்தானாம். இது முதல் உவகை. பின் இராமன் சீதைக்காக மிதிலையை யடைந்து யாவராலும் தூக்கவும் முடியாத பெரிய வில்லை எடுத்து முறித்து வெற்றி

பெற்றான் என்பதைக் கேள்விப்பட்டதும் தசரதன் முன்னிலும் பெரிய மகிழ்ச்சி யடைந்தானும். இது இரண்டாவது உவகை. பின் இராமன் சீதையை மணந்து தசரதன் முதலானோரோடு அயோத்திக்குத் திரும்பினான். அப்போது குல எதிரியும், தசரதனை அடிக்கடி அஞ்சச் செய்தவனுமாகிய பரசுராமன் வழியில் வந்தெதிர்த்தான். அவனை இராமன் வென்று வெட்கித் தலைகுனியச் செய்தான். அக்காட்சியைத் தசரதன் கண்டு முன்னிலும் பெரிய மகிழ்ச்சி யடைந்தானும். இது மூன்றாவது உவகை. பின்பு, நாளாக நாளாகத் தசரதன் கிழப் பருவம் அடைந்தான். ஆதலின் பிள்ளைக்குப் பட்டம் கட்டிவிட வேண்டுமென விரும்பினான். ஒருநாள், வசிட்ட (குரு) முனிவரோடும், அமைச்சர் முதலானோரோடும் கொலுமண்டபத்தில் வீற்றிருந்தபோது அனைவரையும் நோக்கிக் கூறலானான் :—

"எனக்கோ வயது முதிர்கின்றது. ஓய்வெடுத்துக் கொள்ள விரும்புகின்றேன்; ஆதலின் பிள்ளைக்கு முடிசூட்ட விழைகின்றேன்; தங்கள் அனைவர் கருத்தும் என்னவோ ?" என்று தன் விருப்பத்தை வெளியிட்டான். உடனே வசிட்டர் அரசனை நோக்கி, "அரசே! தங்கள் விருப்பம் அதுவானால் அப்படியே செய்யலாம்; அதற்கு மாறாக நாங்கள் என்ன செய்வதற்குளது ? முடிசூட்டப் பெறுவதற்குள்ள இலக்கணமெல்லாம் இராமன் உடையனாய் உள்ளான்; நமது பெரிய அரசியலை ஏற்று இனிது நடாத்துதற்கு வேண்டிய சால்புகள் இராமனைத் தேடிக் குடிகொண்டுள்ளன; ஆதலில் இராமனுக்கே முடிசூட்டலாம்," என்று பதில் கூறினார். அப்புகழ்மொழிகளைச் செவிகுளிரக் கேட்டான் தசரதன். மகனைப் பெற்றபோதும், வில்லொடித்ததாகக் கேள்விப்பட்ட போதும், பரசுராமனை வென்றதை நேரில் கண்டபோதும் அடைந்த மூன்று உவகைகளைக் காட்டிலும் இராமன் சான்றோனைத்



திகழ்ந்து விளங்குவதைப் பலர் புகழ்ந்து கூறக் கேட்ட அப்போதே மிகமிகப் பெரியதோர் உவகை அடைந்தானும். இதனை,

> மற்றவன்சொன வாசகம் கேட்டலும் மகனைப்
> பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில்
> இற்ற அன்றினும், எறிமழு வாளவன் இழுக்கும்
> உற்ற அன்றினும், பெரியதோர் உவகையன் ஆனான்

என நாவல்லவராம் கம்பர் நயம்பட நவின்றுள்ளார். நான்காவது உவகையே சிறந்ததாகக் கம்பர் குறிப்பிட்டிருப்பது கருதி நோக்கத் தக்கதாம்.

**கண்ணேறு கழித்தல் (திருஷ்டி கழித்தல்)**

எனவே பிள்ளைகளின் கல்வியறிவொழுக்கத் திறமையைக் கேட்டபோதே பெற்றோர்கள் பெரிதும் மகிழ்வார்கள் என்பது பெறப்படும். பிள்ளையின் கல்வியறிவுத் திறமையினை அவன் ஆசிரியர் புகழ்ந்து கூறினாலும் அதற்காகக் கண்ணேறு கழிக்கும் தாய்மார்களும் உண்டு. ஒன்று பெற்றாலும் இத்தகைய பிள்ளையையல்லவா பெறவேண்டும்?

**கல்லானும் இல்லானும்**

ஆனால், இங்கு 'நல்வழி' என்னும் நூலிலுள்ள செய்யுள் ஒன்றினைக் குறிப்பிடாமல் விடமுடியவில்லை. கல்வி கற்காவிடினும் கைப்பொருள் (செல்வம்) இருந்தால் அவனையே அனைவரும் விரும்பி வரவேற்பார்கள். பொருள் இல்லாதவனை ஈன்றெடுத்த தாயும் விரும்பாள். எனவே, மனைவி முதலானோர் விரும்பமாட்டார்கள் என்பது வெளிப்படை. அவன் வாய்ச்சொல்லுக்கு ஒருவித மதிப்பும் இருக்காது. அவன் திறமையற்றவனாகக் கருதப்பட்டு இகழவும் படுவான். ஆதலின் கல்வியில்லாவிட்டாலும் கைப் பொருளிருந்தால்தான் தாய் முதலிய அனைவராலும் விரும்பப்படலாம் எனும் கருத்தில்,

**கல்லானே யானாலும் கைப்பொருள்ஒன் றுண்டாயின்**
**எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை**
**இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்;**
**செல்லா தவன்வாயிற் சொல்**

என ஔவைப் பிராட்டியார் கூறியுள்ளார்.

## கல்விக்கே பெருமை

இப்பாட்டும் மேற்கூறிய 'ஈன்ற பொழுதின்' என்னும் குறளும் எதிர்மாறாக உள்ளனவே என்று வினவலாம். அப்படியொன்றுமில்லை. இப்பாட்டின் கருத்துக்கும் கற்றவர்க்கும் ஒருவிதத் தொடர்பும் வைத்து ஔவையார் பாடினாரிலர். கல்லாதவர்கட்குள்ளும் ஏழை பணக்காரர் உண்டல்லவா? அவர்களைக் குறித்தே இப்பாட்டு பாடப்பட்டதாகும். கல்லாத ஏழையைத்தான் தாய் முதலிய அனைவரும் விரும்பமாட்டார்கள். கல்லாத பணக்காரனைக் கல்வியில்லாவிடினும் பணமிருப்பதை நோக்கியாயினும் தம் நன்மைக்காகப் போற்றுவார்கள். ஆனால், கல்வியறிவுள்ளவன் ஏழையாயிருப்பினும் சரியே; பணக்காரனாய் இருப்பினும் சரியே; கல்விச் சிறப்பு நோக்கி, அவனை அனைவரும் போற்றியே தீர்வார்கள். மேலும், இப்பாட்டிலுள்ள "கல்லானே யானாலும்" என்ற உம்மையை ஊன்றி நோக்கின் உண்மை விளங்கும். என்ன? அவ்வும்மையானது 'கல்லானேயானால்தான் அப்படி; கற்றவனாய் இருப்பின் கைப்பொருள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனை எதிர்கொண்டு வரவேற்றே தீர்வர் என்னும் கருத்தைப் புலப்படுத்தி, மேலும் கல்விக்கே பெருமையளிக்கின்றது. எனவே, பெற்ற தாய் முதல் அனைவரையும் தம் பக்கம் திரும்பச் செய்யும் கல்வியே பிள்ளைகட்குப் பெரிய விளக்கமாகும்.

# வேற்றுமை இல்லை

## வயது வேற்றுமை இல்லை

மேலும், கல்விக்குச் சிறியவர் பெரியவர் என்ற வயது வேற்றுமை யில்லை. கல்லாத முதியோரைக் காட்டிலும் கற்றறிந்த சிறியோனே சிறப்புடையவனாவான். அனைவரும் அவனை வயதில் சிறியவனாய் இருப்பதுபற்றி எளிதாக எண்ண மாட்டார்கள். கல்வியில் பெரியவனாய் இருப்பதுபற்றிப் பெரிதும்போற்றுவார்கள். அரசனும், ஒரு குடும்பத்தில் பிறந்த பல பிள்ளைகட்குள் வயதுபற்றி மூத்தவனை விரும்பமாட்டான். இளையவன் கற்றவனாய் இருப்பின் அவனையே விரும்பி ஏற்றுக்கொள்வான். இதனை அதிவீரராம பாண்டியன் என்னும் அரசனாலேயே பாடப் பெற்ற,

"அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்"

என்னும் வெற்றிவேற்கை அடியாலும், பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் மன்னனாலேயே பாடப்பெற்ற,

**ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்**

என்னும் புறநானூற்றடிகளாலும் உணரலாம். அரசர்களே இங்ஙனம் செய்வார்கள் என்பதற்குச் சான்று இப்பாட்டை ஓரரசன் பாடியிருப்பதே போதுமானதாகும். தற்காலத்தும் வயதில் சிறியவராய்க் கல்விகற்றுள்ளவர்கள்

அரசியல் அலுவல்களை மிகத்திறம்பட நடாத்துவதை நாம் காண்கின்றோம். மேலும் வயதில் மூத்தவர்கள் எல்லோரும் அச்சிறியோர்க்கு அடங்கியும் நடந்து வருகின்றார்கள். அன்றியும் மூத்தோர் சிலர், தம்மிலும் இளைவராய் இருப்பவரை ஆசிரியராகக் கொண்டு வணங்கி அவரிடம் சமயக் (ஞானக்) கல்வி முதலியவற்றைப் பெறுவதையும் காண்கின்றோம். சில கல்லூரிகளில் மாணவர்களைவிட ஆசிரியர் இளையவராய் இருப்பதும் உண்டு.

## உருவு கண்டு இகழாதே

ஆதலின், கல்விக்கு வயது வேற்றுமை இல்லை என்றது தகும். கற்றவர் எவ்வளவு சிறியவராய் இருப்பினும் எவ்வளவு பெரிய காரியங்களையும் செய்துமுடிக்கும் ஆற்றல் உடையவர் ஆவார்கள். பெரிய தேரைச் செலுத்துவது சிறிய அச்சாணியல்லவா? மடலால் பெரிய தாழம்பூவைக் காட்டிலும்; மடலால் சிறிய மகிழம்பூ மிகுந்த மணத்தைக் கொடுக்கவில்லையா? உருவத்தால் பெரிய கடல் குளிக்கவும் உதவவில்லையே! சிறிய ஊற்று நீரோ குடிக்கவும் உதவுகின்றதே! ஆதலின், உடலாலும் வயதாலும் சிறியவர் என்பது பற்றி இகழ்ந்து விடக்கூடாது. அவர் தம் கல்விப் பெருமையினையே நோக்க வேண்டும். இதனை,

மடல்பெரிது தாழை மகிழ்இனிது கந்தம்
உடல்சிறியர் என்றிகழ வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்

என்னும் வாக்குண்டாம் செய்யுளும்,

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னார் உடைத்து

என்னும் குறளும் நன்கு அறிவுறுத்துகின்றன. எனவே,



இப்பெருஞ் சிறப்பைத் தரும் கல்வியைப் பெறுவதற்கே பிள்ளைகள் முயலவேண்டுமன்றோ?

## சாதி வேற்றுமையில்லை

இன்னும் ஒரு சிறப்புண்டு. கல்விக்குச் சாதி வேற்றுமையென்பது சற்றும் இல்லை. எக்குலத்தில் பிறந்தாலும் கற்றவரே உயர்குலத்தினராவார்கள். கல்லாதோர் தாழ்ந்த குலத்தினராகவே கருதப்படுவார்கள். மேல் குலத்தாராகச் சொல்லிக் கொள்ளுவோர் பலர், கீழ்க்குலத்தாருள் கற்றறிந்தோர்க்கு அடங்கிப் பணிந்து நடப்பதையும் அவரிடம் பாடங் கேட்டுக் கொள்வதையும் நாம் கண்டு வருகின்றோம். இதற்கு எடுத்துக் காட்டாக எத்தனையோ வரலாறுகளும் உள்ளன. தோணி செலுத்துபவன் எக்குலமானால் என்ன? அவனைப் போலத்தான் கற்பிப்பவனும்! மேலும், உலகம் உரிமைக்குப் போராடும் இவ்விருபதாம் நூற்றாண்டில் சொல்லவே வேண்டியதில்லை. கல்வி எவற்றையும் அடக்கித் தானே முன்னணியில் நிற்கும். எனவே மேல்குலத்தில் பிறந்த கல்லாதாரைக் காட்டிலும், கீழ்க் குலத்தில் பிறந்த கற்றோரே சிறப்புடையர் ஆவார்கள். கல்லாதவர் விலங்கிற்கு ஒப்பானால் வேறு கூறுவானேன்? இதனை,

வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே

என்னும் புறநானூற்றடிகளும்,

மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு

என்னும் திருக்குறளும்.

"கடைநிலைத்தோர் ஆயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலைத்து வைக்கப் படும்."

"தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டான் என்றிகழார்—காணா
அவன்துணையா ஆறுபோ யற்றே நூல் கற்ற
மகன்துணையா நல்ல கொளல்"

என்னும் நாலடியாரும்,

"நாற்பால் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றிலனாயிற் கீழிருப் பவனே."

"எக்குடியிற் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பார்"

என்னும் நறுந்தொகையும் நன்கு வலியுறுத்துகின்றன. எனவே, பிள்ளைகட்குள்ள வயது வேற்றுமை சாதி வேற்றுமை என்னும் இருட்டுக்களைப் போக்கி ஒளிவீசச் செய்யும் விளக்கு, கல்வியே என்பது இனிது புலனாகும்.

## பெற்றோர் கடமை

பிள்ளைகளின் கல்வி பெற்றோர் கையில்தான் உள்ளது. பெற்றோர்கள், இக் கல்வித் தேவையை உணர்ந்து தம் பிள்ளைகளைக் கட்டாயம் படிக்க வைக்கவேண்டும். பெற்று உடல் கொழுக்க வளர்த்து விட்டுவிடுவது கூடாது. ஏழைகளில் சிலரும் செல்வரில் சிலரும் தம் பிள்ளைகளை நன்கு படிக்க வைக்காமல் இருக்கின்றார்கள். அவர்களில் ஒரு சிலரே அங்ஙனம் செய்பவர்கள். இங்கு எடுத்துக் கொள்ளும் ஆராய்ச்சி அன்னோரைப் பற்றியதே.

## ஒருசில ஏழைகள்

ஒருசில ஏழைப் பெற்றோர்கள், தம் பிள்ளைகளை இளமையிலேயே மாடுமேய்த்தல், பயிர்வேலை செய்தல்,



நெசவு முதலிய தொழில்களில் ஈடுபடுத்திவிடுகின்றார்கள். இதற்குக் காரணம் கொடிய வறுமையே. இருப்பினும் அங்ஙனம் செய்தல் கூடாது. எப்பாடு பட்டாவது குறிப்பிட்ட ஓரளவேனும் படிக்க வைத்தே தீரவேண்டும். பின்னரே தொழிலில் ஈடுபடுத்த வேண்டும்.

## ஒருசில செல்வர்கள்

ஒருசில செல்வர்கள் "நம்பிள்ளைக்கு என்ன குறைச்சல், நாம்தாம் நிறைய வீடு வாசல், நிலநீர், நகை நட்டு முதலிய செல்வங்களைத் தேடி வைத்து விட்டோமே; பிள்ளை நகத்தில் அழுக்குப் படாமல் சாப்பிட்டுக் கொண்டு நம் கண்ணுக்கு அழகாக இருந்தாலேயே போதும்" என்றெண்ணிக் கொழுக்க வைக்கின்றார்கள். அப்பிள்ளையும் அச்செல்வங்களை நம்பி இறுமாந்து திரிகின்றான். பெற்றோரும் அவனை மிரட்டிப் பள்ளிக்கூடம் அனுப்பாமல் மேலும் மேலும் செல்லம் கொடுக்கத் தொடங்குகின்றார்கள். இது அறவே கூடாது. இதனால் பிள்ளையானவன் பிற்காலத்தில் விரைந்து கெடுவான். ஏனெனில், இச்செல்வங்கள் நிலையுடையன அல்ல அல்லவா? வள்ளுவர் கூற்றுப்படி "கேடில் விழுச் செல்வம்" கல்வியன்றோ? ஆதலின் பெற்றோர்கள். தமக்குப் பின்னால் தம் பிள்ளைக்காக வைத்துவிட்டுப் போக வேண்டிய எச்சம் (மீதியான சொத்து) கல்வியே யாகும். ஏனையன சிறந்த சொத்தாகா. இதனை,

எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற (விச்சை - கல்வி)

என்னும் நாலடியாரால் நன்கு தெளியலாம். ஆதலின் செல்வர்கள், தம் பிள்ளைகட்கு முதன்மையான செல்வமாகக் கல்வியைத் தேடி வைத்து, ஏனைய செல்வங்களை ஒரு

சிறு துணையாக வைத்துச் செல்வதே தக்க அறிவுடைமையாகும்.

## ஒருசில (வைதீகப்) பெரியோர்கள்

ஒருசில வைதீகர்கள் தம் பிள்ளைகளைப் படிக்கவைக்காமைக்குக் காரணம் வேறு. படிக்க வைத்தால் கடவுள் இல்லையென்பான்; தீண்டாமை கூடாதென்பான்; கைம்பெண்ணைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்பான்; என்பன பற்றிய அச்சமே அதன் காரணமாகும். இவ்வச்சத்தால் வெளியூர்களிலுள்ள கல்லூரிகட்கு அனுப்புவதில்லை. அப்பிள்ளைகளை இளமையிலேயே சமயத்துறையில் (பக்தி மார்க்கம்) திருப்பிவிடுகின்றனர். அவர்களின் அச்சத்திற்குத் தக்கபடியே சில பிள்ளைகளும் நடந்து கொள்கின்றார்கள். ஒரு சிறிது கல்வி பெற்றதுமே இறுமாப்பெய்துகின்றனர். பிறரை மதிப்பதே இல்லை. தலைகால் தெரியாமல் துள்ளிக் குதித்துக் கூத்தாடுகின்றனர். மனம்போன போக்கெல்லாம் போகின்றனர். ஆனால் மேற்கூறிய கொள்கைகள் சரியா? தப்பா? என்பதைப் பற்றி இங்கு ஆராய்ச்சி தேவையில்லை. அம்முற்போக்கான கொள்கைகளெல்லாம் கல்வியே காரணமாகாது. கூட்டுறவும் உலகப் போக்குமே அவற்றின் இன்றியமையாமைக் காரணங்களாகும். கல்வியறிவில்லாத பிள்ளைகள் சிலரும் கூட்டுறவின்படியும் உலகப் போக்கின்படியும் அவ்வகைக் கொள்கையுடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஆதலின் வைதீகப் பெரியார்கள், கல்வியால் பிள்ளை கெட்டுவிடுவான் என அஞ்சிப் படிக்க வைக்காமல் இருத்தலாகாது. அவ்வச்சத்திற்கேற்றபடி, பிள்ளைகளும் தீயொழுக்கங்களிற் சென்று பெற்றோரை அச்சுறுத்திப் பேரைக் கெடுத்துவிடக் கூடாது. மேலும் ஒருவரைப் பற்றி நல்லவரா கெட்டவரா



என அறிந்து கொள்ளவேண்டுமாயின் அவர் பிள்ளையைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம். இக்கருத்தை,

> தக்கார் தகவிலர் என்பது அவரவர்
> எச்சத்தாற் காணப் படும் (எச்சம் – மக்கள்)

என்னும் குறளால் உணரலாம். வைதீகப் பெரியோர்கள் அஞ்சுவதும் இதுபற்றியே. எனவே பெற்றோரும் பிள்ளைகளும் இத்தகைய கோளாறுகட்கிடமில்லாதபடி நடந்து கொள்வதே நன்முறையாகும்.

## பூச்சாண்டி

பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகாமல் ஏமாற்றுவார்களேயானால், அவர்களை அப்படியே விட்டுவிடக் கூடாது. சிறிதும் செல்லம் கொடுக்காமல் தண்டிக்க வேண்டும். அதற்கும் மீறுகின்ற பிள்ளை இருந்தால் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன? சில பெற்றோர்கள் பிள்ளைகள் சாப்பிடாவிடின், "சாப்பிடுகின்றாயா? அல்லது பள்ளிக்கூடம் போகின்றாயா?" என்று கூறிப் பூச்சாண்டிக்குப் பதில் பள்ளிக்கூடத்தைக் காட்டி அச்சுறுத்துகின்றார்கள். அப்பிள்ளைகளும் பள்ளிக்கூடத்தைப் பூச்சாண்டியாக எண்ணிச் சாப்பிடத் தொடங்கிவிடுகின்றனர். என்னே அப்பெற்றோர்களின் அறியாமை?

## குருகுலம்

பண்டைக் காலத்தில் பெற்றோர்கள் தம பிள்ளைகளைத் தம் வீட்டிலேயே வைத்துக்கொண்டிருப்பதில்லை. ஆசிரியர் வீட்டில் விட்டுக் கல்வி கற்கச் செய்வது வழக்கம். இதற்குக் 'குருகுல வாசம்' எனப் பெயர். எல்லாப் பொறுப்பும் ஆசிரியருடையனவே. பெற்றோர்கள் ஒன்றும் குறுக்கிட

மாட்டார்கள். ஆசிரியர்க்கு வேண்டிய உதவிகளை மட்டும் செய்துகொண்டு வருவார்கள். இது மிகவும் நல்லமுறை.

## பொம்மையே போதும்

ஆனால், இக்காலத்திலோ சில பெற்றோர்கள் பிள்ளையைப் பொம்மைபோல் அழகுபடுத்தி வண்டியில் அமர வைத்து நோகாமல் பள்ளிக்கூடம் அனுப்புகின்றார்கள். பள்ளிக்கூடத்திலும் ஆசிரியர் பிள்ளையை மிரட்டக் கூடாதாம். அப்படிப் பிள்ளையை மிரட்டியதாகக் கேள்விப் பட்டுவிட்டாலோ வந்தது ஆசிரியர்க்குப் பெருந் தீங்கு. பெற்றோர்களின் கண்களில் இரத்தமே வந்துவிடும். ஆசிரியரைப் பலவிதமாக அச்சுறுத்தி அடக்கத் தொடங்கிவிடுவார்கள். இவர்கள் பள்ளிக்கூடத்திற்குத்தான் ஏன் அனுப்பவேண்டும்? வீட்டிலேயே வைத்துக் கொண்டிருக்கலாமே! இவர்கட்குப் பிள்ளையும் வேண்டியதில்லையே! ஒரு பொம்மை இருந்தாலேயே போதும் அல்லவா?

## கயவன் இரக்கம்

கற்றறிந்த ஆசிரியர் ஒருவர் கல்வியறிவில்லாக் கயவன் ஒருவனை அடைந்தார். உன் பிள்ளையைப் படிக்கவைக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அதற்கு அக் கயவன், "வேண்டாம், வேண்டாம், என் பிள்ளைக்கு முன்னோர் செய்துவந்த தொழிலுமுண்டு. ஏர் கலப்பை உண்டு. அவையே போதும்; ஆதலின் என் பிள்ளை படிக்கவும் வேண்டாம்; பிரம்படிபட்டு நோகவும் வேண்டாம்; சள்ளையாம் சுவடி தூக்கிச் சற்றும் வருந்த வேண்டாம்; முள்ளுநிகரிய எழுத்தாணி கொண்டு முறியிலே எழுதி இளைத்துக்



களைத்துப் போகவும் வேண்டாம்; பெற்ற தாய் களிக்கும் படியாகப் பிள்ளையென்றிருந்தாலேயே போதும்" என்று இரங்கிக் கூறினனும். என்னே அக்கயவனின் மடமை! இக்கதையினை நகைச்சுவை ததும்ப நமச்சிவாய முதலியாரால் இயற்றப்பட்ட "கயவன் கல்வியருமை யறிந்தது" என்னும் நூலிலுள்ள,

பிள்ளையும் படிக்க வேண்டா
பிரம்படி படவும் வேண்டா
சள்ளையாம் சுவடி தூக்கிச்
சங்கடப் படவும் வேண்டா
முள்ளெனும் ஊசி கொண்டு
முறியினில் எழுத வேண்டா
பிள்ளையென் றிருந்தால் போதும்
பெற்றவள் களிக்க என்றான்

என்னும் செய்யுளால் செவ்விதின் உணரலாம். பிள்ளையை நோக்கிப் பெரிதும் இரக்கங்கொண்ட அக்கயவனின் அறிவின்மைக்கு நாமும் பெரிதும் இரங்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

## தந்தை ஆற்றவேண்டிய உதவி

ஆதலின், 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' (புறநானூறு) என்னும் பொன்முடியாரின் பொன்மொழியை ஒவ்வொரு பிள்ளையின் தந்தையும் உணர வேண்டும். தந்தை மகனுக்கு ஆற்றவேண்டிய உதவி, நிறைந்த செல்வம் தேடிவைத்துத் திருமணமும் செய்து வைப்பதல்ல. பலர் கூடியுள்ள ஒரு கழகத்தில், தன் பிள்ளை மற்றையோரினும் முன்னணியில் நிற்கும்படியாகக் கல்வியறிவைப் புகட்டுவதுதான் சிறந்த உதவியாகும்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்

என்பது வள்ளுவர் வாக்கன்றோ?

“தந்தையொடு கல்வி போம்”

என்னும் பாடல் பகுதியும் ஈண்டு நோக்கத்தக்கது.

## சில தாய்மார்களின் பிற்போக்கு

பிள்ளைகளின் கல்விக்குத் தாய்மார்களும ஒத்துழைக்க வேண்டும். சில தாய்மார்கள் தம் பிள்ளைகளை உணவில் ஒருவிதக் குறைபாடும் இன்றிச் சரிவர உண்ணச் செய்கின்றனர். அதுபோல் கல்வியில் கருத்துச் செலுத்துவதில்லை. பிள்ளை நன்கு படிக்கவில்லையென்று தந்தை மிரட்டினால் அவரிடம் சண்டைக்குப் போய்விடுகின்றனர். பள்ளிக்கூடம் போனவிடத்தில் தம் பிள்ளைக்குத் தப்பித் தவறி ஏதாயினும் சிறு தீங்கொன்று ஏற்பட்டுவிடினும் அப்படியே சோர்ந்துவிடுகின்றனர். “என்ன? என் பிள்ளை படித்துத்தான் பிழைக்க வேண்டுமென்ற கட்டாயம் ஒன்றும் இல்லையே; அவனுக்குச் சொத்தில்லையா? அவன் அப்பன் பாட்டன்மார்கள் அனைவரும் படித்துத்தான் பிழைத்தார்களா? இன்னும் உலகத்தில் எல்லோரும் படித்துத்தான் பிழைக்கின்றார்களா? போதும்! போதும்! படிப்பும் கெட்டது, பள்ளிக்கூடமும் கெட்டது” என்று மகாநாடு கூடிப் பேசத் தொடங்கிவிடுகின்றனர். பள்ளிக்கூடத்தை வெறுக்கின்றனர். ஏன்? கற்றவர்களையும் கல்வி உலகத்தையுமே கசப்பாய் எண்ணிப் பேசுகின்றனர். இவர்களின் மூடத்தனமான அன்பை என்னென்று எடுத்துரைப்பது? ஆனால் இப்பழைய பல்லவிகள் எல்லாம் எதிர்கால உலகிற்கு ஏற்கவே ஏற்கா. எனவே, கல்வியே பிள்ளைகளை



முன்னணியில் நிற்கச் செய்யும் என்பதைப் பெற்றோர்கள் உணர்வார்களாக.

## பிள்ளைகளின் திருவிளையாடல்

ஆனால் பெற்றோர்களின் முயற்சி மட்டும் போதாது. பிள்ளைகட்கும் கல்வியில் உண்மையான ஊக்கம் இருக்க வேண்டும். இல்லாவிடின் பயனில்லை. சில பிள்ளைகள் பெற்றோர்கள் பள்ளிக்கூடம் அனுப்பினால் போவதில்லை. சிலர் போவதுபோல் போக்குக் காட்டிவிட்டு ஊர் சுற்றுவார்கள். பின்பு பள்ளிக்கூடம் விடும் நேரத்திற்கு நல்லவர் போல் வீட்டுக்கு வந்துவிடுவார்கள். பெற்றோரோ, தம் பிள்ளை பள்ளிக்குச் சென்று வந்ததாகவே நம்பியிருப்பர். அப்பிள்ளைகள் அங்ஙனம் பள்ளிக்குச் சென்றாலும் வகுப்பில் ஆசிரியர் நடத்தும் பாடங்களைச் சற்றும் உணர்வதில்லை. வீட்டில் வந்தும் பாடநூற்களைத் தொட்டுப் பார்ப்பதும் இல்லை. சில பிள்ளைகள் படிப்பதற்காக வெளியூர்க்கு அனுப்பப்படுகின்றனர். அங்குச் சென்றதும் வந்த வேலையை மறந்து விடுகின்றனர். தம்மை அடிக்கடி அளவுக்கு மீறி அழகு (ஒப்பனை) செய்துகொள்கின்றனர். அடிக்கடி சிற்றுண்டிச் சாலைக்குச் செல்கின்றனர். திரைப்படம் நாடகம் முதலிய காட்சிகட்கு ஓயாமல் சென்று கண் விழிக்கின்றனர். புகை பிடிக்கின்றனர். இன்ன பிற திருவிளையாடல்களையும் செய்கின்றனர். இங்ஙனம் பணத்தைப் பாழாக்குவதோடு உடம்பையும் கெடுத்துக்கொள்கின்றனர். வந்தவேலையும் முடிந்தபாடில்லை. இன்னோரின் ஆரவாரங்கள் அனைத்தும் ஆண்டிறுதியில் நடக்கும் தேர்வில் தோல்வியுற்றாலும் வெட்கப்படுவதில்லை. கவலைப்படுவதுமில்லை. இவர்கள் இப்போது இங்ஙனம் நடந்துகொண்டாலும் இத்தகைய கெட்டபழக்கங்களால் பிற்கால வாழ்க்கையில் பெரிதும் தாக்கப்படுவார்கள் என்பது உறுதி. ‘இளங்கன்று பயமறியாது’ அல்லவா?

## இளமைத் துடுக்கின் எதிரொலி

இளமைத் துடுக்கின் எதிரொலிக்கு ஆளான சிலர், தம் பிற்கால வாழ்க்கையில் அத்துடுக்கை எண்ணி யெண்ணிப் பெரிதும் வருந்துகின்றனர். சில காரியங்கள் முட்டுப்பாடுற்ற போது, அந்தோ! நாம் இளமையில் ஒழுங்காகக் கற்றிருந்தால் இத்தொல்லைகட்கு இடமில்லாமல் வாழலாமே என்றேங்குகின்றனர். நாம் படிக்காவிட்டாலும், நம் பெற்றோராவது நம்மை வற்புறுத்திக் கண்டித்துப் படிக்க வைக்கவில்லையே என்று பெற்றோரை எண்ணி நோகின்றவரும் உண்டு. அங்ஙனமே ஒருவன், இறந்துபோன தந்தையை நொந்து திட்டியதாகத் தனிப்பாடல் ஒன்று காணப்படுகின்றது. "என் தந்தையாகிய கொடியோன் என்னைப் பெற்றுப்போட்டுப் போனது எதற்காக? தனக்குக் கொள்ளி வைப்பதற்கும், தான் பட்ட கடனைக் கொடுப்பதற்காகவுமே; யான் அடங்காமல் துள்ளித் திரிந்த காலத்திலேயே என் துடுக்கை யடக்கிப் பள்ளிக்கூடம் அனுப்பாமல் வீணாய்க் கெடுத்து விட்டுப் போனான்; அவனை யான் தற்போது என்ன செய்யமுடியும்?" என்று நொந்து புலம்பினானாம். இந்நிகழ்ச்சியை உணர்த்தும் அப்பாடல்,

அள்ளிக் கொடுத்திடும் செம்பொனும்
ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்குமே
என்னைக் குறித்த தல்லால்
துள்ளித் திரிகின்ற நாளையி
லேயென் துடுக்க டக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை
யாகிய பாதகனே.

என்பதாகும். இங்குத் தந்தையைப் பாதகன் என்று கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.



## ஒரு மைந்தன் பதில்

இங்கிலாந்தில் பெரியவழக்கறிஞர் ஒருவர் இருந்தாராம்.
அவரோ சட்டத்தில் கைதேர்ந்த நிபுணர். எவ்வித வழக்
கையும் வெல்லும் ஆற்றல் மிக்கவர்; ஒவ்வொரு வழக்கிற்
கும் ஏராளமான பொன் (Fees) பெற்றுக்கொண்டே வழக்
காடுவது வழக்கம். அன்னாருக்கு மைந்தன் ஒருவன் இருந்
தான்; அவன் போதிய கல்வியறிவு பெற்றவனில்லை. ஊர்
சுற்றி வந்தான். பொய்யும் திருட்டும் அவனுக்குத்தோழர்
கள். ஓரிடத்தில் ஒருசமயம் திருடினான். பிடிக்கவும் பட்
டான். தீர்ப்புக்காக நீதி மன்றத்திற்குக் கொண்டு வந்து
நிறுத்தவும் பட்டான். நீதி மன்றத்தினர், அவனை நோக்கி
"உன் தந்தை உயர்ந்த நிலையில் உள்ளாரே; நீ மட்டும்
ஏன் இங்ஙனம் தாழ்ந்த செயல்களைச் செய்து தந்தையின்
புகழைக் கெடுக்கின்றாய்" என்று வினவினர்; அதற்கவன்,
"நான் என்ன செய்வேன்? என் தந்தையார் என்னை நல்ல
விதத்தில் பழக்கினாரிலர். என்னைக் கெடுத்தவரும் அவரே;
அவரிடம் நான் போய், எதைப் பற்றியேனும் சொல்லும்
படியாக அடிக்கடி கேட்பேன். அதற்கவர் தம்பீ! நான்
தற்போது மிக்க வேலையாய் உள்ளேன்; ஆதலின் என்னைத்
தொந்தரவு செய்யாதே. நீ போய் விளையாடு; நீ போய்
விளையாடு; (I am very busy; Don't worry me; you go and
play; go and play) என்று சொல்லிச் சொல்லி அனுப்பி
விடுவார்; அதனாலேயே நான் இங்ஙனம் கெட நேர்ந்தது"
என்று பதில் கூறினனாம்.

## பெருமை நன்று

பெற்றோர்களே பிள்ளைகளை இங்ஙனம் கெடுத்து விடக்
கூடாது. பிள்ளைகளும் வீணே திரிந்து கெட்டுவிடக்கூடாது.
மேலும், சிறுவர்கள் பெற்றோர்களை அண்டி ஒருவிதச் சுறு

சுறுப்புடன் இதென்ன? அதென்ன? என்று அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருக்கும் வழக்கம் உடையவர்கள்; அச்சமயம் பார்த்து அவர்கட்குக் கதைவாயிலாகவும், விளையாட்டு வாயிலாகவும் நல்ல கருத்துக்களை எடுத்தெடுத்துப் புகட்டவேண்டும். புகட்டி நல்வழிகளில் பழக்கிவிடவேண்டும். அங்ஙனமின்றிச் சில பெற்றோர்கள் கெட்ட பேச்சுக்களையும், பயனில்லாப் பாட்டுக்களையுமே கற்றுக் கொடுக்கின்றனர். அவற்றைக் கேட்டு மகிழும் அளவிலேயே நின்றுவிடுகின்றனர். அதனால் பிள்ளைகள் ஒருவிதத் திறமையும் இல்லாதவராகிப் பிற்கால வாழ்க்கையில் பெரிதும் துன்புறுகின்றனர். இத்தகைய பெற்றோர்கள் பிள்ளையைப் பெற்றுக் கெடுக்குந் தீவினைக்கு ஆளாவதைக் காட்டிலும் பெறாமல் இருப்பதே பெரிதும் நல்லதாகும். ஆகவே, பெற்றோரின் முயற்சியும் பிள்ளையின் ஊக்கமும் சேர்ந்து ஏற்றப்பட்ட கல்வி விளக்கே மலைமேல் விளக்குப்போல் மாண்பு கொடுக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

— o —

# எப்போதும் கற்க !

## கல்விக்குக் கரையில்லை

மேலும் படிப்பென்றால் வெறும் கையெழுத்துப் போடத் தெரிந்தால் போதுமா? அல்லது அரைகுறையாக எழுதப்படிக்கத் தெரிந்துவிட்டால்தான் போதுமா? சிறிதும் போதாவாம். ஆனால், ஒன்றும் தெரியாததற்கு இது மேலே தவிர, இவ்வளவில் முழு நன்மையும் பெற்றுவிட முடியாது. ஊமையனுக்கு உளறுவாயன் கண்டப் பிரசண்டன் என்றது போலத்தான். ஆதலின் நிரம்பக் கற்க வேண்டும். எவ்வயதிலும், எந்நாளிலும் படித்துக் கொண்டேயிருக்கவேண்டும். குறிப்பிட்ட சில நூற்களைப் படித்துமுடித்ததும் யான் நிரம்பக் கற்றுவிட்டேன்; என்னையும் வெல்வாருண்டோ என்று இறுமாப்படைந்து ஒருவரையும் மதியாமல் திரியலாகாது. நாள் முழுமையும்-ஏன்? வாழ்நாள் முழுமையும் படித்தாலும் முற்றிலும் படித்து விட்டதாகக் கருத முடியாது. ஏனெனின் கல்விக்கே ஒருகரை (அளவு) இல்லை; மிகப்பரந்து பட்டதாகும். அதனைக் கற்பார்க்கோ வாழ்நாள் மிகச் சிறிது. இந்நிலையில் ஒருவன் தான் முழுமையும் கற்று முடித்துவிட்டதாகக் கருதி இறுமாப்படைய இடமுண்டா? எனவே, எவ்வளவு கற்றிருப்பினும் அதனை ஒரு கைப்பிடி மண்ணின் அளவாகவே கருதவேண்டும். இன்னும் கல்லாதவற்றை உலகத்தின் அளவாகக்கருதி அடக்கமுறல் வேண்டும். கல்விக்கு அரசியாகிய கலைமகளே

இன்னும் படித்துக்கொண்டிருப்பதாகக் கூறுவது வழக்கம். எனவே, ஒருவருக்கொருவர் "யாமே சிறந்தவர்; யாமே சிறந்தவர்" என்று வீண் பெருமை கூறிக்கொள்ளக் கூடாது. எறும்பும் தன் கையால் எட்டுச்சாண் இருக்கத் தான் செய்யும். ஆதலின் வீண் ஆரவாரங்கள் கூடாவாம். இக்கருத்துக்களை,

"முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉங்
கற்றனம் என்று களியற்க"

என்னும் நீதிநெறி விளக்கச் செய்யுளும்,

"கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடலேறு அனையசெருக்கு ஆழ்த்தி—விடல்"

என்னும் நன்னெறிப் பாடலும்,

"ஒருவன் கணனடங்கக் கற்றானும் இல்"

என்னும் சிறுபஞ்சமூலச் செய்யுளும்,

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல

என்னும் நாலடியாரும்,

கல்வி யென்னும் பல்கடல்

என்னும் திருவாசகப் பகுதியும்,

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்—மெத்த
வெறும்பந்த யங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்

என்னும் ஔவையார் தனிப்பாடலும் பறை சாற்றி அறிவிக்கின்றன. மேலும், தம்மைக் காட்டிலும் மிகுதியாகக் கற்றவரை நோக்கி அவர் கல்வியோடு தம் கல்வியை



யும் ஒப்பிட்டுப் பார்த்து அவர் கல்வியும் நம் கல்வியும் முறையே மலையும் மடுவும்போல் ஈடுதாழ்த்தியாய் உள்ளனவே என்றெண்ணிக் கருத்தழிய வேண்டும்.

தம்மினும், கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று

என்பது குமரகுருபரர் வாக்கல்லவா?

## செந்தமிழும் நாப்பழக்கம்

ஆகவே, எப்பொழுதும் படித்துக்கொண்டே யிருக்க வேண்டும். ஏன்? மணற்கேணியைத் தோண்டத் தோண்டத்தான் தண்ணீர் மிகுதியாக ஊறும். அதுபோலக் கல்வியைக் கற்கக் கற்கத்தான் அறிவு மென்மேலும் வளரும். மற்றும் ஓவியம் கையால் பழகப் பழக அழகு பெறுவது போலவே, கல்வியும் நாக்கால் பேசப் பேசவும் மனத்தால் ஆராய ஆராயவுந்தான் அழகு பெறும்.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என வள்ளுவரும்,

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்"

என ஔவையாரும் கூறிப்போந்தது வேடிக்கைக்காகவா?

மேலும், "பாடமேறினும் ஏடது கைவிடேல்" "ஓதுவது ஒழியேல்" "ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்" என்னும் பொன்மொழிகளும் இக்கருத்துக்கு உறுதுணை செய்கின்றன அல்லவா? "சாந்துணையும் கற்க வேண்டும்" என்று வள்ளுவரும் இதையே வலியுறுத்துகின்றார் அல்லவா?

## தாய்மொழிக் கல்வி

ஆதலின், பிள்ளைகள் சிறிது கற்றதும் நிரம்பக் கற்றுவிட்டதாகச் செருக்கடையக் கூடாது. எப்போதும் படித்துக்கொண்டே யிருக்கவேண்டும். பல கலை நூல்களையும் கற்க வேண்டும். பல மொழிகளையும் படிக்க வேண்டும். குறைந்தது ஒரு மொழியிலாயினும் புலமை பெற்றிருக்க வேண்டும். அதிலும் தாய்மொழிக் கல்வியைக் கட்டாயம் கற்றே தீரவேண்டும்.

## ஓய்வும் உழைப்பும்

ஆனால் மற்றொன்று. எப்போதும் படித்துக்கொண்டேயிருந்தால் ஓய்வு வேண்டாமா? விளையாட்டுத்தான் வேண்டாமா? மேலும் உலக வாழ்க்கைக்கு வேண்டிய வேறு வேலைகள் சிலவற்றைச் செய்யவுந்தான் வேண்டாமா? என்று பல வினவலாம். உண்மைதான். மூளைக்கு ஓய்வு கொடுக்கத்தான் வேண்டும். விளையாடவுந்தான் வேண்டும். வேறு வேலைகளைச் செய்யவுந்தான் வேண்டும். இங்கொன்று நினைவிற்கு வருகின்றது. "வேலை" செய்ய வேண்டிய நேரத்தில் வேலை செய்; விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடு" என்னும் கருத்தமைந்த ஆங்கிலப் பொன்மொழி (Work while you work; Play while you play) ஒன்றுண்டு. அதன்படி விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடியே தீரவேண்டும். வேலை செய்ய வேண்டிய நேரத்தில் வேலை செய்தே தீரவேண்டும். ஆகவே வெறும் படிப்பு மட்டும் போதாது. இடையிடையே ஓய்வும் வேண்டும். இவ்விரண்டும் இருந்தால்தான், பிள்ளைகள் மேலும் படிப்பதற்குரிய உணர்ச்சியும் ஊக்கமும் மகிழ்ச்சியும் ஏற்படும். அப்படிப்பே பசுமரத்தாணிபோல் நன்கு பதியும்.



## சோம்பேறிகட்கே

ஆனால், எப்போதும் படித்துக்கொண்டே யிருக்க வேண்டும் என்று முதலில் கூறப்பட்டதே; இரண்டாவதாக இடையிடையே ஓய்வும் உழைப்பும் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளதே. இங்கு முன்னுக்குப்பின் முரணாகத் தோன்றவில்லையா? என்ற ஐயத்திற்கிடமுண்டாகலாம். ஆனால் இங்ஙனம் கூறியுள்ளதின் காரணமும் நோக்கமும் வேறாகும். உலகில் சிலர், குறிப்பிட்ட பாட நூற்களைப் படித்துப் பள்ளிக்கூடப் படிப்பினை முடிக்கின்றனர். பின் ஏதாவது தொழில் செய்யத் தொடங்குகின்றனர். அதுபோழ்து எந்த நூற்களையும் கையாலும் தொடுவதேயில்லை. மேலும் அவர்கள், "இளமையில்தான் படித்துவிட்டோமே அதனால்தான் நிரம்ப வருவாயும் வருகின்றதே. இப்பொழுதும் ஏன் வீணாகப் படித்துக் கொண்டு கிடக்க வேண்டும்" என எண்ணுகின்றனர். இச்சோம்பேறிகளைக் குறித்தே, படித்ததைக் கொண்டு இறுமாப்படையலாகாது; எவ்வயதிலும் படிக்க வேண்டும்; எந்நாளிலும் படிக்கவேண்டும்; பலநூற்களையும் படிக்க வேண்டும்; பல மொழிகளையும் படிக்கவேண்டும் என்று பன்னிப்பன்னி வற்புறுத்திக் கூறவேண்டியதாயிற்று. எனவே, இக்கட்டாயத்தை யுணர்ந்து சோம்பலின்றி எப்போதும் கற்பார்களாக.

— o —

# எல்லோரும் கற்க!

## 1. கட்டாயக் கல்வி

பொதுவாக, நம் இந்திய நாட்டையே எடுத்துக்கொள்வோம். இந்நாடு பல்லாற்றானும் ஏழ்மையுற்றிருப்பதற்குக் காரணங்கள் பல இருக்கலாம். ஆனால், அவற்றுள் முதன்மையான காரணம் போதிய கல்வியின்மையேயாகும். சில அயல் நாடுகளில், ஒரு தோற்றம் (சுமார்) நூற்றுக்குத் தொண்ணூறு பேர்க்கு மேல் கல்வி கற்றுள்ளனர். நம் நாட்டிலோ பத்துப் பேர்க்கே அரிதாயிருந்த நிலை மாறி இப்போதுதான் முப்பது பேருக்கு வந்துள்ளோம். கல்வி சிறந்தால்தான் ஒரு நாடு எல்லாத் துறைகளிலும் வளம் பெற முடியும். ஆதலின், அரசியலாரும் அதற்குப் போதிய பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவர்க்கும் கட்டாயக் கல்வி புகட்ட வேண்டும். கட்டாயக் கல்வி பெறாதவர்க்குக் குற்ற வரி (அபராதம்) விதிக்க வேண்டும். மேலும், உணவுக்கே திண்டாடுகின்ற ஏழைப் பொது மக்கள் கட்டாயக் கல்வி பெறுதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துதரல் வேண்டும். அங்ஙனம் செய்தால், நம் நாட்டிலுள்ள எல்லாக் குலத்தினரும் கல்வி பெறுவார்கள் என்பதில் தடையென்ன உளது?

### தன்னலக்காரர்

ஆனால், தன்னலக்காரர்கள் சிலர் இவ்விதத்தில் கருத்து வேற்றுமை உடையவர்களாகக் காணப்படுகின்



றனர். அவர்கள் கதைப்பதென்ன? "கட்டாயக் கல்வி புகட்டினால் கீழ்க் குலத்தினரும் கற்றுவிடுவார்கள். கற்கவே மேல் குலத்தினருக்கு அடங்கமாட்டார்கள். பின்பு, அவர்கள் செய்யக்கூடிய தாழ்ந்த வேலைகளையெல்லாம் செய்து முடிப்பவர் யாவர்? அதனால், உலகமே தலை தடுமாறிப் போகுமே" என்று கூறிக் கட்டாயக் கல்வியை அறவே வெறுக்கின்றனர். இதற்குத் தன்னலர் என்று பெயர் கூறினால் வரும் தப்பென்ன? ஆனால், இத்தன்னலக் கொள்கைக்குத் தற்கால உலகில் சிறிதும் இடமேயில்லை. இன்னோர் உலகப் போக்கை யறிந்து தங்கொள்கையைத் திருத்திக் கொள்வதே நலம் பயப்பதாகும். அனைவரும் படித்துவிடுவதால் ஒருவர்க்கொருவர் அடங்கமாட்டார்கள் என்பதும், உலக காரியங்கள் ஒழுங்காக நடைபெறா என்பதும் ஆதாரம் இல்லாதனவாகும்; பொருத்தம் அற்றனவும் ஆகும். எங்ஙனம் என்று நோக்குவோம். தற்கால உலகியலையே எடுத்துக்கொள்வோம். படித்தவர்கட்குள் மேல் குலத்தாரே கீழ்க் குலத்தார்க்கு அடங்கித் தொழில் (உத்தியோகம்) செய்வதை நாம் நேரில் கண்டு வருகிறோம். அப்படியிருக்கக் கீழ்க் குலத்தார் மட்டும் மேல் குலத்தார்க்கு அடங்காது போய்விடுவார்களா? மேலும், மிகவும் கற்ற அயல் நாடுகளில் உலக காரியங்கள் நடைபெறாமல் நின்று விட்டனவா? இல்லையே. எல்லாம் ஒழுங்காகவே நடைபெற்று வருகின்றனவே. எனவே, கல்வியானது கடவுள் போல அனைவர்க்கும் பொதுவானதாகும். கட்டாயக் கல்வியால் நாட்டு மக்கள் அனைவரும் நன்மை யடைவார்களே தவிர, ஒருவராயினும் ஒரு சிறிதாயினும் தீமை யடையவே மாட்டார்கள். தாழ்ந்த செயல்களாயினும் சரியே; உயர்ந்த செயல்களாயினும் சரியே; அச் செயல்கள் நாளடைவில் தாமே ஒரு திட்டத்திற்கு வந்துவிடும் என்பது

உறுதி. எனவே, குறுகிய மனப்பான்மை நிறைந்த தன்னலக்காரர்களே இங்ஙனம் உண்மை உணராது உளறிக் கொட்டுவார்கள்.

## உத்தியோகப் பித்து

மற்றுஞ் சிலர், எல்லோரும் படித்துவிட்டால், எல்லோர்க்கும் அரசியல் வேலை (உத்தியோகம்) கிடைப்பது எங்ஙனம்? இப்பொழுது படித்துள்ளவர்கட்கே சரிவர வேலை கிடைக்கவில்லையே; அவர்கள் பணத்தைச் செலவழித்துப் படித்துவிட்டு வருவாய் இன்றித் தவிக்கிறார்களே; ஆதலின், எல்லோர்க்கும் கட்டாயக் கல்வி வேண்டியதே யில்லையே என்று ஓலமிடுகின்றனர். இந்நிலைமைக்குக் காரணம் அனைவரும் கற்றமை ஆகாது. நம் மக்களிடத்துள்ள குறைகள் பலவே தக்க காரணங்களாகும்.

## நம் குறைகள்

சில ஆண்டுகட்கு முன்பு, திருவையாறு என்னும் ஊரில் வெள்ளைக்காரர் (ஜெர்மானியர்) ஒருவர் ஒரு சொற்பொழிவு செய்தார். அவர் அங்குக் கூடியிருந்த பொது மக்களை நோக்கிக் கூறியதென்ன? "தமிழ் மக்களே! எங்களிடம் இல்லாத குறைகள் பல உங்களிடம் உள்ளன. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுகின்றேன். ஒன்று:—நீங்கள் ஆங்கிலம் முதலிய அயல் மொழிகளைக் கற்றதும் தாய்மொழியாகிய தமிழை மறந்துவிடுகின்றீர்கள். தாய் மொழியில் பேசுவதையும் தாழ்வாகக் கருதுகின்றீர்கள். அயல் மொழியில் பேசுவதையே உயர்வாகக் கருதி அம் மொழியினையே பேசி வருகின்றீர்கள். இது ஒரு பெருங் குறையாகும். இரண்டாவது:—நீங்கள் கல்வி கற்றதும் சொந்தக் குலத் தொழிலைக் கைவிடுகின்றீர்கள். அதனைச்



செய்யவும் வெட்கப்படுகின்றீர்கள். அரசியல் வேலைகட்காகவே (உத்தியோகம்) கற்றதாக எண்ணி அவ்வேலைகளையே நாடுகின்றீர்கள். இது இரண்டாவது குறையாகும். ஆகவே, இவைபோன்ற குறைகள் பலவற்றையும் நீங்கள் அறவே நீக்கிவிட்டால் விரைவில் முன்னேற்றம் அடைவது திண்ணம்" என்று தெளிவாக எடுத்துரைத்தார். அவர் கூறியதற்கிணங்கவே நம்மவரில் பலர் நடந்துகொள்கின்றனர். அரசியல் வேலைக்காகத்தான் கல்வி கற்பது என்னும் உத்தியோகப்பித்தை இனிமேலாயினும் அறவே அகற்றிவிட வேண்டும்.

எவரும் எத்தொழிலையும் செய்ய உடன்பாடாய் (தயாராய்) இருக்க வேண்டும். எவ்வளவு கற்றிருப்பினும் குலத்தொழில் செய்யச் சிறிதும் பின்வாங்கலாகாது. ஏனைய கைத்தொழில்களையும் செய்ய முன்வர வேண்டும். எனவே, இக் கைத்தொழில்கட்கு உறுதுணையாய் இருப்பதற்கும் அறிவு வளர்வதற்கும் கட்டாயக் கல்வி தேவை என்பதை ஊன்றி உணர வேண்டும். அவ்வளவு கூறுவானேன்? விலங்கினும் வேறுபாடுடைய மனிதன் யான் என்று மார்தட்டிக் கூறும் மாண்பினைப் பெறுதற்காயினும் கட்டாயக் கல்வி வேண்டும் அல்லவா?

## வள்ளுவரின் கட்டாயம்

நம் வள்ளுவர் கல்வியின் கட்டாயத்தை அழுத்தம் திருத்தமான ஒலிக் குறிப்புடன் ஒரு குறளில் உணர்த்தியுள்ளார். அது வருமாறு:—

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

இக்குறளிலுள்ள 'கற்க', 'நிற்க' என்னும் விதித்தல் (கட்டளைப்) பொருள் வியங்கோள் வினைமுற்றுக்கள் கட்டா

யத்தை உணர்த்துவதைத் தமிழிலக்கணம் கற்றோர் நன்கறிவர். மேலும், இக்குறளிலுள்ள இருபத்தேழு எழுத்துக்களுள் இருபத்து மூன்று எழுத்துக்கள், கடின ஓசையுடைய வல்லெழுத்துக்களாக இருப்பதை ஊன்றி நோக்கின் உண்மை புலனாகும். வள்ளுவரின் உள்ளக் கருத்தில் இருந்த கடுமை, வல்லோசை மிக்க சொற்களின் வாயிலாக வெளிப்பட்டு விட்டது. இக்குறளைப் பன்முறை உரக்க வாய்விட்டுப் படிப்பவர்கள் இந் நுணுக்கத்தை நன்குணரலாம். பொதுவாக, நம் பழந்தமிழ்ப் புலவர்கள் கல்லாதாரை, 'மாடு' என்றும் 'மரம்' என்றும் பலவாறு வைத்திருப்பதன் வாயிலாகவும் கல்வியின் கட்டாயத்தை உணர்த்திப் போந்துள்ளனர்.

## 2. பெண் கல்வி

இங்கு மற்றொரு செய்தி குறிப்பிடவேண்டியது இன்றியமையாக் கடமையாகும். "கல்வியென்பது ஆண்கட்கே உரியது; கல்விக்கும் பெண்கட்கும் ஒருவகைத் தொடர்பும் வேண்டுவதில்லை" என்று பேதையர் சிலர் பிதற்றுகின்றனர். அப் பித்தர்கள், "அடுப்பூதும் பெண்கட்குப் படிப்பெதற்கு?" என்பதை அடிக்கடி உருப்போடுகின்றனர். இப் பிற்போக்காளரின் பெற்றியை என்னென்று பேசுவது? பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து நோக்குவார்க்கு உண்மை விளங்காமற் போகாது. எவ்விதத்தில் கல்வி ஆண்கட்கே உரியதாகும்? ஏன் பெண்கட்கும் உரியதாகாதா? பெண்களும் படித்தால் வரும் தீமை என்ன? உலகில், பெண்களும் ஆண்களைப் போலவே ஒத்த (சம) அளவு இருக்கின்றார்கள் அல்லவா? அவர்கள் இல்லாமல் உலகந்தான் நடைபெறுமா? ஆதலின், அவர்களும் கல்வி கற்றால்தான் நாடு மேன்மேலும் நலம் பெற்றுத் திகழும்.



சில ஆண்கள் உண்மை உணராது தம் நலத்தையே கருதிப் பெண் மக்களை அடக்கி ஆள்கின்றனர். ஒருவித உரிமையும் அவர்கட்குக் கொடுப்பதில்லை. ஆண்கட்கு உழைப்பதற்காகவே பெண்கள் பிறந்திருப்பதாகவும் எண்ணுகின்றனர். இம் மடமையோர், இனிமேலாயினும் இன்னபிற எண்ணங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். தம் பெண் குழந்தைகளையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும். அவர்கட்கும் போதிய அளவு கல்வி யறிவைப் புகட்ட வேண்டும். பெண்கள் கல்வி கற்றிருந்தால், தம் பிள்ளைகளை, இளமையிலிருந்தே கல்வி புகட்டிக் கெட்டிக்காரராக ஆக்கிவிடலாம். பிள்ளைகளும், கிட்டத்தட்ட வீட்டிலேயே ஓரளவு தொடக்கக் கல்வியினைப் (ஆரம்பக் கல்வி) பெற்று விட முடியும். நற்பழக்கமும் உண்டாகும். எனவே, தற்போது பெண் கல்வியின் தேவை இனிது புலனாகும்.

## வீட்டு வேலை

மேலும், பெண்களும் படித்து உயர்தர வேலைக்குச் (உத்தியோகத்திற்குச்) சென்றுவிட்டால் வீட்டு வேலைகளை யார் செய்து முடிப்பது? என்று சிலர் கேட்கின்றனர். முன் கூறியுள்ளபடி உயர்தர வேலைக்கே படிப்பு என்பதை அறவே மறந்துவிட வேண்டும். ஏனைய வசதிபெற்றுள்ளவர்கள் வெளி வேலைக்குச் செல்லலாம். இல்லாதவர்கள் வீட்டிலேயே இருக்கலாம். தற்போது படித்து உயர்தர வேலைகளில் இருக்கும் பெண்களின் வீடுகள் பாழடைந்தா கிடக்கின்றன? படித்த பெண்மணிகளும் வீட்டு வேலைகளைச் செய்து முடிக்கவில்லையா? அயல்நாடுகளில் பெண்கள் பலர் படித்திருப்பதால் அந்நாடுகள் நலமிழந்துவிட்டனவா? இல்லையே! மேலும் மேலும் ஓங்கியே வளர்கின்றனவே!

## பழங்காலப் பெண் புலவர்கள்

மற்றும், பண்டைக்காலப் பெண் புலவர்களை எடுத்துக் கொள்வோம். ஒளவையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார், பொன்முடியார் முதலிய பெண்மணிகள் பலர் படித்துப் பெரும் பெரும் புலவர்களாகத் திகழவில்லையா? அவர்களால் பாடப்பட்ட பாடல்கள் இன்னும் நம்மால் படிக்கப்பட்டு வருகின்றனவே!

அவை நம் நாட்டிற்கே பெருமை அளிக்கின்றன அல்லவா? படித்ததனால் அப் பெண்மணிகள் தாழ்த்தப் பட்டுவிட்டார்களா? அஃதொன்றும் இல்லையே. அவர்களும் ஆண்கட்கு ஒப்பாக, இன்னும் மேலாகவும் போற்றப் பட்டல்லவா வருகின்றனர்கள்? பண்டைத் தமிழர்கள் பெண் கல்வியை மறுக்கவில்லை என்பதற்கு இப்பெண்பாற் புலவர்கள் தக்க சான்றாவார்கள் அல்லவா? மற்றும் ஒளவையார் கல்வியுலகிற்குச் செய்துள்ள தொண்டுகள் அளப்பரியனவாயிற்றே?

## சுட்டிக் காட்டும் குறைகள்

சிலர், படித்த பெண்களின் மீதுள்ள குறைகள் சில வற்றைச் சுட்டிக் காட்டுகின்றனர். அக் குறைகட்குக் கல்வியே காரணம் எனவும் கூறித் தங்கள் அறிவின்மையை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். ஏன்? அக் குறைகள் படிக்காத பெண்களிடத்தும் உள்ளனவே. ஆண்கள் பலரிடத்திலும் உள்ளனவே. ஆதலின் எக்குறைக்கும் கல்வி காரணம் ஆகாது. எனவே, பெண் கல்வி நம் நாட்டிற்கு மிகவும் தேவையான தொன்றாகும் என்பதை மலைமேல் ஏறியும் மார் தட்டிக் கூறலாம்.



## 3. முதியோர் கல்வி

சிலர், கொடிய வறுமைக்குத் தம் இளமையை இரையாக்கி, இளமையிலேயே தொழில் செய்து தம் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியவர்களாய் உள்ளனர். அவர்கள், தம் வறுமையிலும், ஓரளவு கடந்துபோன முதிய வயதாலும் பள்ளிக்கூடம் சென்று படிக்க இயலாதவராயும் உள்ளனர். பெண் மக்களுள் பலரும், ஆண் மக்களுள் முதியோர் சிலரும் இந்நிலைமையில் உள்ளனர். ஆதலின் அவ்வவர்க்குத் தக்கபடி பல வகைகளில் கல்வியறிவைப் புகட்டலாம். ஊர்தோறும் இராப் பள்ளிக்கூடம் வைத்து அனைவரையும் படிக்கச் செய்யலாம். அவர்களுக்குக் கல்வியின் பெருமை, சீர்திருத்தம், குழந்தை வளர்ப்பு முறை, கைத்தொழில், பொதுத்தொண்டு, ஒற்றுமை, நாட்டுப் பற்று முதலியவற்றைக் கற்பிக்கலாம். மேலும், திரைப் படம், வானொலி முதலியவற்றின் வாயிலாகவும், கல்வி புகட்டலாம். இம்முறைகளை முதியோர்கள் நன்கு விரும்பி எளிதாகவும் கற்றுக்கொள்வார்கள். மற்றும் வண்டிகளில் (மோட்டார்) நிறைய நூல்களை வைத்து ஊர்தோறும் சென்று ஏழை மக்கட்குத் தந்து படிக்கச் செய்து திரும்பவும் வாங்கிக்கொள்ளலாம். இங்ஙனம் வாரந்தோறும் முறை போட்டுச் செய்யலாம். இதற்குச் "சுற்றி வரும் நூல் நிலையம்" என்பது பெயராகும். அல்லது ஊர் தோறும் ஒவ்வொரு நூல் நிலையமும் ஏற்படுத்தலாம். மேலும், ஊர்தோறும் கல்விக் கழகங்கள் ஏற்படுத்தலாம். அக்கழகங்களில், கல்வி யறிவுடைய பெரியவர்களைக் கொண்டு சொற்பொழிவாற்றவும் ஏற்பாடு செய்யலாம்.

## கேட்டல் நன்று

கற்றவரைப் போலவே, நூற்கருத்துக்களைக் கேட்பவரும் சிறந்தோராவர்.

**"கேள்வியும் கல்வி யாகும்"**

என்பது திவாகர நிகண்டு.

**"கற்றல் கேட்டல் உடையார் பெரியார்"**

என்பது தேவாரம். எனவே, சொற்பொழிவுகளைக் கேட்ப தன் வாயிலாகவும் கல்வியறிவினைப் பெற முடியும். மேலும், கற்றலைவிட கேட்டல் ஏழை மக்கட்கு எளிது மாகும்.

**"கற்றலின் கேட்டலே நன்று"**

என்னும் பழமொழிப் பாடல் எழுந்ததும் இதுபற்றியே. கற்க முடியாவிடினும் கேட்டலையாவது ஒவ்வொருவரும் கட்டாயமாகச் செய்தே தீரவேண்டும். அக்கேள்வியும் கல்வி போலவே தளர்ச்சியில் வந்துதவும். சிறிதளவு கேட்பினும் அதற்குத் தக்க பயன் கிடைத்தே தீரும். "நிறு துரும்பும் பல்குத்த உதவும்" அல்லவா? நம் வள்ளுவரும்,

**"கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்(கு)**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை"**

**"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்"**

என்று கேள்வியின் இன்றியமையாமையை எடுத்தியம்பிப் போந்துள்ளார். இதில் முதியோர் கல்வி அடங்கியுள்ள தன்றோ? மேலும் ஈண்டு,

**"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளும் தலைப்படுவர்"**

என்னும் நாலடியார் கருத்தும் ஒப்பு நோக்கற்பாலது. எனவே, இங்ஙனம் பல்வகைகளிலும் பாடுபட்டு, நாட்டி லுள்ள இளைய, முதிய ஆண்மக்கள் பெண்மக்கள் அனை வரும் கட்டாயக் கல்வி பெறுவார்களாக!

# இருள் நீக்கும் விளக்கு

எனவே, இதுகாறும் கூறப்பட்ட சான்றுகள் பலவற் றையும் கொண்டு, ஒருவரை விளக்கும் விளக்கு கல்வியே என்பதை ஒவ்வொருவரும் அழுத்தமாக உணரவேண்டும். இக்கருத்தை வற்புறுத்தி உறுதிப்படுத்தும் செய்யுள் ஒன்று தண்டியலங்காரம் என்னும் நூலின் உரையில் உள்ளது. "மலையிலே தோன்றி, உயர்ந்தவர்களால் தொழப்பட்டு, இருட் டைப் போக்கும் விளக்குகள் உலகில் இரண்டு உள்ளன. அவற் றுள் ஒரு விளக்கு சூரியன்; மற்றொரு விளக்கு தமிழ்" என்னும் கருத்தில்,

**"ஓங்கல் இடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருள்அகற்றும்—ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிர்ஒன் றேனையது**
**தன்னேர் இலாத தமிழ்"**

என இச்செய்யுள் அமைந்துளது. (ஓங்கல் = மலை; ஞாலம் = உலகம்; கதிர் = சூரியன்) சூரியனும் கிழக்கே உதய மலையில் தோறுவதாகக் கூறுவது வழக்கம். தமிழும் தெற்கே பொதியமலையில் தோன்றியதாகக் கூறுவது மரபு. ஆக, இரண்டும் தோன்றியது மலையி லேயே. சூரியனையும் உயர்ந்தோர் பலரும் போற்றுகின் றனர். சூரியனும் ஊனக் கண்கட்கு ஒளி தந்து வெளி யிருளைப் போக்குகின்றது. தமிழும் மனக் கண்ணுக்கு

ஒளி தந்து உள்ளிருளைப் போக்குகின்றது. இங்குச் சூரியனையும் தமிழையும் விளக்காக ஒப்பிட்டுக் கூறியிருப்பினும் விளக்குகளுள் பெரிய சூரியனைவிட, தமிழ் விளக்கே சிறப்புடையதாகும். மேலும், இக் கல்வி விளக்கே சிறந்த விளக்காகும் என்னும் கருத்தை நாலடியார்ச் செய்யுள் ஒன்றும் அறுதியிட்டு உறுதிப்படுத்திப் போந்துளது.

## மம்மர் அறுக்கும் மருந்து

"கல்வியானது, இவ்வுலக இன்பம் அனைத்தையும் ஈயும். கொடுக்கக் கொடுக்கக் குறையாது. கற்றவர் தம்மை விளக்கமுறச் செய்யும். கற்றவர்கள் உயிர்வாழும் பொழுதே, ஏனைய பொருள்கள்போல் இடையில் அழிந்து விடக் கூடியதும் அன்று. ஆகவே, அறியாமையாகிய அகவிருளைப் (மயக்கம்) போக்கக்கூடிய அறிவுச் சுடர் (மருந்து) கல்விபோல் வேறொன்றிருப்பதாக, யாம் எவ்வுலகிலும் என்றும் கண்டதேயில்லை" என்னும் கருத்தை,

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து"

என்னும் நாலடியார்ச் செய்யுள் நமக்குத் தருகின்றது. இங்கு, மம்மர் என்றது மயக்க இருள் அதாவது அறியாமை (அஞ்ஞானம்) யாகும். மருந்து என்றது அறிவுச் சுடரை (மெய்ஞ்ஞான தீபம்) ஆகும். மேலும், இச்செய்யுளில் கல்வியைப் பற்றி, "தம்மை (கற்றவரை) விளக்கும்" என்று குறிப்பிட்டிருப்பது இவ்விடத்திற்கு மிகவும் ஏற்புடையதாகும். விளக்குவதுதானே விளக்காகும். மற்றும், சேக்கிழார் தம் பெரிய புராணத்தில்,



"புலன் கொளுவ மனம் முகிழ்த்த
அருள் நீக்கி மலர்விக்கும் கலைபயில" (1290)

என்று பாடியிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது. எனவே, மக்கட்கு இருக்க வேண்டிய இன்றியமையா விளக்குக் கல்வியே எனத் தமிழ் முன்னோர்கள் கண்டு கூறியுள்ள கல்விக் கொள்கையை இனியும் மறுக்க முடியுமோ?

—o—

## இரண்டாம் பகுதி

# கல்வியின் விளக்கு

கல்வி கற்றோர் சிலர், ஒருவகை விளக்கமும் இன்றி மங்கிக் கிடப்பதை நாம் உலகில் காணாமற் போகவில்லை. அவர்கள் அந்நிலையில் இருப்பதற்குக் காரணம், "அவர்தம் கல்வி நன்கு விளக்கம் பெறாமையே யாகும்" என்று கூறினால் மிகையாகாது. எனவே, அக் கல்விக்கு விளக்கம் தரும் விளக்கொன்று தேவை என்பது பெறப்படும். அவ் விளக்கம் பெற்ற கல்வியைக் கற்றோரே விளக்கம் பெற முடியும். அக் கல்வியின் விளக்குத்தான் யாது? என்பதைப் பின்வரும் சிறுகதையின் வாயிலாக நன்கறியலாம்.

### சிறுகதை

ஆசிரியர் ஒருவர், தம் பள்ளிக்கூடத்தில் சில்லாண்டுகட்குமுன் படித்து முடித்த தம் மாணவர் இருவர் இருக்கும் ஓர் ஊர்க்குச் சென்றார். சென்றவர், அங்குள்ள தம் மாணவர் இருவரையும் கண்டு பேச ஆவல் கொண்டார். அம் மாணவர்கள் தற்போது திருமணஞ் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கை நடத்துவதாகவும் அறிந்தார். முதலில் மாணவர் ஒருவர் வீட்டிற்குச் சென்றார். காலை மணி ஏழு இருக்கலாம். அம் மாணவர் குளித்தல் முதலிய காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக்கொண்டவராகக் காணப்



பட்டார். மேலும், அகத்தூய்மை புறத்தூய்மைகளுடன் சிலர்க்குத் திருக்குறள் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்தார். அவ்வமயம் தம் பழைய ஆசிரியர் வருவதைக் கண்டார். எழுந்து வணக்கம் செலுத்தினார். ஓர் இருக்கை தந்து இருக்கவும் செய்தார். ஆசிரியரும் மகிழ்ச்சியுடன் அமர்ந்தார். அமர்ந்து அம்மாணவரை நோக்கித் "தற்போது என்ன செய்து கொண்டிருக்கின்றாய்? கையில் இருப்பது என்ன நூல்?" என்று கேட்டார். அம்மாணவர் "இது திருக்குறள்; நான் தற்போது ஒரு நிலையத்தில் தொழிலாற்றி வருகின்றேன்; ஓய்வு நேரங்களில் வீண்காலம் போக்க விருப்பம் இல்லாமையால் இங்குள்ள சிலர்க்குத் திருக்குறள் பாடஞ் சொல்லி வருகின்றேன்; எல்லாம் தங்கள்பால் பெற்ற செல்வமே" என்று வணக்கத்துடன் பதில் கூறினார். பின்பு ஆசிரியர் "ஆனால் நீ பள்ளிக்கூடத்தை விட்டு வரும்போது திருக்குறளில் இவ்வளவு புலமையும் திறமையும் பெற்றிருக்கவில்லையே; தற்போது பாடஞ் சொல்வதைப் பார்த்தால் எனக்கே வியப்பாய் உள்ளதே" என்று தெரிவித்தார். அதற்கு அம் மாணவர் யான் தங்களிடம் கற்றதைக் கொண்டு மேலும் வளர்ச்சி செய்து கொண்டேன்; எல்லாம் தங்கள் வாழ்த்தின் எதிரொலிதான்" என்று விடை பகர்ந்தார். அங்குள்ள ஊரார் பலரும், அம் மாணவருடைய கல்வியறிவொழுக்கத் திறமையைப் பற்றியும், செய்யும் தொண்டைப் பற்றியும் பலவாறு ஆசிரியரிடம் புகழ்ந்து கூறினார்கள். அவரும் தம் பழைய மாணவரது கல்வி விளக்கைக் கண்டு களிப்படைந்தார். அம் மாணவர் வீட்டிலேயே சிற்றுண்டியும் நடைபெற்றது. பின்னர், பழைய மாணவர் மற்றொருவரையும் கண்டு களிக்கலாம் என எண்ணி, ஆசிரியர் அவர் வீட்டிற்குப் புறப்பட்டுச் செல்லலானார்.

காலை ஒன்பது மணி இருக்கலாம். ஆசிரியர் சென்றபோது அவ்விரண்டாவது மாணவர் தெருத்திண்ணையில்

தூங்கிக்கொண்டிருந்தார். சென்ற ஆசிரியர் மெதுவாக எதிர்த்திண்ணையில் அமர்ந்தார். உடனே, அங்கிருந்தவர்கள் தூங்குகின்றவரைப் பெரிதும் முயன்று எழுப்பினார்கள். அவரும் கும்பகர்ணனைப் போல மெதுவாக எழுந்து கண்ணைப் பிசையத் தொடங்கினார். ஆசிரியரை இன்னார் எனவும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆதலின், ஆசியரியராகக் குரல் கொடுத்து நலம் விசாரிக்கத் தொடங்கினார். பின்பு மாணவர் ஆசிரியரை ஒருவாறு உணர்ந்து கொண்டவராய் அப்படியும்இப்படியுமாக உடம்பை மட்டும்அசைத்துக் கொடுத்தார். எழுந்து நிற்கவுமில்லை. வணக்கம் செலுத்தவும் இல்லை. அவற்றையெல்லாம் மறந்துவிட்டார் போலும். ஆனால், அப்போது உயரேயிருந்து ஒரு பல்லி மாணவர்மேல் விழுந்தது. அதனால் அவர் ஆரவாரித்து எழுந்து நின்றார். அப்போது அவர் மடியிலிருந்து சுருட்டுக்கத்தையும் தீப் பெட்டியும் விழுந்தன. இடுப்பில் செருகியிருந்த பொடி மட்டையும் விழுந்து காட்சியளித்தது. தலையணையின் கீழ் வெற்றிலை பாக்கு புகையிலைப் பொட்டலம் ஒருபக்கமும், சீட்டுக்கட்டு ஒருபக்கமும் இருக்கை பெற்றிருந்தன. சுருட்டு குடிப்பதால் உதடு பெற்றிருக்கும் அழகினையும், வெற்றிலை பாக்கு புகையிலை போடுவதால் பற்கள் அடைந்திருக்கும் விளக்கத்தினையும், பொடி போடுவதால் மூக்கு பெற்றிருக்கும் பொலிவினையும் காண ஆசிரியரால் பொறுக்க முடியவில்லை. கள் குடிக்கும் வழக்கமும் இருக்கலாம் என்பதைக் கண்கள் ஒருவாறு அறிவித்தன. துணி ஒரே அழுக்கு. தலையோ புரட்டல். மேலும், வாயிலிருந்தும் மூக்கிலிருந்துமாகப் புறப்பட்டு மணம் கமழ்கின்றது. அது குடலையே புரட்டுவதால், ஆசிரியரால் எதிரே அமர்ந்திருக்கவும் முடியவில்லை. எப்போது இவ்விடத்தைவிட்டு எழுந்து போகலாம் என்றெண்ணித் திண்டாடித் திகைத்தார் ஆசிரியர். அப்போது, அவ்வூரினர் ஒருவர், ஆங்கிலத்தில் எழுதப்பட்டு



வந்த கடிதம் ஒன்றினைக் காட்டிப் படித்துத் தெரிவிக்க வேண்டினார். அங்ஙனமே படித்துத் தெரிவிக்கும் வண்ணம் ஆசிரியர் மாணவர்க்கு அறிவித்தார். மாணவரும் வாங்கிப் பார்த்தார். ஒன்றும் சொல்வதற்கின்றி விழித்தார். பின் ஆசிரியரை நோக்கி, "நான் பள்ளிக்கூடப் படிப்பை விட்டு நீண்ட நாட்கள் ஆகிவிட்டன ; ஆதலின் ஆங்கிலச் சொற்கள் மறந்து போய்விட்டன ; சற்று நீவிரே படித்து விடுவீராக" என்று கூறி ஆசிரியர் கையிலேயே கடிதத்தைத் தந்துவிட்டார். அப்பணியினை ஆசிரியரே செய்து முடித்தார். தம் பழைய மாணவர் இளமையில் பள்ளிக்கூடத்தில் படித்தும் போதிய விளக்கம் பெறவில்லையே என வருந்தினார். அவர்க்கு அங்கிருக்கச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆதலின், போய் வருகின்றேன் என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டுவிட்டார். ஊரார் அனைவரும் அம்மாணவரைப் பற்றிப் பலவாறு இழித்துப் பேசிக் கொண்டார்கள். அம்மாணவரும் வெட்கம் அடைந்தவராய் மெதுவாக உள்ளே நழுவிவிட்டார்.

— o —

# உணர்ச்சி விளக்கம்

முன் கூறப்பட்ட மாணவர் இருவரும் கற்றவர்களே. ஆனாலும், ஒருவரே அனைவர்க்கும் விளக்கமாகக் காணப்பட்டார். மற்றொருவர் விளக்கமின்றிக் காணப்பட்டார். முதலாமவர், கல்வித் திறமையும் அதற்கேற்ற ஒழுக்கமும் உடையவராகத் திகழ்ந்து தோன்றினார். இரண்டாமவரோ, கல்வித் திறமையற்றவராயும் தீயொழுக்கம் உடையவராயும் தோன்றினார். இவற்றிற்குத் தக்க காரணம் என்ன? முதலாம் மாணவர், பள்ளியில் கற்கும் போதே ஒவ்வொரு பாடத்தையும் உணர்ந்து கற்றார். அவ்வுணர்ச்சியால் நூல்களில் நல்ல புலமை பெற்றார். மேலும் கல்வியின் சிறப்பையும் அதனால் கிடைக்கும் நன்மையையும் நன்குணர்ந்தார், அவ்வுணர்ச்சியால், வீட்டுக்கு வந்ததும் மேலும் மேலும் விடாது கற்றுணர்ந்து கல்வியை வளர்ச்சி செய்து கொண்டார். நூற்களின் கருத்துக்களை நன்கு உணர்ந்ததனால் அதன்படி ஒழுகவும் தலைப்பட்டார். அதனால் அனைவராலும் புகழவும் பட்டார். இங்ஙனமாக அவர் உணர்ந்து கற்றதனாலேயே அவர் கல்வியும் விளக்கம் பெற்றது. இரண்டாம் மாணவரோ, பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே நுனிப்புல் மேய்ந்து வந்தார். எதையும் ஆழ்ந்து உணர்ந்து கற்பதில்லை. தேர்ச்சி பெறுவதற்கு வேண்டிய அளவே மேலோடு படித்து வந்தார், அதனால், பாடநூற்களிலும் போதிய திறமை பெறமுடியாமற் போயிற்று. கல்வியின் சிறப்பும் அவர்க்குப் புலப்படாமலும் போயின.



தொடக்கத்திலிருந்தே இங்ஙனம் உணர்ச்சியில்லாக் கல்வி கற்று வந்ததனால், வீட்டுக்குப் போன பின்னரும் படித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதை அறவே மறந்தார். படித்த பாடங்களையும் நாளுக்கு நாள் மறந்து வந்தார். படித்தது நினைவில் இருந்தால்தானே படித்த வண்ணம் நடக்க வேண்டும் என்பதும் நினைவிற்கு வரும். ஆகவே, பல்வகைத் தீக்குணத் தீச்செயல்கட்குப் புகலிடமானார். அதனால், அனைவராலும் பழிக்கவும் பட்டார். அவர் கல்வியும் குடத்தில் இட்டுத் தூண்டாத விளக்குப்போல் மங்கலாயிற்று.

உலகில் நாம் இதுபோன்ற நிகழ்ச்சிகள் எவ்வளவோ கண்டிருக்கின்றோம். இத்தகைய பிள்ளைகளைப் பார்த்து, "பையன் படித்தானே தவிர ஒன்றும் விளக்கமில்லை" என்று உலகத்தார் குறை கூறுவதையும் கேட்டிருக்கின்றோம் அல்லவா? ஆதலின் உணர்ச்சியுடன் கற்ற கல்விதான் விளக்கம் பெறும் என்பது உறுதி. எனவே, கல்வியின் விளக்கு உணர்ச்சியே என்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

## எதையும் உணர்ந்து செய்க

கல்வி யென்றல்ல, வேறு எக்காரியத்தைச் செய்வதாயினும் உணர்ந்து செய்யவேண்டும். எல்லோரும் செய்கின்றார்களே, நாமும் செய்யவேண்டுமல்லவா, என்ற ஒப்புக்காகச் செய்கின்றனர். இங்ஙனம், தமக்கென ஒருவித உண்மை உணர்ச்சியுமின்றிப் பிறர்க்காகக் காரியங்களை அரைகுறையாய்ச் செய்து முடிப்பதில் பயனென்ன உளது? "எங்கள் அகத்துக்காரரும் (வீட்டுக்காரர்) கச்சேரிக்குப் போனார்" என்றபடி பேருக்குக் கடமையைக் கழித்துத்

தள்ளிவிட்டால் போதுமா? அங்ஙனம் வலிந்து செய்வதைக் காட்டிலும் செய்யாமல் விடுவது ஒருவிதத்தில் மேலானதாகுமே.

## சுவை உணர்ச்சி

ஒன்றை நுகரத் தொடங்கினாலும் சுவை யுணர்ந்து நுகர வேண்டும். சிலர் உண்பார்கள். ஆனால், உப்பு புளி முதலியவற்றின் சுவையளவு உணராதாராய் இருப்பார்கள். அதுபோலவே ஒரு காட்சியைக் கண்களால் காண்பார்கள். இசையைக் காதுகளால் கேட்பார்கள். மணத்தை மூக்கால் மோப்பர். ஆனால், நல்லது கெட்டது சொல்லத் தெரியாமல் விழிப்பார்கள். நல்லதைக் கெட்டதாகவும் கெட்டதை நல்லதாகவுமாக, ஒன்று கிடக்க ஒன்று உளறுபவர்களும் உள்ளனர். மேளக் கச்சேரி கேட்ட ஒருவர், நீண்ட நேரம் விடாமல் ஊதிய காரணத்தால் ஒத்து ஊதியவனுக்குப் பரிசு கொடுத்ததாகவும் ஒரு கதை வழங்குகின்றதல்லவா? சிலர் இசை அரங்குக்குச் சென்றிருப்பார்கள். பாடுபவர் எப்படிப் பாடினாலும் பொம்மைபோல் வீற்றிருப்பார்கள். சிலர் நாடகங்கட்குச் சென்று வருவார்கள். கேட்டால் கதையினையும் சொல்லத் தெரியாமல் விழிப்பார்கள். "சீதைக்கு இராமன் சிற்றப்பனா?" என்று கேட்பவர்கள் இன்னோரே. இவ்விதம் இரங்கத்தக்க பிறவிகளை நாம் உலகில் எவ்வளவோ கண்டு வருகின்றோம். சுவையுணரா நுகர்ச்சியால் யாது பயன்? ஒன்றுமில்லை. ஆதலின், எதையும் சுவையுணர்ந்து நுகரவேண்டும்.

## எண்வகை மெய்ப்பாடு

தொல்காப்பியர் முதலிய இலக்கணப் பேராசிரியர்கள் சுவையை எண்வகைப் படுத்திக் கூறியுள்ளனர். அவை:—



(1) நகை (சிரிப்பு) (2) அழுகை (3) இளிவரல் (இழிவு) (4) மருட்கை (வியப்பு) (5) அச்சம் (6) பெருமிதம் (வீரம்) (7) வெகுளி (கோபம்) (8) உவகை (மகிழ்ச்சி) என்பனவாம். இவ்வெட்டும் இன்னின்ன பொருள்களின் வாயிலாகத் தோன்றும் எனப் பலபட வகுத்தும் கூறியுள்ளனர். சுவையெனினும் மெய்ப்பாடெனினும் ஒன்றே. மெய்ப்பாடென்பது, ஒருவன் உள்ளத்தே நிகழ்ந்த நிகழ்ச்சி புறத்தே (வெளியே) புலனாவதாகும். ஒருவன் ஒரு சுவையை நுகருங்கால் அவன் உடம்பில் சில அடையாளங்கள் தோன்றும். எடுத்துக்காட்டாக, வெகுளிச் (கோபம்) சுவை தோன்றுமானால், அதற்கறிகுறியாக வெளியில் கண் சிவத்தல், உதடு மடிதல், மீசை துடித்தல் முதலிய நிகழ்ச்சிகள் தோன்றும். அழுகைச் சுவை தோன்றிய காலத்தில், கண்ணீர் வடிதல், வாய்விட்டுப்புலம்பல் முதலிய நிகழ்ச்சிகள் தோன்றும். நகைச்சுவை தோன்றிய காலத்தில், முகமலர்தல், பல் விளித்தல் முதலிய நிகழ்ச்சிகள் தோன்றும். எனவே, ஒருவரின் உடம்பில் தோன்றும் மெய்ப்பாட்டைக் கொண்டு அவர் இன்னவித சுவை உடையவராக உள்ளார் என எளிதில் அறிந்து கொள்ளலாம். இந் நிகழ்ச்சிகளை நாம் உலகில் கண்கூடாகக் கண்டே வருகின்றோம். தொல்காப்பியர் தாமியற்றிய தொல்காப்பியம் என்னும் நூலில் மெய்ப்பாட்டியல் என ஒரு தனி இயல் வகுத்துப் பலபட விரித்துக் கூறிப் போந்துள்ளார். அவை அனைத்தையும் இங்குக் கூறின் மற்றொன்று விரித்தலாகிப் பெருகும். ஆதலின், இங்கு வேண்டிய இவ்வளவோடு நிறுத்திக் கொள்வோம்.

## மெய்ப்பாடு தோன்றக் கற்க

கல்வி நூற்களில் மேற்கூறிய எண்வகை மெய்ப்பாடுகளும் மலிந்து கிடக்கும். படிப்பவர்கள் அவற்றை

உணர்ந்து படிக்கவேண்டும். அதற்கு அடையாளமாக அவர் உடம்பிலும் மெய்ப்பாடு தோன்றவேண்டும். உருக்கமான வரலாறுகளைப் படிக்கும்போது தம்மை யறியாது கண்களிலிருந்து நீர் சொட்ட வேண்டும். வியப்பான செய்திகளைப் படிக்கும்போது தாமும் வாயைப் பிளந்து வியத்தல் வேண்டும். நகைப்பான கருத்துக்களைப் படிக்குங் கால் தாமும் நகைக்க வேண்டும். இவற்றைப் போலவே ஏனைய பிறவற்றினையும் மெய்ப்பாட்டுடன் சுவைத் துணர்ந்து கற்க வேண்டும். இவ்விதம் கற்பதற்குத்தான் உணர்ச்சி எனப் பெயர். இவ்வுணர்ச்சியில்லாக் கல்வி பய னற்றதாகும். உணர்ச்சியுடன் கற்றவர்களே, நூற்களில் போதிய புலமையும் திறமையும் பெற்றுத் திகழ்வார்கள். பின்னரும் தாம் கற்றபடியே ஒழுகத் தலைப்படுவார்கள். கல்வியின் முழுப்பயனையும் பெற்றவரும் ஆவார்கள். உணர்ச்சியின்றிக் கற்றவர் இவற்றிற்கு எதிர்மாறாகவே இருப்பர். அவர்களின் கல்வி, விளக்கம் பெறுமையால் அவர்களும் கற்றவராகக் கருதப்பட மாட்டார்கள். தம் மைக் கற்றவராகத் தம்மைத் தற்புகழ்ந்து கொண்டாலும் அப்புகழ்ச்சியினை உலகினர் ஏற்றுக்கொள்ள மாட்டார் கள். கல்வியின் விளக்காக உணர்ச்சி குறிப்பிடப்படுவதும் இதுபற்றியே. தற்போது கல்வியின் விளக்கு எது என்பது இனிது விளங்குகின்றது அல்லவா?

## மூட மாணவர்

பிள்ளைகள் சிலர் ஒப்புக்குப் பள்ளிக்கூடம் போய் வரு கின்றனர். பெற்றோர்களின் கட்டாயத்திற்காகவும் பள்ளிக் கூடத்தாரின் சட்டதிட்டங்கட்காகவும் அஞ்சி ஒரு சிறிது கட்டுப்பட்டு நடக்கின்றனர். ஆயினும், பள்ளிக்கூடத் திற்கு ஒரு சுமையாகவே இருந்து வருகின்றனர். மூன்



ஓரிடத்தில் கூறியுள்ளதற்கிணங்க, வகுப்பில் ஆசிரியர் கற் பிக்கும் பாடங்களைச் சிறிதும் ஊன்றி உணர்ந்து நோக்குவ தில்லை. வீட்டிற்கு வந்தும் படிப்பதில்லை. இவர்களாலேயா எண்வகைச் சுவைகளை உணரமுடியும்? இவர் கல்வியா விளக்கம் பெறும்? அவையெல்லாம் இவர்களிடம் சிறிதும் நடக்கா. நன்னூல் என்னும் இலக்கண நூலுள் ஓரிடத்தில், "உணர்ச்சியின்றி ஏற்றலுக்கு"க்கு உதாரணமாகச் சோற்றிற்கு நெய் விட்டான் என்பது காட்டப்பட்டுளது. சோறு உணர்ச்சியுடனா நெய்யை ஏற்றுக் கொள்கின்றது? இல்லை, நெய்யின் சுவை சோற்றிற்குச் சிறிதும் தெரியாது. அது போலவே மூடமாணவர்களும் உணர்ச்சியின்றிப் பாடங் கேட்கின்றனர். இனி, "சோற்றிற்கு நெய் விட்டான்" என்னும் எடுத்துக்காட்டை விலக்கி, அதற்குப் பதிலாக, "ஆசிரியர் மூட மாணவர்க்குப் பாடங் கூறினர்" என்னும் இவ் வெடுத்துக் காட்டைப் போடுவதும் பொருந்தும்.

— O —

# கற்பவர் வகை

கற்கும் மாணவர்களை முதல் மாணவர், இடை மாணவர், கடை மாணவர் என மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

## முதல் மாணவர்

முதல் மாணவர்க்கு அன்னத்தையும் (பறவை), ஆவையும் (பசு) ஒப்பாகக் கூறுவது வழக்கம். அன்னமானது, பால் வேறு நீர்வேறாகப் பிரித்துப் பாலையே உட்கொள்ளும். அதுபோல, முதல் மாணவரும் ஆசிரியர் சொல்லியவற்றுள் நல்ல கருத்துக்களையே தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள். ஆ(பசு)வானது, உணவு கிடைத்தபோது அமைதியுடன் உண்டு, பின்பு ஓரிடத்தில் அமர்ந்து உண்டவற்றைத் திரும்பவும் கொண்டுவந்து அசைபோட்டு உள்ளுக்குள் தள்ளும். அதுபோல முதல்மாணவரும், ஆசிரியர் பாடங் கற்பிக்கும்போது அமைதியுடன் கேட்டு, பின்பு ஓரிடத்தில் அமர்ந்து கேட்ட பாடங்களைத் திரும்பவும் நினைவிற்குக் கொண்டுவந்து நன்கு ஆய்ந்துணர்ந்து செப்பம் செய்து கொள்வார்கள். இம்முறைகளே முதன்மையானவையாகும்.

## இடை மாணவர்

அடுத்தபடியாக இடைமாணவர்க்கு நிலத்தையும் கிளியையும் ஒப்பாகக் கூறுவது வழக்கம். நிலம் (மண்)



பயிரிடுவோர் செய்த உழைப்புக்குத் தக்க அளவே பயன் தரும். அதுபோல, இடைமாணவரும், ஆசிரியரின் உழைப்புக்குத் தக்க அளவே பயன் பெற்றிருப்பார்கள். கிளி, சொன்னதை மட்டும் சொல்லும். அதுபோல இடை மாணவரும் ஆசிரியர் கற்பித்த அளவே கற்றிருப்பார்கள். இம்முறைகள் இடைப்பட்டனவாகும்.

## கடைமாணவர்

அடுத்தபடியாக, கடைமாணவர்க்கு இல்லிக்குடம் (பொத்தல் குடம்), ஆடு, எருமை, நெய்யரி (பன்னாடை) என்னும் நான்கையும் ஒப்பாகக் கூறுவது வழக்கம். பொத்தல் குடம், ஊற்றிய தண்ணீரை உடனே, ஒழுகவிடும். அதுபோலக் கடைமாணவரும், ஆசிரியர் சொல்லியவற்றை அப்போதே மறந்துவிடுவார்கள். ஆடு, ஒரு செடியில் சிறிதும் மற்றொரு செடியில் சிறிதுமாக மேய்ந்துகொண்டே போகும். அதுபோலக் கடைமாணவரும், ஒரு பள்ளிக் கூடத்தில் சில நாட்களும், ஓர் ஆசிரியரிடத்தில் சில நாட்களு மாகக் கற்கத் தொடங்கிக் கல்வியில் முழுப் புலமை பெறாது சிதைத்துக்கொள்வார்கள். எருமை, தண்ணீரைக் கண்டால் கலக்கியே குடிக்கும்; கலக்கியே குளிக்கும். அது போலக் கடைமாணவரும், ஆசிரியர்க்கு அடங்காமலும் பணியாமலும் அவரை வருத்திப் பாடங்கூறச் செய்து தாமும் பயன்பெறாது ஒழிவார்கள். பன்னாடை, ஒன்றை வடிகட்டினால் நல்லதைக் கீழேவிட்டு, ஈ, எறும்பு, தூசு, துரும்புகளையே பற்றிக்கொள்ளும். அதுபோலக் கடை மாணவரும், ஆசிரியர் சொல்லியவற்றுள் நல்ல கருத்துக் களையெல்லாம் விட்டுத்தள்ளி, வேடிக்கைக்காகச் சொல்லிய வேண்டாத கருத்தொன்றையுமே விரைந்து பற்றிக்கொள் வார்கள். இம்முறைகள் கடைப்பட்டனவும், பொருந்தா

னவும் பயனற்றனவுமாகும். இக்கருத்துக்களைப் பவணந்தி முனிவர்,

"அன்னம் ஆவே; மண்ணொடு கிளியே;
இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலை, இடை, கடைமாணாக்கர்"

என நன்னூலில் நன்றாக நவின்றுள்ளார்.

## மற்றொரு வகை

மற்றொரு விதத்திலும் மாணவர்களை மூவகையாகப் பிரிக்கலாம். அவ்வித வகை என்ன? கற்பூரத்தைப்போல் சொல்லியதும் பற்றிக்கொள்ளும் மாணவர்கள் முதல் மாணவர்கள். விறகைப்போல், சற்று முயன்று பற்றிக் கொள்ளும் மாணவர்கள் இடைமாணவர்கள். வாழைக் கட்டையைப்போல், எவ்வளவு முயன்றும் பற்றாத மாணவர்கள் கடைமாணவர்கள். மற்றும் பல்வித வகையாகக் கூறுவதுமுண்டு.

எனவே, மாணவர் அனைவரும் முதல் மாணவர்க்குரிய இலக்கணத்தைப் பெற முயலவேண்டும். சிலர்க்கு அது முடியாவிடினும் இடைமாணவர் நிலையிலேயாவது நிற்றல் வேண்டும். கடைமாணவர் இலக்கணத்தைக் கைக்கொள்ளல் சிறிதும் கூடாது. மாணவர்கள், உணவினை நாக்கினாலும், மணத்தினை மூக்கினாலும், இசையினைக் காதினாலும், நாடகத்தினைக் கண்களினாலும் சுவைத்துணர்ந்து நுகர்கின்றார்களல்லவா? அவற்றில் சிறிதாயினும் விட்டுக்கொடுக்கின்றார்களா? இல்லையே! அதுபோலவே, ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களையும் மன அறிவால் சுவைத்துணர்ந்து கற்க வேண்டுவது கடமை அல்லவா?



## கற்பித்தற் குரியவர்

இங்கு, தனிப்பட்ட ஆசிரியர் ஒருவரையே எடுத்துக் கொள்வோமே. அவர் மாணவர் பலருக்குப் பல காரணம் பற்றிப் பாடங் கற்பிக்கலாம். தம் மகனுக்கும் தம் ஆசிரியர் மகனுக்கும் கடமை பற்றிப் பாடங் கற்பிக்கலாம். அரசன் மகனுக்கும், நிரம்பப் பொருள் தரும் செல்வன் மகனுக்கும் ஊதியம் (வருமானம்) பற்றிப் பாடங் கற்பிக்கலாம். ஒருவகைப் பொருள் உதவியும் செய்யாது தமக்குக் குற்றேவல் செய்து வழிபடும் ஓர் ஏழை மாணவனுக்கும் இரங்கி அன்பு பற்றிப் பாடங் கற்பிக்கலாம் மேற்கூறப்பட்ட தொடர்பொன்றும் இல்லாவிடினும் தாம் கற்பிக்கும் பாடங்களை விரைந்து பற்றிச் சுவைத்துணர்ந்து கற்கும் முதல் மாணவனுக்குத் தாமே (ஆசிரியரே) பொருளுதவி செய்தும் பாடங் கற்பிக்கலாம். இத் திறமை வாய்ந்த முதல்மாணவர்க்குப் பாடங் கற்பிப்பதில் ஆசிரியர்கட்கு ஒரு தனிப்பட்ட ஆவலும் சுவையும் உண்டு. ஆதலின், அம் மாணவரைத் தேடிப் பிடித்தும் பாடங் கற்பிப்பார்கள். அதனால், அவ்வாசிரியர்களின் கல்வியும் மேன்மேலும் வளர்ச்சியடையும். இவ்விதமாக இன்னின்னார்க்குப் பாடங் கற்பிக்கலாம் என்கிறார் பவணந்தி முனிவர். இதனை, அவரது நன்னூலிலுள்ள,

"தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள் நனி கொடுப்போன் வழிபடுவோனே
உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே"

என்னும் சூத்திரத்தால் அறியலாம். மன்மகன் என்றால் அரசன் மகன். உரைகோளாளன் என்பதற்கு, ஆசிரியர் உரைக்கும் உரையை விரைவில் சுவைத்துணர்ந்துகொள்ளும் முதல் மாணவன் என்பது பொருள்.

**உரியரல்லாதவர்**

பாடங் கற்பித்தற்கு உரியரல்லாத மாணவரும் உளர் சிலர். அவர்கள் யாவர்? (களி) கள் குடிப்பவன், (மடி) சோம்பேறி, (மானி) ஆசிரியர்க்குப் பணிந்தொழுக வெட்கப்படும் மானமுடையோன், (காமி) காம எண்ணம் மிகுதியாக உடையவன், திருடன், தீரா நோயாளி, (ஏழை) அறிவில் மிகவும் ஏழையாய் இருப்பவன், (பிணக்கன்) மாறுபட்டுப் பகைகொள்பவன், மிக்க சினம் உடையவன், எப்போதும் தூங்கிக்கொண்டே யிருப்பவன்; மிகவும் மந்த அறிவுடையவன், பழைய நூற்கள் பலவும் கண்டு இவ்வள வினையும் எப்போது படித்து முடிப்போம் என அஞ்சித் தடுமாறும் உள்ளம் உடையவன், (தறுகணன்) அஞ்ச வேண்டுவனவற்றிற்கு அஞ்சா நெஞ்சு படைத்தவன், (பாவி) தீத்தொழில் செய்யும் தீயோன், (படிறன்) அடிக் கடிப் பொய்யே பேசுபவன், இன்னும் இவர்போன்ற தீய மாணவர் உள்ளனர். இவர்கட்குப் பாடங் கற்பிக்க லாகாது என்கிறார் பவணந்தியார்.

"களி மடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன
துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்
தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி
படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே"

என நன்னூலில் நவின்றுள்ளார் அவர். இது அக்காலச் சூழ்நிலை போலும்!

# திருத்தும் முறை

ஆனால், இவ்விடத்திற் சிலர், இம் மாணவர்க்குப் பாடங் கூறலாகாது என்பது எப்படியும் பொருந்ாது; நன்மாணுக்கர்க்கே பாடங் கூறுவது என்பது நடுநிலைமை தவறியதாகாதா? மேலும் இக் கெட்ட மாணவர்கள் திருந்துவதுதான் எப்படி? இவர்கட்கு மட்டும் கட்டாயக் கல்வி தேவையில்லையா? என்றெல்லாம் கேள்வி பல அடுக்கலாம். உண்மைதான்! ஆயின், இவர்களை அறவே சேர்க்கக் கூடாதென்பதல்ல. முதலில் இவர்கட்குள்ள கெட்ட குணங்களைப் பெரிதும் முயன்று போக்கவேண்டும். அதற்கும் கட்டுப்படவில்லை யென்றால் மேற்கொண்டு பல தண்டனைகள் கொடுத்துத் திருத்தவேண்டும். எப்படி? குற்றவரி விதிக்கலாம். பள்ளிக்கூடத்திலிருந்து சில நாட் கட்கு விலக்கிவைக்கலாம். மேல் வகுப்புக்கு மாற்றுதலும் விட்டுவிடலாம். இன்னபிற தண்டனைகளைச் செய்து பார்க்கலாம். இவற்றாலும் திருந்தவில்லை யெனின், இவர் களைப் பள்ளியில் வைத்திருப்பதால்தான் பயனென்ன உளது? இவர்கட்கும் கெடுதி; பள்ளிக் கூடத்திற்குமே கெடுதியல்லவா? ஆதலின், ஒரு சிறிதும் இரக்கம் காட் டாமல், இவர்களைப் பள்ளிக்கூடத்திலிருந்தே விலக்கி விட லாம். ஆனால், இம்முறைகள் எல்லாம் பள்ளிக்கூடங்களில் இப்போது நடந்தே வருகின்றன. இங்ஙனம் செய்யா விடினும் ஏனைய மாணவர்கட்கும் இடங்கொடுத்து

அப்பள்ளிக்கூடமே நாளடைவில் வளர்ச்சியின்றிச் சீர்குலையும். எனவே, மாணவ உலகமே உணர்ச்சியாம் விளக்கம் பெறாது மங்கிப் போகும் அல்லவா?

## விருப்பமாய் ஏற்றல்

ஆயின், அக்காலத்தில் நல்லுணர்ச்சி அற்ற மாணவர்களை அடித்துத் தண்டித்ததாகவே புலப்படுகின்றது. ஆசிரியரால் அடிக்கப்படும் உரிமை பெற்ற மாணவன் ஆசிரியரின் முழுக் கண்காணிப்பில் இருப்பதாக எண்ணுவது வழக்கமாம். அவ்வடியையும் நம் நன்மைக்காகவே அடிக்கின்றார் என்றெண்ணி அம்மாணவனும் விரும்பி ஏற்றுக் கொள்வானும். ஆசிரியரால் அடித்துக் கண்டிக்கப் பெறாவிடின், ஆசிரியரின் கண்காணிப்பிலில்லை என்று அம்மாணவனும் அவன் பெற்றோர்களும் எண்ணுவார்களாம். அதற்கேற்பவே நன்னூலுள் ஓரிடத்தில், "விருப்பமாய் ஏற்றல்" என்பதற்கு எடுத்துக்காட்டாக "ஆசிரியர் மாணாக்கனுக்குக் கசையடி கொடுத்தார்" என்பது காட்டப்பட்டுளது. இவ்வெடுத்துக் காட்டால், நன் மாணாக்கர்கள் ஆசிரியர் அடிக்கு எதிர்நோக்கி நிற்பார்கள் என்பது தெளியப்படுகின்றதன்றோ? ஆசிரியரும் தக்க காரணம் இன்றி அடிக்கமாட்டார். அடியும் குற்றத்திற்குத் தக்கபடி குறிப்பிட்ட அளவே இருக்கும். ஆனால், இக்காலத்தில் பள்ளிக்கூடங்களில் மாணவர்களை அடிக்கும் முறை சிறந்ததல்ல என்று குறிப்பிடப்பட்டுளது. ஆயினும், தலைமை ஆசிரியர் போன்றோர்க்கு அடிக்கும் உரிமையும் ஓரளவு உண்டு. அவர்கள் மாணவர்களை அடிப்பது வேடிக்கைக்காகவா? அல்லது விளையாட்டிற்காகவா? அல்லவே, மாணவர்களை அடிப்பதெல்லாம் அவர்கள் உணர்ந்து கற்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தாலே அல்லவா?



## தலைகீழாய் நிற்க வைத்தல்

பல ஆண்டுகட்கு முன் கடலூரைச் சார்ந்த வண்டிப்பாளையம் என்னும் ஊரில் தனியாகப் பள்ளிக்கூடம் வைத்திருந்த ஆசிரியர் ஒருவர், உணர்ச்சியற்ற மாணவர்களைத் தலைகீழாய் நிற்க வைத்ததாகச் சில முதியவர் சொல்லக் கேள்விப்பட்டதும் உண்டு. அது ஒருவித தண்டனையாகும். அதில் ஓர் உண்மையும் உண்டு. அச்செயல் தண்டனைக்கும் தண்டனையாகின்றது. மாணவரது குணங்களை ஒழுங்கு செய்து கல்வியில் கருத்தூன்றவும் செய்கின்றது. அந்நன்மையினை, அவ்வாசிரியர் அறிந்துதான் செய்தாரோ, அறியாமல் செய்தாரோ என்பது தெளிவாகப் புலப்படவில்லை. ஆனால், அவ்வாசிரியர், மாலையில் பள்ளிக்கூடம் விடும்போதே அங்ஙனம் செய்தாராம். ஆதலின் பெரும்பாலும் அறிந்தே செய்திருக்கலாம். அந்நன்மைதான் யாது எனச் சற்று ஆராய்வோம்.

## மூளையின் தேவை

வாழ்க்கையில் பல காரியங்களைச் செய்கின்றோம். நாம் நல்ல எண்ணங்களையோ, கெட்ட எண்ணங்களையோ, மனத்தால் எண்ணுகின்றோம். நல்ல பேச்சுக்களையோ, கெட்ட பேச்சுக்களையோ வாயால் பேசுகின்றோம். நல்ல செயல்களையோ, கெட்ட செயல்களையோ, உடல் உறுப்புக்களால் செய்கின்றோம். இவற்றையெல்லாம் செய்யும்படி உள்ளிருந்து இயக்கும் கருவி நம் மண்டையில் உள்ள மூளைதான். மூளையில் பல பகுதிகள் உள்ளன. ஒன்று, கல்வி, எண்ணம் முதலியவற்றில் கருத்தூன்றும்படித் தூண்டும். ஒன்று பேசத் தூண்டும். ஒன்று கண்களால் காணத் தூண்டும். ஒன்று காதுகளால் கேட்கத் தூண்டும். இன்னும், இவைபோலவே, ஒவ்வொன்றும் நடத்தல்,

கொடுத்தல், மோத்தல், உண்ணல் முதலிய ஒவ்வொன்றையும் செய்யத் தூண்டும். எனவே, நாம் நற்குண, நற்செய்கை உடையவர்களாகவும், காரியங்களில் திறமையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமானால், நம் மூளையிலுள்ள ஒவ்வொரு பகுதியும் ஒழுங்காய் இருக்க வேண்டும் என உணரலாம். அதற்கு மூளையின் உட்பகுதிகள் அனைத்தும் போதிய இரத்த ஓட்டத்தினால் நிறைந்திருக்க வேண்டும். எப்பகுதியில் இரத்த ஓட்டம் குறைகின்றதோ அப்பகுதியால் இயக்கப்படும் வேலையை நாம் ஒழுங்குபெறச் செய்யவே முடியாது. குறைபாடு உடையவராகவே காணப்படுவோம். எடுத்துக்காட்டாகச் சிலவற்றை எடுத்துக் கொள்வோம். நினைவாற்றல், கல்வித் திறமை, நற்குண, நற்செயல்கள் எனும் இவற்றை இயக்கும் பாகங்களில் நல்ல இரத்த ஓட்டம் இருக்கப் பெறாதவர்களே, அறிவிலிகளாகவும் கெட்டவராகவும் காணப்படுவார்கள். அன்னார்க்கு இயற்கையாக இருக்க வேண்டிய இரத்த ஓட்டம், நோய், ஓயாத எண்ணம், ஓயா உழைப்பு முதலிய பல காரணங்களால் கெட்டுவிடுகின்றது. ஆதலின், அந்த இரத்த ஓட்டத்தைத் திரும்பவும் அம்மூளைப் பகுதிகட்குக் கொடுக்க வேண்டும். ஆனால், இரத்த ஓட்டத்தை மூளைக்குச் செலுத்துவது எப்படி?

தலைகீழாய் நிற்றலால் மூளைப் பகுதிகள் போதிய இரத்த ஓட்டம் பெறுகின்றன. பெற்றுச் சுறுசுறுப்படைந்து சரிவர வேலை செய்யத் தொடங்குகின்றன. ஆகவே, அம்முறையை உடைய மனிதர்களும், நுண்ணறிவு மிக்கவராயும், நினைவாற்றல் நிரம்பியவராயும், நற்குண, நற்செய்கை உடையவராயுமாகத் திகழ்கின்றார்கள். இக்கருத்துக்களையெல்லாம், அயல்நாட்டு உடல் நூல் ஆராய்ச்சியின்படியும், நம்நாட்டுச் சித்தர்களால் இயற்றப்பட்ட



யோகப் பயிற்சி நூல் ஆராய்ச்சியின்படியும் இனிது உணரலாம்.

## சிரசாசனம்

எனவே, மேற்கூறப்பட்ட ஆசிரியர் ஒருவர் உணர்ச்சியற்ற மாணவர்களைத் தலைகீழாய் நிற்க வைத்து வந்ததும் ஒரு விதத்தில் பொருத்தமாகவே புலப்படுகின்றது. அதிலும் மாலை நேரத்திலேயே அங்ஙனம் செய்தது மேலும் அமைவுடையதாகத் தோன்றுகின்றது. அப்பழக்கத்தால் மாணவர்கள், நுண்ணறிவும், நினைவாற்றலும், கல்வித் திறமையும், நற்குண நற்செய்கைகளும் உடையவர் ஆவார்கள். கல்வியினையும் உணர்ந்து கற்பார்கள். அவ்வுணர்ச்சியால் அவர் கல்வியும் விளக்கம் பெறும்.

ஆதலின், இக்காலத்திலும் மாணவர்கள் இம்முறையினைக் கைக்கொள்வது நலம். ஆனால், இதனை ஒரு தண்டனையாகக் கொடுக்கப்பட்டுச்செய்ய வேண்டுவதில்லை. உடற் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் செய்து தக்க பயன் பெறலாம். இதற்குச் "சிரசாசனம்" எனப் பெயரிட்டு மாணவர்கள் சிலரும் ஏனையோரும் செய்தே வருகின்றனர். ஆகவே, தலைகீழாய் நிற்கும் இம்முறை ஒருவிதத்தில் இன்றியமையாததாகவும் பொருத்தமுள்ளதாகவும் புலப்படுகின்றது அன்றோ?

— O —

# ஆசிரியர்கள் கடமை

மற்றும், மாணவர் முயற்சி ஒன்றுமே போதாது; ஆசிரியர்களும் போதிய பொறுப்பும் முயற்சியும் எடுத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் மாணவர் கல்வி உணர்ச்சியுடன் விளக்கம் பெறும். சமைப்பவர் சிறிதும் நன்றாகச் சமைக்கவில்லையென்று வைத்துக்கொள்வோம். எவ்வளவு பசியாய் இருப்பினும் சாப்பிடுபவர் தான் எப்படிச் சாப்பிட முடியும்? ஆதலின், "கூலிக்கு மாரடித்தல்" என்றபடி இல்லாமல் கூடியவரையிலும் ஆசிரியர்களும் பொறுப்புடன் கற்பிக்க வேண்டும். மூட மாணவர்மேல் முழு வெறுப்புக் கொண்டு அறவே அன்னாரை உதறிவிடவும் கூடாது. எவ்வெவ் மாணவர் எவ்வெவ் முறையால் கற்பித்தால் உணர்ந்து கற்பார்களோ, அவ்வவ் முறையில் எல்லாம் தங்கள் முழுத் திறமையினையும் பயன்படுத்திச் சொல்ல வேண்டிய கருத்தை முன் கூட்டியே உள்ளத்தில் அமைத்துக் கொண்டு விரையாமல் வெகுளாமல் நயமுடன் கற்பிக்க வேண்டும். மேலும், ஆசிரியர்க்குப் போதிய புலமைத் திறமையும் சொல்வன்மையும் உலக அறிவும் உயர்ந்த குணமும் முகமலர்ச்சியும் நடுநிலைமையும் சுறு சுறுப்பும், நல்லெண்ண மனப்பான்மையும் வேண்டும்.

நன்னூலில் ஆசிரியர்கள் பற்றிப் பவணந்தியார் கூறி யிருக்கும் நூற்பாக்கள் ஈண்டுக் கருதற்பாலன. அவை வருமாறு :—



### நல்லாசிரியர் இலக்கணம்

"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை ஆசிரி யன்னே."

### ஆசிரியர் ஆகாதவர்

"மொழி குணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவா வஞ்சம்அச்ச மாட்லும்
கழற்குடம் மட்பகை பருந்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோர் இலர் ஆசிரிய ராகு தலே."

### பாடம் கற்பிக்கும் முறை

"ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப."

ஆசிரியர் பற்றியும் போதனுமுறை பற்றியும் உள நூல் அடிப்படையில் இந்தக் காலக் கல்வி வல்லுநர்கள் கூறி யிருக்கும் கருத்துக்களுள் பெரும்பாலன, 'ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகட்கு முன்னமேயே நன்னூலில் கூறப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இன்னபிற கருத்

துக்கள் தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமையும் ஈண்டு ஒப்புநோக்குதற் குரியது.

எனவே, ஆசிரியர்கள் கடனுக்கு வேலை செய்யாமல் உண்மையாகவே பாடுபட்டு உழைக்க வேண்டும். ஆசிரியர்கள் சிலர் எப்போது மணியடிக்கும் என்றே எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். '**மாட்டை மேய்ந்தான் கோலைப் போட்டான்''** என்பது இன்னோர்க்கே பொருந்தும். சில சமயங்களில், தலைமை (அதிகாரி) அலுவலாளர்க்கு அஞ்சி அப்படியும் இப்படியுமாக அசைவதும் உண்டு. இவ்வித ஆசிரியர்களால் மாணவ உலகம் சிறிதும் நன்மை பெறாது. உணவுக் கடையில் பணத்திற்கு உணவு போடும் சிலர்போல் கல்வி கற்பிக்கக் கூடாது. பெற்ற தாய் பிள்ளைக்கு உணவு அளிப்பதுபோல் பரிவுடன் கற்பிக்க வேண்டும். எனவே இவ்விதம் வளர்க்கப்படும் கல்வியே நாட்டில் நன்கு விளக்கம் பெறும்.

— o —

# கற்கும் முறை

## பிள்ளைகளின் குறும்பு

ஆசிரியரிடம் கல்வி பயிலும் பிள்ளைகள் கற்கும் முறையினையும் நன்குணர வேண்டும். யாருக்கோ வந்த விருந்தென மேலோடு இருந்துவிடக் கூடாது. சில பிள்ளைகள், மாணவரின் நன்மைக்காகப் பள்ளிக்கூடம் நடக்கின்றது என்பதை அறவே மறந்துவிடுகின்றனர். மாணவராலேயே பள்ளிக்கூடத்தினர் பிழைப்பதாக எண்ணுகின்றனர். எண்ணி இடக்கும் செய்கின்றனர். சில சமயங்களில் பள்ளிக்கூடத்தை ஒரு நாடகக் கொட்டகையாகவே கருதிவிடுகின்றனர். வகுப்பை நாடக மேடையாகவும் ஆசிரியர்களை நடிகர்களாகவும் எண்ணுகின்றனர். நாடகக் கொட்டகையில் கலவரம் செய்யும் சில குறும்பர்களைப்போல வகுப்பிலும் கலவரம் செய்யத் தொடங்கிவிடுகின்றனர். என்னே ஆசிரியர் மாணவர்தம் அன்புநிலை! ஆனால் ஒரு சில மாணவரிடமே இக்குறை காணப்படுகின்றது. இத்தீயபழக்கம் அறவே கூடாது. பண்டைக் காலத்தில், ஆசிரியரிடத்தில் மாணவர்கள் அகங்கனிந்து அன்பு ததும்ப நடந்துகொண்டது போலவே, தற்காலத்திலும் நடந்து கொள்ள வேண்டும். அதுவே சிறந்த நயநாகரிகமாகும்.

## அடக்கம்

மாணவர் சிலர், ஆசிரியர்க்கு அடங்காமல் நடப்பதைப் பெருமையென்றெண்ணிச் சிறுமை உறுகின்றனர். பெரி

யோர்க்கு அடங்கி நடப்பதே பெருமையாகும். அடங்காமையால் வரும் கேடுகள் பல.

> அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
> ஆரிருள் உய்த்து விடும்

என்பது குறளன்றோ?

## வழிபாடு

ஆதலின் ஆசிரியர்க்கு அடங்கி அவரை வழிபட்டுக் கற்கவேண்டும். குளிர் காய்பவன் நெருப்பை மிக நெருங்கின் சுடும். மிகவும் எட்டிச் சென்றாலும் குளிரும்; ஆதலின் நடுத்தரமான இடத்திலிருந்தே குளிர் காய்வான். அது போலவே மாணவரும் ஆசிரியரும் அளவுமீறி நெருங்கிப் பழகினால் மதிப்புக் கெடும்; அளவுமீறிப் பிரிந்து நின்றாலும் அன்பு கெடும். ஆதலின் நடுத்தரமாகவே பழக வேண்டும். ஆனால் நிழல்போல் விடாது அவரை அடுத்திருக்க வேண்டும். ஆசிரியர் எவ்வெவ் விதத்தில் மகிழ்வாரோ அவ்வவ்விதத்தில் நடந்துகொள்ள வேண்டும். இங்ஙனம் நெறி தவறாது நிற்கும் நிலைக்குத்தான் வழிபாடு என்று பெயராகும். இதனைப் பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நன்னூல் என்னும் இலக்கண நூலிலுள்ள.

> அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
> நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோடு
> எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்
> அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே

என்னும் நூற்பாவால் உணரலாம்.

## பாடம் கேட்கும் முறை

அந் நன்னூலில் பாடங் கேட்க வேண்டிய முறை அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சில மாணவர்கள்



நினைத்த நேரத்தில் பள்ளிக்கூடம் செல்வார்கள். ஆசிரியரை மதியாமல் தாமாகவே அமர்ந்துகொள்வார்கள். ஆசிரியர் கட்டளையில்லாமலேயே வாயில் வந்ததை உளறிக் கொட்டத் தொடங்கி விடுவார்கள். ஆசிரியர் கற்பிக்கும் பாடங்கள் அவர்தம் செவித்துளையில் சிறிதும் நுழையா. "எல்லாம் நுழைந்தன; இன்னும் வால்மட்டுந்தான் நுழையவில்லை" என்று ஒருவன் கூறியதற்கிணங்க, மனம் வேறு எங்கெங்கேயோ சென்றிருக்கும். தப்பித் தவறிக் காதில் விழுந்த இரண்டொரு கருத்தையும் அங்கேயே மறந்து விடுவார்கள். ஆசிரியர் போகலாம் என விடையளிப்பதற்குள்ளாகவே எழுந்து ஓடிவந்து விடுவார்கள்.

இத்தகைய பிள்ளைகளும் உலகில் இருந்தே தீர்கின்றனர். இங்ஙனம் நடத்தலாகாது. குறிப்பிட்ட நேரத்தில் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும்; சென்றதும் ஆசிரியர்க்கு வணக்கம் செலுத்த வேண்டும்; அவர் சொல்லிய இருக்கையில் அமரவேண்டும்; அவர் கட்டளையிட்ட பிறகே, ஏதேனும் ஒப்பிப்பதையோ படிப்பதையோ செய்ய வேண்டும். வேறெங்கும் மனத்தைச் செலுத்தாது ஓவியம் போன்றிருந்து பாடங்களை உற்றுக் கேட்க வேண்டும். கோடைக் காலத்தில் உச்சி வேளையில் மிகுந்த தாகம் கொண்டவன் மிக்க ஆர்வத்தோடு தண்ணீர் பருகுவதுபோல ஆசிரியர் சொல்லும் பாடமாகிய உணவைச் செவியே வாயாகவும் நெஞ்சே வயிறாகவும் கொண்டு கேட்டு உண்ண வேண்டும். கேட்ட பாடங்களை மறக்கவிடாமல் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும். ஆசிரியர் 'போ' என விடையளித்த பின்பே வீட்டுக்குப் புறப்பட வேண்டும். இங்ஙனம் ஆசிரியன் தன்மைக்குத் தக்கபடிப் பழகி அவர் குறிப்பின் வழி நடந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்களும் மாணவரின் தேவையறிந்து கல்வியுணவை ஊட்ட வேண்டும்; இக் கருத்துக்களை, அந்நன்னூலிலுள்ள,

கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகியவன் குறிப்பிற் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்
சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்
செவிவாய் ஆக நெஞ்சுகளன் ஆகக்
கேட்டவை கேட்டு அவை விடாது உளத்தமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர்

என்னும் நூற்பாவால் நன்குணரலாம். இவற்றையெல்லாம் பழங்கால (கர்நாடக) விதிகள் என்று தள்ளிவிட முடியாது. தற்காலத்திலும் மாணவர்கள் நடந்துகொள்ள வேண்டிய நடைமுறை விதிகள் பெரும்பாலான இவற்றைப் போன்றே பள்ளிக்கூட அறிக்கைகளில் வெளியிடப்பட்டிருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். ஆதலின் மாணவர்கள் இம்முறையில் பாடங்கேட்டுப் பயன்பெறுவார்களாக. இவ்விதம் கற்கும் கல்வியே விரைவிலும் வேரூன்றிப் பதியும்.

### பின்னின்றும் கற்க

பொதுவாக உலகத்தில் மானத்தோடு வாழ விரும்புபவர்கள் ஒருவர்க்குப் பின்னின்று கையேந்தமாட்டார்கள். அந்நிலைக்குப் பெரிதும் நாணுவார்கள். ஆனால் கல்வியைப் பொறுத்தமட்டிலும் அப்படியிருக்க முடியாது. இருப்பதும் அறிவுடைமையாகாது. ஒன்றும் இல்லாத பிச்சைக்காரன் ஒருவன் எல்லாம் உடைய செல்வர் முன்பு குழைந்தும் பணிந்தும் நின்று ஒன்றைக் கேட்டு வாங்குவான். அது போலவே மாணவரும் ஆசிரியர் முன்பு பணிந்து நின்று பாடங்கேட்க வேண்டும். அவரே சிறந்தவராவர். மேலும் ஆசிரியர்க்கு ஒரு துன்பம் உற்ற காலத்தில் உடனிருந்து



உதவவேண்டும். தாம் செல்வராயிருப்பின் ஆசிரியர்க்குப் பொருளும் கொடுத்து உதவலாம். ஆனால், நன்மை ஒன்றும் செய்யாவிடினும் தீமையாவது செய்யாமல் இருப்பது நல்லது. மற்றும், தாம் ஒன்றும் இல்லாத ஏழையாய் இருப்பின் பிச்சையெடுத்தாயினும் கற்கவேண்டும். இங்ஙனமாக ஒருவரின் பின்னிற்கும் நிலைக்குச் சிறிதும் வெட்கப் படக் கூடாது. கல்வியானது அச்சிறுமைகளையெல்லாம் மறைத்துப் பின்னால் பெரிதும் விளக்கந் தந்து பெருமைப் படுத்தும்; இக்கருத்துக்களை

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்;
கடையரே கல்லா தவர்.

என்னும் திருக்குறளானும்,

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே

என்னும் புறநானூற்றானும்,

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே

என்னும் வெற்றிவேற்கையானும் உணரலாம். எனவே பிள்ளைகள் ஒவ்வொருவரும் கல்விக்காகத் தம் இளமைப் பருவத்தினையே விட்டுக்கொடுத்துக் (தியாகஞ் செய்து) கற்று விளக்கம் பெறுவார்களாக.

— o —

# கல்விக் குழந்தை

இங்குக் கல்வியை ஒரு குழந்தையாகவும் அதனைக் கற்கும் மாணவனைத் தாயாகவும் ஒப்பிட்டுக் கூறினால் அது சாலவும் பொருந்தும். அவ்வாறே, நல்லாற்றூர் சிவப்பிரகாச அடிகளார், தாமியற்றிய பிரபுலிங்கலீலை என்னும் நூலுள் ஓரிடத்தில், மிகவும் தெளிவாக எடுத்து இயம்பிப் போந்துள்ளார். வனவசை மாநகரத்தில், மமகாரன் என்னும் அரசனும் மோகினி என்னும் அரசியும் அரசாண்டிருந்தார்கள். அவர்கட்கு நீண்ட நாளாகப் பிள்ளையே பிறக்கவில்லை. கடிய நோன்பு கிடந்தார்கள். அதன் பயனாய்க் குழந்தை ஒன்றும் பிறந்தது. குழந்தையென்றால், அரண்மனைக் குழந்தை அல்லவா? அதிலும் நீண்ட நாளாக இல்லாமல் பின்பு பிறந்த குழந்தை அல்லவா? ஆதலின், அக்குழந்தைக்குச் செய்யப்படும் வளர்ப்பு முறைகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? மிகவும் கண்ணும் கருத்துமாக வளர்த்தாள் தாயாகிய அரசி. அவள் வளர்த்ததற்கு இங்கு உவமையொன்று கொடுக்கப்பட்டுள்ளது. உலகில் கல்வி கற்க விரும்பிய முதல் மாணவன் ஒருவன் எங்ஙனம் தன் பாடங்களைப் போற்றி உணர்ந்து கற்பானோ, அங்ஙனமே அரசியும் தன் குழந்தையை அருமை பெருமையுடன் வளர்த்தாள் எனும் கருத்தில்,

"படியில் கல்வி விரும்பினோன் பாடம் போற்றும் அதுபோல"

என அவ்வுவமை அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, தாய் ஒருத்தி கண்விழித்தல், மருந்துண்ணல் முதலிய துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு தன் குழந்தையினை வளர்த்துக் காப்பது போலவே, மாணவர்களும் பலவிதத்திலும் முயன்று கல்வியாம் குழந்தையை வளர்ச்சிபெறச் செய்ய வேண்டும். அதுதான் உணர்ந்து கற்றதாகக் கருதப்பட்டுச் சுவை மிகுதியும் பயக்கும். அங்ஙனம் எவ்வெவ்விதத்தில் கல்விக் குழந்தையை மாணவத் தாய்மார்கள் வளர்க்க வேண்டும் என்பதைச் சற்று ஆராய்வோம்.

## புலமை பெறுவது எப்படி ?

கற்கத் தொடங்கிய மாணவன் ஒருவன், முற்கூறியுள்ள முறைப்படியே ஆசிரியரிடம் பாடங் கேட்டுக்கொள்ள வேண்டும். அதனோடு விட்டுவிடக் கூடாது. திரும்பவும் வீட்டில் வந்து படிக்க வேண்டும். கேட்ட நூற்களின் கருத்தை உலக வழக்கத்தோடு ஒத்திட்டு உண்மை உணர வேண்டும். போற்ற (சிந்திக்க) வேண்டியவைகளைப் போற்றி வைத்துக் கொள்ள வேண்டும். மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும். அவற்றுள் விளங்காமல் இருப்பதையும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். மறுநாள் ஆசிரியரை அடைந்து அவற்றைக் கேட்டுத் தெளிந்து கொள்ள வேண்டும். மாணவன் ஒரு நூலை ஒரு முறை பாடங் கேட்டதோடு விடக்கூடாது. எங்ஙனமாயினும் முயன்று மற்றொருமுறை கேட்பது நலம். அங்ஙனம் இருமுறை கேட்டால், அந்நூலில் பெரிதும் பிழைபடாமல் புலமை உள்ளவன் ஆவான். மூன்றாவது முறையும் பாடங் கேட்பானேயாயின், தானே பிறர்க்குப் பாடஞ் சொல்லக்கூடிய முறைமையினையும் உணர்ந்து கொள்வான் என்பது உறுதி. எனவே, பன்முறை கேட்கப் புலமையும் பெருகிக் கொண்டே போகும் என்று தெளியலாம்.

## கால் பங்குப் புலமை

ஆனால், ஆசிரியர் சொல்லும் பாடங்களை எத்துணை முறை ஊக்கத்தோடு கேட்பினும், அந்நூற்களில் கால்

பங்குப் புலமைத்திறம் பெற்றவனாகவே கருதப்படுவான். எனவே, மேற்கூறிய விதங்களால் மாணவன் ஒரு கால் பங்குப் புலமையைப் பெற்றுவிடுவான் என்பது திண்ணம்.

## அரைப் பங்குப் புலமை

ஆசிரியரிடம் பன்முறை பாடங் கேட்டதோடு அமைந்துவிடக்கூடாது. தன்னைப் போன்ற மற்றைய மாணவர்களோடு சேர்ந்து பழகியும் படிக்க வேண்டும். தனக்குத் தெரியாதனவற்றை அவர்களை வினவித் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் தெரியாமல் வினவுவனவற்றையும் தான் அவர்கட்குத் தெரிவிக்க வேண்டும். இங்ஙனம் ஒருவர்க்கொருவர் ஆராய்ந்து கற்றுப் பரிமாறிக் கொள்ள வேண்டும். இம்முறையில் ஒரு கால் பங்குப் புலமை உண்டாகும். ஆகவே, இதுகாறும் கூறியவற்றால் மாணவன் அரைப் பங்குப் புலமையைப் பெற்றுவிடுவான் என்பது உறுதி.

## முழுப் புலமை

பின்பு, தானே ஓர் ஆசிரியனாக அமர்ந்து மாணவர் பலர்க்குப் பன்முறை பாடங் கற்பிக்க வேண்டும். இம்முறையால் எஞ்சியுள்ள (மிகுதியாக உள்ள) அரைப்பங்குப் புலமையும் நிரம்பப் பெறும். எனவே, மாணவன் ஒருவன், ஆசிரியரிடம் பன்முறை பாடங் கேட்பதால் ஒரு கால் பங்கும், தன்னொத்த மாணவரோடு சேர்ந்து பயில்வதால் ஒரு கால் பங்கும், தான் ஆசிரியனாய் அமர்ந்து மாணவர் பலர்க்குப் பன்முறை பாடங் கற்பிப்பதால் ஓர் அரைப் பங்குமாக முழுப் புலமையும் பெற்றுவிடுவான் என்பது வெளிப்படை. இவற்றை,

"நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்



ஆசான் சார்ந்து அவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாகக் கொளினே மடம்நனி இகக்கும்."
"ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலில் பிழைபாடு இலனே."
"முக்கால் கேட்பின் முறையறிந்து உரைக்கும்."
"ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
கால்கூறு அல்லது பற்றலன் ஆகும்."
"அவ்வினை யாளரோடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்"

என்னும் நன்னூற் பாக்களால் நன்குணரலாம்.

எனவே, இம்முறைகளால் வளர்க்கப்படும் கல்விக் குழந்தைதான் மேன் மேலும் வளர்ந்து விளக்கம் பெறும் முழுப் பயனையும் கொடுப்பது ஆகும். இவ்விதக் கல்வியே உணர்ச்சி என்னும் ஒளிவீசும். ஆதலின் மாணவர்கள் இம்முறைகளைக் கடைப் பிடித்து நன்கு உணர்ந்து கற்பார்களாக.

## சிவாஜி

அங்ஙனம், உணர்ந்து கற்றவர்களே அக்காலத்திலும் எல்லோராலும் போற்றப் பெற்றார்கள். இதற்கு எடுத்துக் காட்டாகப் பண்டைய வரலாறுகள் பல உள்ளன. சிவாஜி என்னும் மன்னன் இளமையில் கல்விகற்ற காலத்தில் ஒவ்வொன்றையும் உணர்ந்து கற்றானாம். பாரதம் இராமாயணம் முதலிய வரலாறுகளுள் உள்ள போர் நிகழ்ச்சிகளைப் படிக்கும் போதே, அவனை அறியாமல் அவனுக்கு வீரச் சுவை ததும்புமாம். அவன் பிற்காலத்தில்

போரிற் சிறந்த மன்னனாகத் திகழ்ந்து பலராலும் போற்றற்குரியவன் ஆனமைக்கும் காரணம் உணர்ந்து கற்றமையன்றோ ?

### கர்னன்

பாரதத்திலும் கர்னன் உணர்ந்து கற்றதாக ஒரு வரலாறு மக்களிடையே வழங்கப்பட்டு வருகின்றது. அவன் பாடங்கேட்க விரும்பிய ஆசிரியர் (குரு) ஒருவரை அடுத்தான். ஆனால், அவ்வாசிரியரோ அந்தண (பிராமண) குலத்தவர்க்கே பாடக் கூறும் நெறியுடையவர். கர்னனோ அரச குலத்தைச் சார்ந்தவன். இருப்பினும் கல்வி கற்பிக்குமாறு அவரை வேண்டினான். அவரும், நீ எக்குலத்தவன் என வினவினார். தன்னை அந்தண குலத்தினனாகப் பொய் கூறி அவரை ஏமாற்றினான். அவரும் முறையே கற்பிக்கத் தொடங்கினார். பாடங் கேட்டுக் கொண்டிருக்கும் போதே கர்னனை ஒரு வண்டு துளைத்தது. இரத்தம் பெருக்கெடுத்தது. அவன் அதனை ஒரு சிறிதும் அறிந்தான் இலன். பாடத்தையே சுவைத்துணர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். அக்காட்சியைக் கண்டார் ஆசிரியர்! என்ன! வண்டோ துளைத்துக் கொண்டே இருக்கின்றது. அதையும் அறிந்தானிலன்! வலியும் தோன்றப் பெற்றானிலன்! பாடத்தையே உணர்ந்து சுவைக்கின்றானே! ஆதலின், ஒருகாலும் இவன் அந்தண குலத்தினனாய் இருக்க முடியவே முடியாது. அரச (க்ஷத்திரிய) குலத்தைச் சார்ந்தவனுக்குத் தான் இவ்வித ஆற்றல் (சகிப்புத்தன்மை) இருக்க முடியும் என எண்ணினார். உடனே, கர்னனை நோக்கி "நீ அரச குலத்தவன் தானே? உண்மையை ஒப்புக்கொள்" என்று கடிந்து கேட்டும் விட்டார். வேறு வழியில்லை. அவனும் அஞ்சி உண்மையை ஒத்துக் கொண்டானாம்.



### உணர்ச்சியின் இருப்பிடம்

ஆனால், பாரதவரலாற்றில் கர்னனைவிடச் சிறந்தவனாகக் காணப்படுகின்றான் ஒருவன். அவனை உணர்ச்சியின் இருப்பிடம் என்றே கூறிவிடலாம். அவன்தான் ஏகலைவன் என்னும் எழுச்சிமிக்க வேடனாவான். அவன் அரசிளங் குமரர்கட்கு வில் தொழில் பயிற்றும் துரோணரை அடைந்தான். தனக்கும் பயிற்றுமாறு தாழ்மையுடன் வணங்கி விண்ணப்பித்துக் கொண்டான். ஆனால், அவர் மறுத்து விட்டார். அதற்காகச் சோர்ந்து விட்டானா அவன்? இல்லை யில்லை. உணர்ச்சி என்னும் ஊன்றுகோல் உள்ளபோது அவனுக்கென்ன குறைவு? உடனே, ஏகலைவன் தனது இருப்பிடத்தை அடைந்தான். துரோணரைப் போலவே பொய்யுருவம் ஒன்று செய்தான். அதனை ஓரிடத்தில் நிறுத்தினான். அப் பொம்மையினையே ஆசிரியராகக் கொண்டான். அதன் எதிரே நின்று தானே வில் தொழிலைப் பழகத் தொடங்கினான். கற்றுத்தீர வேண்டும் என்னும் உணர்ச்சி ஊக்குவதால் ஒவ்வொரு பகுதியினையும் நன்கு ஊன்றி உணர்ந்து கற்கலானான். அவ்வுணர்ச்சியால் அவன் கல்வியும் விளக்கம் பெற்றது. அவனும், ஏனைய அரசிளங் குமரர்களைவிட வில்லில் சிறந்த வீரனாக விளங்கினான். பின்னொரு காலத்தில் துரோணர் முதலிய பலராலும் போற்றிப் புகழவும் பெற்றான். எனவே, ஏகலைவன் இந்நிலைமைக்கு வந்ததற்குக் காரணம் ஊக்கமும் உணர்ச்சியும் அன்றோ ?

### அன்னோரைப் பின்பற்றுக

ஆகவே, மாணவர் அனைவரும் அவ்வரலாறுகளை உணர்ந்து நோக்க வேண்டும். தாமும் அன்னோரைப் பின்பற்றவேண்டும். பாடங் கேட்கும் போதும், வேறு ஓசை

கேட்பினும், மணம் வீசினும், காட்சி நிகழினும் அவற்றில் கருத்துச் செலுத்தலாகாது. தம்மையும் வண்டு துளைத்தாலும் கர்ணனைப் போலக் கல்வியிலேயே தம் உணர்ச்சி முழுமையையும் ஊன்றியிருக்க வேண்டும். சில சமயங்களில் தமக்கு விளங்காதனவற்றை, ஆசிரியரின் உதவி தேவையில்லாமலேயே தாமே உணர்ந்து கொள்ள முயன்று பார்க்க வேண்டும். மேலும் ஆசிரியரிடத்தில் உண்மையன்பு உடையவர்களாகத் திகழ வேண்டும். ஏகலைவனுக்குக் குறைந்தவர்களா நாம் என்னும் எழுச்சி தோன்றவேண்டும். ஒவ்வொன்றையும் கற்கும்போது சிவாஜியைப் போன்று மெய்ப்பாட்டுணர்ச்சி ததும்ப வேண்டும். அதற்கேற்ற படியே, மாணவர்கட்கு உணர்ச்சி ஊட்டும் பாடங்களை உணர்ச்சி ததும்பும் முறையில் கற்பிக்க வேண்டும். அதனாலும் மாணவர்கள் உணர்ந்து கற்க முடியும்.

— o —

## உணர்ந்தால்தான் உண்மை விளங்கும்

மேலும், நூற்களை நன்றாக ஆராய்ந்து உணர்ந்து கற்றால்தான் உண்மையும் விளங்கும். இல்லாவிடின், நூற் கருத்துக்கள் பொய்யாகவும் பொருந்ாதனவாகவும் சிலர்க்குச் சில சமயங்களில் தோன்றிவிடலாம். அதனால், அந் நூற்களை மேலும் கற்க மனம் விரும்பாது. அதற்கேற்பவே சிலர், ஒரு நல்ல நூலைக் கற்கத் தொடங்கினாலும் உணர்ந்து கற்பதில்லை. நுனிப் புல் மேய்ந்த அளவோடு நின்று விடுகின்றார்கள். ஆதலின், அந் நூலுள் 'அது தப்பு, இது தப்பு' என்று குறை கூறவும் செய்கின்றார்கள். பின்னர், அறிவுடையவர்களால் நன்கு உணர்த்தப் பெற்றதும் தம் குற்றத்திற்குத் தாமே வருந்துகின்றார்கள். மாணவர் சிலரும், வகுப்பில் ஆசிரியர் ஒரு நூற் கருத்தைச் சொல்லத் தொடங்கியதும் முந்திரிக் கொட்டைபோல் முந்துகின்றனர். எடுத்ததும், இது எப்படி ஐயா பொருந்தும் என்று குறுக்குக் கேள்வி போட்டுவிடுகின்றனர். பின், ஆசிரியர் அக்கருத்தை விளக்கியதும் தம் அறியாமைக்கு வெட்கித் தலைகுனிகின்றனர். ஆதலின், யாதொன்றனையும் காணுவதோடும் கேட்பதோடும் நின்று விடக்கூடாது. அமைதியாக அமர்ந்து தீர உணர்ந்து (ஆராய்ந்து) பார்க்க வேண்டும். அப்போதுதான் முழு உண்மையும் தெளிவாகப் புலப்படும். "கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே (ஆராய்ந்துணர்வதே) மெய்"

என்பது முதியோர் மொழியல்லவா? இவ்வித ஆராய்ச்சி உணர்ச்சி இல்லாதவர்கள், அறிவு உலகத்தில் பெரிதும் இடர்ப்பட்டு நாணம் உறுவார்கள். துன்பம் பலவற்றிற்கும் ஆளாவார்கள். "ஆய்ந்து ஓய்ந்து பார்க்காதான் தான் வாச மருந்து உண்பான்" என்பது பொய்யா? புனைந்துரையா? மெய்யே யாகும். எனவே, உண்மையறிய விரும்புவோர் உணர்ந்து கற்றே தீரவேண்டும். இதற்கு எடுத்துக் காட்டாக எவ்வளவோ தரலாம். ஒன்று வருமாறு:—

## முதிய இளைஞர்

பண்டு, தமிழ் நாட்டில் சங்க காலத்தில் பிசிராந்தையார் என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்தார். அவர் வயதால் முதியவரே. ஆனாலும், வடிவத்தால் இளைஞராகவே காணப்பட்டார். தலைமயிர் சிறிதும் நரைக்கவில்லை. உடற்கட்டும் தளரவே யில்லை. இளங்காளை போல் தோற்ற மளித்தார். அவர் ஒரு காரணத்தை முன்னிட்டு வெளியூர்க்குச் சென்றிருந்தார். அங்கிருந்த பெரியவர்கள் சிலர் அவரை உற்று நோக்கினர். நோக்கிப் "புலவரீர்! நுமக்கு வயது பலவாகியும் நரை தோன்றவில்லையே! உடற்கட்டும் தளர வில்லையே! காரணம் என்ன? நீர் மட்டும் இக்கலையினை (வித்தையை) எங்குக் கற்றீர்? எப்போது கற்றீர்? எவரிடம் கற்றீர்? எவ்வாறு கற்றீர்? எமக்கும் அறிவிக்கலாகாதா?" என்று ஆவலுடனும் வியப்புடனும் கேட்டார்கள். அதற்கு, அப்புலவர் அவர்களை நோக்கிப், "பெரியோர்களே! இஃதொன்றும் அவ்வளவு அரியதும் வியக்கத்தக்கதுமாக எனக்குத் தோன்றவில்லையே! இயற்கையாகவும் எளிதாகவும் எய்தக் கூடிய நிலைதானே! இருப்பினும் என்னறிவுக்குத் தோன்றிய காரணங்களை ஒளிக்காமல் கூறுகின்றேன் கேளுங்கள்; என் மனைவி மக்கள் முதலிய உறவினர்



அனைவரும் நற்குண நற்செய்கை உடையவர்கள்; என்னிடம் வேலை செய்பவரும் அத்தகையோரே; மேலும் எங்கள் நாட்டு வேந்தன் நல்லன அல்லனவற்றைச் செய்யவேமாட்டான்; அறத்தின் வழிநிற்கும் செங்கோல் மன்னனாவான்; மற்றும் யான் வாழும் ஊரோ, கல்வியறிவு ஒழுக்கங்கள் நிரம்பப் பெற்ற சான்றோர் பலர் வாழும் வாய்ப்பைப் பெற்றுள்ளது; இக்காரணங்களினாலேயே யான் இன்றும் இளமை உள்ளவனாகவே காணப்படுகின்றேன்; நரை திரை மூப்பும் நாடவில்லை" என்று பதில் கூறினார். இதனை அவரே பாடிய,

"யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியரென வினவுதி ராயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"

என்னும் புறநானூற்றுச் செய்யுளால் உணரலாம்.

## இங்கோர் ஐயம்

ஆனால், இங்கோர் ஐயத்திற்கு இடம் இருக்கலாம். அஃதென்ன? மனைவிமக்களும், வேலைக்காரரும், வேந்தனும் ஒழுங்காய் இருப்பதாலும், ஊரில் சான்றோர் பலர் வாழ்வதாலும் ஒருவர்க்கு நரை, திரை, மூப்பு உண்டாகா என்பது எப்படிப் பொருந்தும்? அதற்கும் ஏனையோர்க்கும் இயைபென்ன உளது? என்ற ஐயம் எழத்தானே செய்யும்? அங்ஙனமே, சிலரும் ஐயப்பட்டுக் கேட்கின்றனர். அதற்குத்தான் உணர்ச்சி வேண்டும் என்பது. இங்கு உணர்ந்து

கற்காவிடின், இச் செய்யுள் பெரும்பிழை உள்ளதாகவும் பொருந்தாததாகவுமாகக் கருதப்பெற்று ஒதுக்கப்பட்டு விடும். ஆகவே, ஆசிரியர் முதலிய அறிஞரை அடுத்தோ, தன்னொத்தவரோடு கலந்து பேசியோ, அல்லது தானே ஆராய்ந்தோ நன்கு உணர்ந்து பார்க்கின், இச் செய்யுளின் உண்மை விளங்காமற் போகாது. அங்ஙனம் விளங்கப் பெற்ற பின்னரே, இச் செய்யுளும் சுவையளித்தல் பேரின்பம் பயக்கும் எனவே, இச்செய்யுளின் உண்மைக் கருத்தை உணர்ந்துபார்க்க முயல்வோமாக.

## இளமைக்குக் காரணம்

பொதுவாக நாம், உலகத்தில் ஒருவரின் உருவத்தைக் கொண்டு அவர் வயதை ஒரு திட்டமிட்டுக் (நிர்ணயித்து) கூறுவது வழக்கம். அப்படிக் கூறுவதில், சில சமயம் பிழை பட்டும் விடுகின்றோம். வயதில் இளையவரை முதியவராகவும், முதியவரை இளையவராகவும் தவறிக் கூறி விடுகின்றோம் அல்லவா? எனவே, ஒருவரின் உருவம் ஒன்றைக் கொண்டே வயதை உறுதி செய்துவிடுவது என்பது எளிதான தன்று. மேலும், ஒருவரின் உருவம் இளமையாகக் காணப்படுதற்கோ அல்லது முதுமையாகக் காணப்படுதற்கோ அவர் வயதொன்று மட்டும் காரணம் ஆகிவிட முடியாது. அவரவர் அன்றாட வாழ்க்கையில் செய்துவரும் பழக்க வழக்கங்களே தக்க காரணமாகும். மனிதர்கள் இயற்கையை ஒட்டித் தூய (சுகாதார) முறையில் வாழ்வார்களே யாயின் நீண்ட நாளைக்கு உயிர் வாழலாம்; எவ்வளவு வயதானாலும் உருவம் இளமையானதாகவே காணப்படும். இங்ஙனமின்றி, இயற்கைக்கு மாறாகப் பலவிதத் தீநெறிகளில் ஒழுகுவார்களேயாயின் சிறுவயதிலேயே உடற்கட்டுத் தளரும் முதுமை வந்து முன்னிற்கும். விரைவிலும் இறந்தொழிந்து விடுவார்கள்.



## மனமே மனிதன்

மற்றும், மனக்கவலை என்பது அறவே கூடாது; எப்போதும் மனம் மகிழ்ச்சியாகவே இருக்கவேண்டும். பரந்தபான்மை மனத்திற்கு மிகவும் தேவை. "மனமே மனிதன்" என்னும் அறிவு மொழியின் கருத்தின்படி மனந்தான் மனிதரின் வாழ்க்கையைப் பலப்படுத்தும் கருவியாகும். மனக்குறை பலக்குறையன்றோ? மன அறிவு (பகுத்தறிவு) உடைமையினாலேயே மனிதர் என்னும் பெயரும் மனிதர்க்கு வழங்கப்பட்டது. எனவே, மனம் தளரின் உடல்தளரும்; உடல் தளரின் உயிர் தளரும்-(போகும்). உடல் (தத்துவ) நூல் ஆராய்ச்சிக்காரர் அனைவரும், எப்போதும் சிரித்தும் விளையாடியும் மனத்தை மகிழ்ச்சியாகவே வைத்துக்கொண்டிருக்க வேண்டும்; சிறிதும் கவலைக்கு இடந்தரலாகாது என்று கூறுவதும் இக்காரணம் பற்றியே. அன்றியும் அண்மையில் இறக்கக் கூடிய அளவில் உடல்நிலை உள்ளவர்களையும், மேலும் மருத்துவம் சில செய்து பின்னும் பத்தாண்டுகள் உயிர் வாழ்ந்து கொண்டே போகச் செய்யலாம். இதற்கு ஐரோப்பிய நாட்டு மருத்துவராகிய வார்னாப் (Vernap Surgeon) போன்ற ஆராய்ச்சிக்காரர்களே போதிய சான்று ஆவார்கள். இம்முறைகள் எல்லாம் மேல்நாட்டு விஞ்ஞானப் புலமை நிறைந்த மருத்துவர்களால் பெரிதும் விளக்கப்பட்டுள்ளன.

## உடலும் உயிரும்

ஆனால், அயல்நாட்டு வெள்ளைக்கார ஆராய்ச்சியில் பித்துக் கொண்டவர்களே பெரும்பாலும் இவற்றை நம்புவார்கள். நம்நாட்டு ஆராய்ச்சி ஒன்றிலேயே பித்துடையோர் சிலர் இவற்றை நம்பாமலும் இருக்கலாம். ஆயின்,

இவர்களும் நம்பும் வண்ணம் நம் பழந்தமிழ்ப் பெரியார்களும் இவற்றை ஆராய்ந்து நல்ல முடிபு கூறிச் சென்றுள்ளனர். நம் திருமூலர் திருமந்திரத்தினையே எடுத்துக் கொள்வோம். ஈண்டு, திருமூலர் தம் சொந்த (அநுபவ) நிலையினை எடுத்துக் கூறியிருப்பது மிகவும் பாராட்டி ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும். அஃது என்ன? "நான் முதலில் என் உடம்பையே பயனற்றது என்றெண்ணியிருந்தேன். உயிர் நிலைபெறச் செய்யும் பொருள்கள் யாவும் உடம்புக்குள்தாம் உள்ளன என்பதனையும் கண்டேன். ஆதலின் உடம்பை அழியவிடக்கூடாது. உடம்பு அழியின் உயிர் அழிந்துவிடும். உயிர் அழியின் உயர்நிலை (மெய்ஞ்ஞானம்) அடைய முடியாது. எனவே, உயர்நிலை அடையவேண்டும். நீண்ட நாளைக்கு உயிர்வாழ வேண்டுமானால், அவ்வுயிர் குடிபுக்கிருக்கும் உடம்பு நன்றாய் இருக்க வேண்டும். கடவுளும் நம் உடம்பைக் கோயிலாகக் கொண்டு உறைகின்றார். ஆதலின், நான் உடம்பை வளர்க்க விரும்பினேன். உடம்பினை ஓம்பி வளர்க்கும் வழியினையும் (உபாயத்தினையும்) அறிந்தேன். அதன்படியே உடம்பினை ஓம்பி வளர்த்தும் வருகின்றேன். அதனால், உயிரையும் நீண்ட நாளாக வளர்த்துவருகின்றேன். அதனால், உயர் நிலை அடையவும் வழியுண்டாயிற்று" என ஆராய்ந்துணர்ந்து அழகாகக் கூறியுள்ளார். இக்கருத்தமைத்து,

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே."

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"



என அழகாகவும் அழுத்தமாகவும் பாடியுள்ளார். மேலும், இப்பெரியார் மூவாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகின்றார். திருமூலர் வயதில் ஐயங்கொள்வோர், தற்போதாவது ஒருசிறிதாவது உண்மையறியலாம். மூவாயிரம் ஆண்டுகளில் முழு நம்பிக்கை யில்லாவிடினும் ஏறக்குறைய மிகப் பல்லாண்டுகள் வாழ்ந்தேயிருப்பார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

## பழக்க வழக்கங்களே காரணம்

எனவே, அயல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சியின்படி தான் நோக்குவோமே! அல்லது நம்நாட்டு மெய்ஞ்ஞான ஆராய்ச்சியின்படியுந்தான் நோக்குவோமே! நீண்ட நாளைக்கு உயிர்வாழுவதற்குக் காரணம், நரை, திரை மூப்புக்களால் தளராத நல்ல உடலமைப்பே என்பதும், அந்நல்ல உடலமைப்புக்குக் காரணம், அவரவரும் தத்தம் மனத்தாலும், வாக்காலும், உறுப்புக்களாலும் (காயத்தாலும்) அன்றாட வாழ்க்கையில் எண்ணியும், பேசியும், செய்தும் வரும் பழக்க வழக்கங்களே என்பதும் எளிதில் புலனாகும்.

## புலவர் கூற்றுப் பொருத்தமே

எனவே, தற்போதுபிசிராந்தையார் என்னும் புலவரை எடுத்துக் கொள்வோம். மனைவி மக்கள், வேலைக்காரர் முதலிய அனைவரும் நற்குண நற்செய்கை உடையவர்களாக இருந்ததால் புலவரும் நல்ல பழக்க வழக்கங்கள். உடையவராகத் திகழ்ந்தார். அரசனும் ஒழுங்காய் இருந்ததால் அச்சம், வறுமை முதலிய கவலைகட்கு இடமில்லாமற் போயிற்று. அவ்வூரில் சான்றோர் பலர் வாழ்ந்ததால் நல்ல கூட்டுறவு கிடைத்தது. சுற்றுச் சூழலின் இயற்கைதானே

எவர்க்கும் இருக்கும்? எனவே, அங்குப் பொய், களவுகள், காமம், சூது, கொலை, பொருமை, வஞ்சனை முதலிய தீச் குண, தீச்செய்கைகட்குச் சிறிதும் இடமில்லாமற் போயிற்று. ஆகவே, மனக்கவலை ஏற்படுவதற்கோ, உடல் கெடுவதற்கோ வழியொன்றும் இல்லையாயிற்று. நல்ல பழக்க வழக்கங்களே ஏற்பட்டன. அவற்ருல் புலவர்க்கு வயது பலவாகியும் உடற்கட்டுத் தளரவில்லை. நரை திரை மூப்புக்களும் எட்டிப் பார்க்கவும் இல்லை. நீண்ட நாளைக்கு உயிர் வாழ்வும் முடிந்தது. ஆகவே, அப்புலவர் பெருமான் சொல்லிய காரணம் தற்போது பொருத்தமாகவே தோன்றுகின்றது அல்லவா? ஆனல், இப்புறநானூற்றுச் செய்யுளை இவ்வளவு ஆராய்ந்து உணராது விடுவோமாயின் பிழைபாடுடையதாகவே தோன்றும். உணராது படிப்பவரும், அப்புலவர் கூற்றைப் பொய்யெனக் கூறித் தாமே பொய்யராகியும் விடுவர் என்பது திண்ணம். ஆதலால், ஒவ்வொன்றையும் உணர்ந்து கற்ருல்தான் உண்மைச் சுவை ஏற்படும். போதிய நம்பிக்கைக்கும் இடமுண்டாகும்.

## புதுமைப் பித்தர்கள்

மேலும், நம் நாட்டில் இருந்த நம் முன்னோர்கள் நீதி நூற்களை ஒட்டியும், சமய நூற்களை (சாஸ்திர சம்பிரதாயம்) ஒட்டியும் பல பழக்க வழக்கங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளனர். பின் வந்தவர்களில் பலரும் அவற்றை விடாமல் செய்தே வருகின்ருர்கள். ஆனல், புதுமைப் பித்தர்கள் சிலர் மட்டும் அவற்றில் சிறிதும் நம்பிக்கை கொள்வதில்லை; அவற்றைப் பற்றிப் பலவிதமாக ஏளனஞ் செய்கின்ருர்கள். "அப்பழங் குப்பைகள் எல்லாம் இங்கு யாருக்குத் தேவை; அவற்றையெல்லாம் நாங்கள் நம்போம்; அவற்ருல் வரும் பயன்தான் என்ன? எல்லாம் முட்டாள் தனமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன; அவையெல்லாம் பழைய (கர்நாடக) வைதிகர்கட்கே பொருந்தும். நமக்கெல்லாம் சற்றும் சரிவரா; நாங்கள் பகுத்தறிவின்படியே நடப்போம்; நாங்களும்முட்டாள்களா? என்றெல்லாம் பலபடப் பேசுகின்ருர்கள். பழைய பழக்க வழக்கங்களைச் செய்யவும் வெட்கப்படுகின்ருர்கள். இவர்கள் சில புதிய சீர்திருத்தத் திட்டங்களை மனத்தில் வகுத்து வைத்துக்கொண்டுள்ளார்கள். அத்திட்டங்கள் எல்லாம்இருக்கவேண்டியது முறையும் தான். ஆனல், அவற்றை மட்டுமே பற்றுக்கோடாகக் கொண்டு பழைய பழக்க வழக்கக் கொள்கைகள் அனைத்தையும் அறவே வெட்டி வீசி எறிந்து விடுவது பொருந்துமா? முறைதான் ஆகுமா?



## பெரும்பாலன உண்மையே

மேலும், இன்னோர் புது நாகரிகப் பழக்க வழக்கங்களையே பெரிதும் விரும்புகின்ருர்கள். அயல்நாட்டு (வெள்ளைக்கார) ஆராய்ச்சியிலேயே முழுநம்பிக்கை உடையவராய் இருக்கின்ருர்கள். நம்நாட்டுப் பழைய நூற்களின் கருத்துக்களை இவர்களும் நன்கு உணர்ந்து கற்பார்களேயாளுல், அவற்றையொட்டி ஏற்படுத்தியுள்ள பழக்க வழக்கங்களில் பலவற்றையும் உண்மையே என்று நம்பியே தீருவார்கள். நம்நாட்டில் சாத்திர சம்பிரதாயங்கள் என்னும் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள பழக்க வழக்கங்களில் பெரும்பாலனவும் இயற்கை (தத்துவத்தை) உண்மையினை ஒட்டியனவே. மேலும், தூய இனிய (சுகாதார) வாழ்வை ஒட்டியனவும் ஆகும். இவ்வுண்மை, உணர்ந்து கற்போர்க்கே புலனாகும்.

## விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

அவ்வளவு ஏன்? நம்நாட்டு வான நூற் புலமையை (சோதிட நூல்) பற்றித்தான் எடுத்துக்கொள்வோமே.

இன்ன ஆண்டில் இன்ன திங்களில் (மாதம்) இத்தனை மணியிலிருந்து இத்தனை மணி வரையிலும் கிரகணம் பிடித்திருக்கும் என எழுதிவைத்துள்ளார்கள். அதுவும் அப்படியே நடக்கின்றது. இதற்கென்ன பதில் கூறுவார்கள்? **"சாத்திரம் பொய்யானால் கிரகணத்தைப் பார்"** என்னும் தொடர் எழுந்ததும் இதனை ஒட்டியே. ஏனையவற்றையும் இதுபோலவே கொள்ள வேண்டும்; இன்னும், வடக்குப் பக்கமாகத் தலைவைத்துப் படுத்தலாகாது; தெற்கும் கிழக்குமே தலைவைத்துப் படுத்தற்குரிய திக்குக்களாகும் என நம் முன்னோர்கள் நூற்களில் எழுதிவைத்துள்ளார்கள். சிலர்க்கு நம்பிக்கையில்லாமல் இருக்கலாம். ஆனால், ஐரோப்பிய நாட்டு ஆராய்ச்சிக்காரர்களும், தெற்கும் கிழக்குமே தலைவைத்துப் படுத்தற்குரிய திக்குக்களாகும் எனத் தம் விஞ்ஞானத் திறமை கொண்டு ஆராய்ந்து முடிவு கட்டியுள்ளார்கள். அவற்றையெல்லாம் விரிப்பின் பெருகும். ஏன்? சாப்பிடுவதைத்தான் எடுத்துக்கொள்வோமே. வாழையிலையின் நுனியை இடக்கைப் பக்கத்தில் போட வேண்டும் என எழுதி வைத்துள்ளார்கள். அம்முறைதான், சாப்பிடுவதற்குப் போதிய வசதி அளிக்கின்றது என்பதைச் சாப்பிடும்போது தெரிந்துகொள்ளலாம். எனவே, நம் நாட்டுப் பழக்கவழக்கங்களில் பெரும்பாலனவும் வாழ்க்கை வசதியினை ஒட்டியே நூற்களில் எழுதிவைக்கப்பட்டுள்ளன என எளிதின் உணரலாம். பிசிராந்தையார் பாடலும், திருமூலர் பாடலும் இயற்கை உண்மைக் கருத்தை உள்ளடக்கிக்கொண்டிருப்பதே இங்குப் போதிய சான்று பகரும். இப்பாடல்களை யெல்லாம் உணர்ந்து கற்றவர்களே, நம் முன்னோர்கள் இயற்கைப் பொருள் ஆராய்ச்சியாளர்கள் எனவும், அறிவியல் வல்லுநர்கள் (விஞ்ஞான நிபுணர்கள்) எனவும் அறிந்து கொள்ள முடியும். மேலும், அவர்கட்கு நம்நாட்டு மெய்ஞ்ஞானமும்



அயல்நாட்டு விஞ்ஞானமும் கிட்டத்தட்ட ஒற்றுமையுடையனவே என்ற உணர்ச்சியும் தோன்றும். ஆனால், ஆராய்ச்சி செய்துகொண்டு போகும்விதங்களில் வேற்றுமை காணப்படினும், பெரும்பாலும் முடிவுஒன்றாகவே இருக்கும். ஆனால், அயல்நாட்டு விஞ்ஞானம் மலைமேல் ஏற்றிய விளக்காக இருப்பதால் உலகமே போற்றுகின்றது. நம் நாட்டு விஞ்ஞானமோ குடத்தில் வைத்துத் தூண்டாது விட்ட விளக்காக இருப்பதால் ஒளி மங்குகின்றது. இத்தேவையறிந்து நம் நாட்டினரும் அறிவியலைப் பெருக்கிக்கொள்வதே நலம் பயப்பதாகும்.

## முறை மயங்கல்

ஆனால், இங்கு ஒன்றைக் குறிப்பிடாமல் விடுவது அவ்வளவு அறிவுடைமையாகாது. நூற்களில் உள்ள எல்லாக் கருத்துக்களையும் நம்பி ஏற்றே தீர வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. அவ்வண்ணம் கட்டாயப்படுத்துவதும் அவ்வளவு சிறந்ததல்ல. ஏன்? மனிதர்க்கு உயர்ந்த குணம், நடுத்தரமான குணம், தாழ்ந்த குணம் எனக் குணங்கள் மூன்றுண்டு. அம்மூன்றும் நாடோறும் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கும். ஒவ்வொருவரும் உயர்ந்த குணம் (சத்துவ குணம்) நடக்கும் போது உயர்ந்த செயலைச் செய்பவர்கள் நடுத்தரமான குணம் (ரஜோ குணம்) நடக்கும்போது நடுத்தரமான செயலைச் செய்வார்கள். தாழ்ந்த குணம் (தாமச குணம்) நடக்கும்போது தாழ்ந்த செயலைச் செய்வார்கள். எண்ணுவதும், பேசுவதும் அப்படியே. எனவே, ஒருநூல் இயற்றும் நூலாசிரியராயினும் சரி; அவற்றைப் பிறர்க்கு எடுத்துக் கற்பிக்கும் (போதக) ஆசிரியராயினும் சரியே; இருவருமே மேற்கூறிய முக்குணங்களின் வயப்பட்டே நடப்பார்கள். ஆகவே, அங்ஙனம் தாழ்ந்தகுணம் நடக்கும்போது தாழ்ந்த

கருத்துக்களையும் எழுதியும் விடுவார்கள். கூறியும் விடுவார்கள்.

"நூல்உரை போதகா சிரியர் மூவரும்
முக்குண வசத்தால் முறைமறந் தறைவரே"

என்னும் இலக்கணக்கொத்து நூற்பாவால் இதனை அறியலாம். ஆகவே, அங்ஙனம் உள்ள தாழ்ந்த கருத்துக்களை மட்டும் கற்பவரும் கேட்பவரும் ஒதுக்கிவிடலாம். அதில் ஒன்றும் தப்பில்லை. அதற்காக அந்நூலாசிரியரையே வெறுத்து விடக்கூடாது. அந்நூல் முழுவதையுமே நம்பாமல் ஒதுக்கி விடக்கூடாது. அங்ஙனம் செய்யின், எல்லா நூற்களிலும் பிழைகாண முடியும். எனவே, எல்லா ஆசிரியர்களையும் வெறுக்க நேரிடும். இங்கு உணர்ச்சி வேண்டும் என்றதும் இதற்காகவே.

— o —

# ஒன்று கற்றாலும் உணர்ச்சி வேண்டும்

சிலர் பல நூற்களைப் படித்துக்கொண்டே போகின்றார்கள். ஆனால், ஒன்றையாயினும் உணர்ந்து கற்றுப் பயன் பெறுவதில்லை. நூற்கருத்துக்களை மறவாது ஓம்புவதும் இல்லை. அப்படியிருக்கவும் மேலும் சில நூற்களைப் படிக்கத் தொடங்கிவிடுவார்கள். இவர்களின் ஆரவாரக் கூத்தை என்னென்று இயம்புவது? ஒருவன் தன் கையில் இருந்த செல்வத்தை (பணம்) வேண்டுமென்றே கீழே போட்டுவிட்டு, மேலும் அதுபோன்றே செல்வத்தை அரித்தரித்துத் தேடி அலைவானேயானால் அவனை எவ்வளவு அறிவுடையவன் என்று புகழ முடியும்? அவ்வளவு அறிவுதான் இந்நுனிப்புல் மேயும் (மேலோடு படிக்கும்) மேதாவிகட்கும் இருக்கும். இன்னோரின் மடமைச் செயலை, நீதிநெறி விளக்கம் :

"வருந்தித்தான் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்"

என எள்ளி இகழ்ந்து பேசுகின்றது. எனவே, இங்ஙனம் ஆரவாரமாகப் பல நூற்களை உணராது கற்றுப் பயனடையாது போவதைக் காட்டிலும், ஏதேனும் ஒரு நூலையாயினும்

நன்கு உணர்ந்து கற்றுக் குறிப்பிட்ட பயனடைவது மேலாகும். அறிவுடைமையும் ஆகும்.

“கசடு அறக் கற்க” என்று வள்ளுவரும் கூறியுள்ளாரன்றோ?

## ஆழ உழுதல் நன்று

இங்கு, எடுத்துக் காட்டாகச் சிறுகதை யொன்று தரலாம். இரண்டு சிறுவர்கள், தண்ணீர் வடிந்த ஓர் ஆற்றில் ஊற்றங்குழி தோண்டத் தொடங்கினார்கள். சிறுவன் ஒருவன் முதலில் ஒரு குழியைச் சிறிதளவு தோண்டிப் பார்த்தான். தண்ணீர் வரவில்லை. அதனால் பக்கத்தில் வேறொரு குழி தோண்டினான். அதிலும் தண்ணீர் வரவில்லை. பின்பு, வேறொரு குழியும் தோண்டினான். அதிலும் தண்ணீர் வரப்பெற்றானில்லை. இங்ஙனம் நெடுகக் குழிகள் பலவற்றைத் தோண்டிக்கொண்டே சென்றானே தவிர, சிறிதாயினும் தண்ணீர் வரப்பெற்றுப் பயன் பெற்றானிலன். ஆனால், மற்றொரு சிறுவன் ஒரு குழியினையே நீண்ட நேரமாகத் தோண்டிக்கொண்டேயிருந்தான். போதிய தண்ணீரும் ஊறி வந்தது. விரும்பிய பயனையும் பெற்றான். ஆதலின், எக்காரியத்தையும் இரண்டாம் சிறுவனைப் போன்றே ஆர அமர்ந்து ஆழ்ந்துணர்ந்து செய்யவேண்டும். “அகல உழுவதினும் ஆழ உழுதல் நன்று” அல்லவா?

## குங்கிலியம் சுமந்த கழுதை

மேலும், உணர்ச்சியில்லாதவர்கட்குப் படிப்பதென்றால் வேப்பங்காயாய் இருக்கும். நூற்களும் பெருஞ் சுமையாகத் தோன்றும். அவர் வைத்து இருக்கும் நூற்கட்குக் குருடன் கை விளக்கைத்தான் ஒப்பிட வேண்டும். விளக்கானது குருடனுக்கு ஒன்றையும் விளக்காதவாறு



போல, நூற்களும் அவர்கட்குப் பயனொன்றும் தாரா. மற்றும், நூற்களைச் சுமந்து திரியும் அவர்கட்குச் சுந்தரமூர்த்தி நாயனார் கூறியாங்குக் குங்கிலியம் சுமந்த கழுதையினையே ஒப்பாகக் கூறவேண்டும். கழுதையானது, குங்கிலிய மூட்டையைச் சுமக்கின்றதே தவிர அம்மூட்டையால் தானொன்றும் பயன் பெறுவதில்லை. அதுபோலவே, அவர்களும் நூற்களைச் சுமக்கின்றார்களே தவிர அவற்றால் தாமொன்றும் பயன் பெறுவதில்லை.

## உண்மை அறிவே மிகும்

எனவே, உணர்ச்சியின்றிக் கற்றவர்களைக் கற்றோராகக் கருதவே கூடாது. கல்லாதவராகவே கருதினால் வரும் பிழையொன்றும் இல்லை. மற்றும், கல்வியால் உண்டாகக் கூடிய நுண்ணறிவு அவர்க்குச் சற்றும் இராது. அவர்களை நோக்கியே,

“நுண்ணிய நூற்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.”

என வள்ளுவரும் வருந்திக் கூறியுள்ளார்.

## பெண்ணறிவு

இவ்வித உணர்ச்சியற்ற பெண்களாலேயே,

“நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே”

என்பதும் எழலாயிற்று. ஆனால், கற்றறிந்த எல்லாப் பெண் மணிகளின் அறிவையும் பேதைமை உடையதாக ஒதுக்கித் தள்ள முடியாது. அங்ஙனம் தள்ளின், அதுவே பெரும் பேதைமைத்தாகும். அவ்வளவு ஏன்? நுண்ணறிவுடைய

நூலொடு பழகிய பெண்ணாகிய ஔவையாரின் அறிவு பேதைமை உடையதா? ஏனைய பண்டைப் பெண்புலவர்களின் அறிவைத்தான் அங்ஙனம் கூற முன்வர முடியுமா? அவர்களின் அறிவுரைகள் எல்லாம் ஒதுக்கியா தள்ளப்பட்டன? அனைவராலும் விரும்பியேற்றுப் போற்றப் பெறுகின்றன அல்லவா?

## இயற்கையறிவும் செயற்கையறிவும்

எனவே, எதையும் உணர்ந்து செய்யும் மதிநுட்பம் இருக்க வேண்டும். இயற்கை அறிவாகிய மதிநுட்பத்தோடு செயற்கையறிவாகிய நூலறிவும் ஒருவர்க்கு ஒருங்கு இருக்குமாயின் அவரை வெல்வாரும் உண்டோ? அவர் திறமைக்கு முன் நிற்கும் வேறு பிற திறமைகளும் உள்ளனவோ? இல்லவேயில்லை. இக்கருத்தையே,

> "மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
> யாவுள முன்னிற் பவை?"

என வள்ளுவப் பெருந்தகையாரும் வற்புறுத்திப் போந்துளார். இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள உணர்ச்சி என்பது இயற்கை யறிவை ஒட்டியே ஏற்படுவதாகும். ஆதலின், ஒவ்வொருவரும் மறைந்து மங்கிக் கிடக்கும் தம் இயற்கையறிவைத் தூண்டி ஒளிபெறச் செய்ய வேண்டும். நூலறிவைக் கொண்டாயினும் வளம்பெறச் செய்ய முயலல் வேண்டும். அப்போதுதான் உணர்ச்சிச் சுடர் எங்கும் வீசும்.

— O —

# கல்வியின் அளவு கருவிகள்

மற்றும் ஒருவரை, உணர்ந்து கற்றவர் என்பதையும், உணராது கற்றவர் என்பதையும் எளிதில் அளந்து விடலாம். அதற்குஇரண்டு அளவு கருவிகள் உள்ளன. அவை (1) புலமைத்திறமை. (2) ஒழுக்கம் உடைமை என்பனவாகும். இவ்விரண்டும் முன்னரே ஓரிடத்தில் குறிப்பாகக்குறிப்பிடப்பட்டுள்ளன.

## (1) புலமைத் திறமை

கற்றோர் சிலரை நோக்கி, ஏதேனும் ஒன்றைப் பற்றிச் சிறிது சொல்லும்படி கேட்போமேயானால், நாம் ஏமாந்து போக வேண்டியவர்களாய் உள்ளோம். ஏன்? அவர்கள் கூறுவதென்ன? "படித்து நாளாய் விட்டது; எல்லாம் மறந்து போய்விட்டன; குடும்பத் தொல்லையில் அவற்றையெல்லாம் எங்கே ஐயா, புரட்ட முடிகின்றது? எல்லாம் அவ்வமயத்தோடு நின்று விட்டன" என்று இரங்கத்தக்க நிலையில் பதில் அளிக்கின்றார்கள். எனவே, அவர்கள் தாம் கற்ற நூற்களில் ஒருவிதப் புலமைத் திறமையும் அடையவில்லை என்பது பெறப்படும். அதற்கு ஏற்ற காரணம், உணர்ந்து கற்காத பெருங்குறையே யல்லவா?

## அவைக் கோழைகள்

சிலர், படித்த இரண்டொரு கருத்தை மறவாமல் நினைவில் வைத்திருந்தாலும் சபைக் கோழைகளாக உள்ளனர். பிறர்க்கு எடுத்துச் சொல்லும் வகையறியாதும் விழிக்கின்றனர். இவ்வித உணர்ச்சியில்லாக் கோழைகள் பலகற்றும் பயனில்லை. இவர்கள் கல்லாதாரைக் காட்டினும் கடைப்பட்டவராவார்கள். இத்திறமை உள்ளவர்களோ, கற்றவர்க்குள்ளேயே மிகச் சிறந்தவராகக் கருதப்படுவார்கள். மேலும், கோழை ஒருவன் கற்ற நூல், பேடி கை வாளை ஒக்கும். பேடிக்கும் வாளுக்கும் பயன் தருவதில் என்ன தொடர்புளது? அதுபோலவே, கோழைக்கும் நூலுக்குந்தான் தொடர்பென்ன உளது? ஒன்றும் இல்லையல்லவா? இன்னும் இவர்க்கு, மலர்ந்தும் மணம் வீசாத மலரையும் ஒப்பாகக் கூறலாம். மேலும் இவர்கள், உலகில் உயிருடன் இருந்தாலும் இறந்தவராகவே கருதப்படுவார்கள். இவையெல்லாம் சற்றும் வெற்றுரை யாகா. இவற்றை,

"கல்விக் கழகு கசடற மொழிதல்"

என்னும் வெற்றிவேற்கையானும்,

"கற்றருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்"

"வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு"

"பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்(து)
அஞ்சும் அவன்கற்ற நூல்"

"இணர் ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்ற(து)
உணர விரித்துரையா தார்"



"உளர் எனினும் இல்லாரோ டொப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச் சொல்லா தார்"

என்னும் திருக்குறள்களாலும்,

"மாருத கலைகற்றும் நிலைபெற்ற சபையிலே,
வாயிலாதவன் ஒரு பதர்"

என்னும் அறப்பளீச்சுர சதகத்தாலும் தெள்ளிதின் உணரலாம்.

### பொன்மலர் நாற்றம்

"சொல்வன்மை இன்றெனின் என்னும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றம் உடைத்து"

என்னும் குமரகுருபரர் கூற்றின்படி, கல்வியோடு சொல்வன்மையும் கூடியுள்ள புலமையே பொன்மலர் கூட மணமும் பெற்றவாறு போலாகும். அப் புலமைத் திறத்தின் ஒளியைக் கொண்டு அவரையும் உணர்ந்து கற்றவராகக் கருதவும் முடியும். ஈண்டு,

"கற்றதுடைமை காட்சியின் அறிப"

என்னும் முதுமொழிக் காஞ்சிப் பாடலும் ஒப்புநோக்கற்பாலது. எனவே, ஒவ்வொருவரும் உணர்ந்து கற்றுத் தமக்கும் பிறர்க்கும் பயன்படும் அளவில் புலமைத் திறமை நிரம்பப் பெற்று விளக்கமுறுவார்கள்.

## (2) ஒழுக்கம் உடைமை

இரண்டாவதாக நல்லொழுக்கம் இருக்க வேண்டும். மனத்தால் நல்லனவற்றை எண்ணுதல், வாக்கால் நல்லனவற்றைப் பேசுதல், உடலுறுப்புக்களால் நல்லனவற்றைச் செய்தல் என்னும் இவற்றிற்குத்தாம் நல்லொழுக்கம்

என்று பெயர். ஆனால், கற்றோர் சிலர் இவற்றிற்கு எதிர் மாறாக நடந்து கொள்கின்றார்கள். தமக்கும் பிறர்க்கும் துன்பம் விளைவித்து வாழ்க்கையினையே பாழ்படுத்தக் கூடிய, கொடிய, கெட்ட பேச்சுக்களையே பேசுகின்றனர். கெட்ட செயல்களையே செய்தும் வருகின்றனர். இவற்றிற்குக் காரணம் நூற்களை உணர்ந்து கல்லாமையேயாகும். முன் ஓரிடத்தில் கூறியுள்ளபடி, "ஏட்டுச் சுரைக்காய்" என்றும் "படித்த முட்டாள்" என்றும் இகழப்படுவர். இவர்களே இன்னோரையும் கல்லாதவராகவே கருதிவிடவேண்டும். இன்னோரைக் காட்டிலும், கல்லாதவர்கள் பலவிதத்திலும் சிறந்தவர் ஆவார்கள் ஆதலின் இப்புல்லிய நிலை பொருந்தாததாகும். எனவே கற்றவண்ணம் ஒழுக வேண்டுவது கடமையாகும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று கூறிய வள்ளுவர் வீணரா?

## உயிரினும் சிறந்தது ஒழுக்கம்

முன் ஓரிடத்தில் கூறியாங்கு ஒருவர்க்குக் கல்வி கண் போன்றதாகும். எனவே, கண்ணில்லா விட்டாலும் வாழ முடியும். உயிரில்லா விட்டால் வாழமுடியுமோ? முடியவே முடியாது. ஆதலின், ஒழுக்கத்தை உயிரைக் காட்டிலும் சிறந்ததொரு பொருளாக ஓம்ப வேண்டும்.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை"

என்னும் முதுமொழிக் காஞ்சிப் பாடலையும்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"



என்னும் குறளையும் ஈண்டு உணர்ந்து நோக்கின் உண்மை புலப்படும். அன்றியும், கண்ணாகிய கல்வியும், உயிராகிய ஒழுக்கமும் இல்லாதவர்களை நோக்கி, "ஏ! குருட்டுப் பிணமே" என்று உலகினர் அழைப்பதையும் நாம் கண்டு வருகின்றோம் அல்லவா?

## கற்றோர் பணிவு

ஈண்டு, சீவக சிந்தாமணி என்னும் காவியத்தில் திருத்தக்க தேவர் கூறியுள்ள ஒரு கருத்து கருதற்பாலது. இந்தக் காலத்தில் கற்றவர்களுள் பெரும்பாலோர் தருக்கிச் செருக்கித் தலைகனத்துத் திரிகின்றார்களே—இது சரியன்று. தலை தாழ்த்திப் பணிந்து ஒழுகுவதே உண்மையில் கற்றோர்க்கு அடையாளமாகும். இதனைத் திருத்தக்க தேவர் ஓர் ஒப்புமையின் வாயிலாக நயம்பெற உணர்த்தியுள்ளார். அதாவது, நெற்பயிர்கள் தொடக்கத்தில்—பச்சைப் பாம்பின் தோற்றத்துடன் வளர்ந்து கருத்தாங்கி, இடையில்—செல்வம்பெற்ற அற்பர்கள் சிலர்போல் தலை கனத்து நிமிர்ந்து, இறுதியில்—தேர்ந்த நூற் கல்வியுடையோர்போல் தலைவணங்கிக் காய்த்தனவாம். இந்தக் கருத்தினை,

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"

என்னும் சிந்தாமணிப் பாடலால் அறியலாம். இதைக் கொண்டு, உண்மையில் கற்றவர் யார்—கல்லாதவர் யார் என்பதை எளிதில் உணர்ந்துகொள்ளலாம். கற்றும் பிறர்க்கு உரைத்தும் தாம் அடங்காதவர்கள் பேசுவார்கள் என்னும் கருத்துடைய,

"ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்"

என்னும் திருக்குறளும்,

"கற்றறிந்தார் கண்ட அடக்கம்"

என்னும் பழமொழிப் பாடலும்,

"அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்"

என்னும் நறுந்தொகையும்,

"கற்றோர்க் கழகு கருணை"

என்னும் நீதி வெண்பாப் பாடலும், ஈண்டு ஒப்புநோக்கத் தக்கன.

## உலகொடு ஒட்ட ஒழுகல்

மேலும் ஒழுக்கம்—ஒழுக்கம் என்றால் உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதாய் இருக்க வேண்டும். ஆனால், உலகில் தீயவர்களும் உள்ளனர். அவர்கட்கு ஏற்றபடி ஒழுக லாகாது. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது பெரியோர் வாக்காகும். உயர்ந்த பெரியோர்கள் விரும்பும் படியாக ஒழுகுவதற்குத்தான், "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" என்பது பெயராகும். இவ்வித ஒழுக்க உணர்ச்சியில்லாதவர்கள் பல கற்றிருந்தாலும் அறிவில்லாத நடைப்பிணமாகவே கருதப்படுவார்கள். இன்னோரைக் குறித்தே,

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என வள்ளுவரும் வாய்ப்பறை யறைந்து போந்தார். எனவே, கற்பவர்கள் நூற்கள் உணர்த்தும் விதிகளைக் கசடற உணர்ந்து கற்று அதன்படி ஒழுகுவதே உயர்வைத் தருவதாகும்.



## உய்த்துணர்வு

ஆனால், மேற்கூறிய பண்புகள் எல்லாம் உணர்ந்து கற்றவரிடத்திலேயே காணப்படும். உணர்வு இல்லையேல் ஒன்றும் இராது. இவ்விடத்தில்,

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்"

என்னும் மணிவாசகர் வாக்கும்,

"காலை யெழுந்து கருத்தறிந்து ஓதிடின்"

என்னும் திருமூலர் வாக்கும்,

"எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்து
உய்த்துணர்வு இல்லெனின் இல்லாகும்"

என்னும் குமரகுருபரர் வாக்கும் போதிய ஆதாரமாகும். இங்கு இரண்டாவது அடியிலுள்ள, "உய்த்து உணர்வு இல்லெனின்" என்பதை ஊன்றி நோக்கினால் உண்மை விளங்கும். எனவே, மேற்கூறியவற்றால், கல்வியை விளக்கும் விளக்கு உணர்ச்சியே என்பது இனிது விளங்குகிறதல்லவா? இது தமிழர் கண்ட கல்விக் கொள்கையாகும்.

— o —

# முடிப்புரை

இதுகாறும் இந்நூல் கூறப்பெற்ற கருத்துக்களைச் சிறிது சுருங்கத் தொகுத்து வரைவோம்.

## தோற்றுவாய்

பிள்ளையுள்ள வாழ்வே வளமுடைய வாழ்வாகும் என்பதும், அதற்குப் பிள்ளைகள் அறிவுநிறைந்த நற்பிள்ளைகளாகத் திகழவேண்டும் என்பதும், அங்ஙனம் திகழ்வதற்குரிய விளக்கந்தரும் விளக்கொன்று அப்பிள்ளைகளுக்குத் தேவை என்பதும் இன்ன பிறவும் தோற்றுவாயில் உணர்த்தப்பட்டன.

## முதல் பகுதி

அடுத்தபடியாக, உலக விளக்குகளும், ஆடையணி நில நீர் முதலிய செல்வப் பொருள்களும் சிறு பயனைத் தந்து அழிந்துவிடக் கூடியனவாதலால், அவைகள் பிள்ளைகட்குச் சிறந்த விளக்காகா என்பதும், என்றும் அழியாமல் மேன் மேலும் வளரும் சிறப்பாலும், தளர்ந்துழி உதவும் தகுதியாலும், சென்ற இடங்களில் எல்லாம் சிறப்புச் செய்வதாலும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அடைவிப்பதாலும், இறந்த பின்னும் புகழொளியை உலகில் நிலைநிறுத்துவதாலும், இன்ன பிறவற்றாலும் கல்வியே அனைவரையும் விளக்குவதாகும் என்பதும்; ஆதலின் கற்றற்குரிய இளமைப் பருவத்தையுடைய



பிள்ளைகட்குக் கல்வியே சிறந்த விளக்காகும் என்பதும்; இன்ன பிறவும் முதல் பகுதியில் உணர்த்தப்பட்டன.

## இரண்டாம் பகுதி

அடுத்தபடியாக, அக்கல்விக்கும் விளக்கு ஒன்றிருந்தால்தான் அக்கல்வியும், பிள்ளைகளும், பெற்றோரும் முறையே விளக்கம் பெற முடியும் என்பதும், கல்வி நூற்களில் உள்ள கருத்துக்களை உண்மையென உணர்ந்து நம்புவதற்கும், அவற்றைச் சுவைப்பதற்கும், புலமைத் திறமை உண்டாவதற்கும், நற்குண நற்செய்கையாகிய நல்லொழுக்கம் வாய்க்கப் பெறுவதற்கும், அறம், பொருள், இன்பம், வீடு முதலிய பயன்கள் பலவற்றையும் எளிதில் அடையப் பெறுவதற்கும், உணர்ந்து கற்றலே காரணமாகும் என்பதும், அவ்வுணர்ச்சியே கல்வியை வளர்த்து விளக்கப் படுத்திக் கற்றோரையும் விளக்கும் என்பதும், ஆகையால் கல்விக்கு விளக்கு உணர்ச்சியே என்பதும், இன்ன பிறவும் இரண்டாம் பகுதியில் உணர்த்தப்பட்டன.

## நான்மணிக் கடிகை

இங்கு இதுகாறும் கூறப்பெற்ற கருத்துக்கள் யாவும் சங்கப் புலவருள் ஒருவராகிய "விளம்பி நாகனார்" என்பவரால் இயற்றப் பெற்றதும், பழந்தமிழ்ச் சங்க இலக்கியங்களுள் ஒன்றுமாகிய நான்மணிக் கடிகை என்னும் நூலில் உள்ள ஒரு செய்யுளில் அருமையாகத் தொகுத்து அமைக்கப் பெற்றுள்ளன. அச்செய்யுள் வருமாறு:

"மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
தமக்கு தகைசால் புதல்வர்; மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதில் புகழ்சால் உணர்வு" (103)

என்பது செய்யுள். இச்செய்யுளின் பொருள் வருமாறு:

### செய்யுளின் பொருள் :

வீட்டிற்கு (மனைக்கு) விளக்கம் செய்யும் விளக்கு பெண்கள் (மடவார்); அப்பெண்கட்கு விளக்கம் செய்யும் விளக்கு தகுதியான பிள்ளைகள் (புதல்வர்); மனத்திற்கினிய காதலுடைய அப்பிள்ளைகட்கு விளக்கம் செய்யும் விளக்கு கல்வி; அக்கல்விக்கு விளக்கம் செய்யும் விளக்கு புகழ்ச்சி தரத்தக்க உணர்ச்சி—என்பது நேர்ப் பொருள். இச்செய்யுளின் முதலடியில் உள்ள விளக்கம் என்னும் சொல்லுக்கு, விளக்கம் செய்யும் விளக்கு எனப் பொருள் கொள்ளவேண்டும். அவ்விளக்கம் என்னும் ஒரு சொல்லையே, மனைக்கு விளக்கம் எனவும், மடவார் தமக்கு விளக்கம் எனவும், காதல் புதல்வர்க்கு விளக்கம் எனவும், கல்விக்கும் ஓதில் விளக்கம் எனவும் நான்கு வரிகளிலும் கூட்டிக்கொள்ள வேண்டும். உணர்வு எனினும் உணர்ச்சி எனினும் ஒன்றே பொருள். இச்செய்யுள், தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலின் உரையில் மாலா தீவகம் என்னும் அணிக்கு எடுத்துக்காட்டாக அமைக்கப் பட்டுள்ளது.

### விளக்குவது விளக்கு

ஆனால், இந்நான்கு விளக்குகளுள் நாம் இங்கு எடுத்துக் கொள்ள வேண்டுவன கல்வி, உணர்ச்சி என்னும் பின்னுள்ள இரண்டு விளக்குகளேயாம். முன்னுள்ள பெண்கள், பிள்ளைகள் என்னும் இரண்டு விளக்குகளும் "வீடும் விளக்கும்" என்னும் தனி நூலில் விளக்கப்பட்டுள்ளன. பொதுவாக, எண்ணெய் விளக்கு முதலிய விளக்குகள், இருளிலிருந்து நீக்கிப் பொருள்களை விளக்கும் காரணத்தினாலேயே விளக்கு என்னும் பெயர் பெற்றன. அவை போலவே கல்வியானது அறியாமை என்னும் இருளிலிருந்து நீக்கிப் பிள்ளைகளை விளக்குகின்றது. உணர்ச்சியானது,



பயனின்றி மங்குதல் என்னும் இருளிலிருந்து நீக்கிக் கல்வியை விளக்குகின்றது. இக்காரணத்தினாலேயே, கல்வியும், உணர்ச்சியும் விளக்கு என்னும் பெயர் பெற்றன. விளக்குவன எல்லாம் விளக்கே யன்றோ? எனவே, உணர்ச்சியுடன் கூடிய கல்வி கற்ற பிள்ளைகளே முழு விளக்கம் பெற்றுத் திகழ்வார்கள் என்பதும், அப்பிள்ளைகளைப் பெற்றோரே பேரின்பப் பெரு வாழ்வு எய்துவார்கள் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியாம். இந் நான்மணிக் கடிகைச் செய்யுளைப் பற்றுக் கோடாகக் கொண்டே இந் நூல் இயற்றப் பெற்றது.

### குறட்கு இலக்கியம்

பிள்ளைப் பேற்றின் பெருமையைப் பேச முற்பட்ட திருவள்ளுவர், பெயரளவில் பிள்ளையென்றிருப் போரைக் குறிப்பிட்டுச் சென்றாரிலர் என்பது முன்னமே உணர்ந்த செய்தி. அவர், "அறிவறிந்த மக்கட் பேறு" என்று கூறிய தோடமையாது, "நன்மக்கட் பேறு" எனவும் "பழி பிறங்காப் பண்புடை மக்கட் பெறின்" எனவும் வேறிரண்டு குறள்களிலும் கூறியுள்ளார். இக் குறள்கட்கு இலக்கியமாகப் பிள்ளைகள் விளக்கம் பெற்றுப் பெற்றோரையும் விளக்கம் பெறச் செய்ய வேண்டுமாயின், கல்வியாம் விளக்கைக் கண்ணினும் சிறந்ததாகக் கருத வேண்டும். உணர்ச்சியாம் விளக்கை உயிரினும் உயர்ந்ததாக உணரவேண்டும். இவ் விணர்ச்சிக் கல்வியால் நல்லறிவும் நற்புலமையும் பெற்று, "அறிவறிந்த மக்கள்" என்னும் குறட் பகுதிக்கு எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டும். நற்குண நற்செய்கையாம் நல்லொழுக்கம் பெற்று, "பழி பிறங்காப் பண்புடை மக்கள்" என்னும் குறட் பகுதிக்கு இலக்கியமாக மிளிர வேண்டும்.

## நல்ல கிளர்ச்சி

எனவே, பிள்ளைகள் தின்பண்டம் செய்துகொடுக்கவில்லையென்றும், உயர்ந்த ஆடையணிகலன் முதலியன வாங்கியளிக்கவில்லை யென்றும் பெற்றோரிடம் போராடலாகாது. பெற்றோர், தம்மை மேலும் மேலும் படிக்க வைக்கவில்லையே என்ற அளவிலேயே பிள்ளைகளின் கிளர்ச்சி இருக்க வேண்டும். ஏனைய பிள்ளைகளின் ஆடையணி முதலியவற்றைக் கண்டு ஏங்கவும்கூடாது. பொறாமை எய்தவும் கூடாது. அவர்களின் கல்வியைக் கண்டே ஏங்கிப் பொறாமை எய்தல் வேண்டும். ஆனால், அப் பொறாமையினை அப்பிள்ளைகளைக் கெடுப்பதற்குப் பயன் படுத்தலாகாது, தம் கல்வியை வளர்த்துக்கொள்ளும் அளவுக்கே பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இத்தகைய கிளர்ச்சியுடன் கற்றுணரும் பிள்ளைகளே பிள்ளைகளாகக் கருதப் பெறுவார்கள். இக் கிளர்ச்சியில்லாப் பிள்ளைகளோ, "பிள்ளை பிறந்தும் விளக்கமில்லை" எனப் பலராலும் குறை கூறி எள்ளி இகழப்படுவார்கள். ஆதலின், பிள்ளைகள் ஆற்ற வேண்டுவன யாவை என நோக்குவோம்.

## கல்வி சிறந்த தமிழ்நாடு

எதிர்கால உலகியலை ஏற்று நடாத்தும் பொறுப்பு வாய்ந்த இளைஞர்களே!

நுந்தம் கடமைகளை உணர்வீர்களாக! நாட்டின் முன்னேற்றம் நும் கைகளில்தான் உள்ளது. காலம் மாறும் தன்மையது. இனியும் உறக்கம் வேண்டாம். விழிப்பு எய்துவீராக! ஆரவார ஆடை அணி அணிதல், ஓயாமல் நாடகம் பார்த்தல், புகைபிடித்தல் முதலியவற்றில் பொழுதைப் போக்கி, நுந்தம் இளமையைப் பாழாக்கி



விடாதீர்கள்! நாட்டிற்கு நன்மை கிடைக்கும் அளவில் ஏன் உலகிற்கே உதவும் அளவில் பலதுறைக் கல்வியினையும் கற்று, உணர்ந்து தேர்ச்சி பெறுவீராக! பெற்று, "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்னும் கவி சுப்பிரமணிய பாரதியார் வாக்குக்கு மேன்மேலும் அரண் செய்வீராக! மக்கள் விளக்காம் உணர்ச்சிக் கல்வி ஓங்கி உயர்க!

— o —

பிற்சேர்க்கை :

# தமிழர் கண்ட கல்வி

## அன்றும் இன்றும்

### இக்காலக் கல்வி முன்னேற்றம்

இன்று, மருத்துவம், விஞ்ஞானம், பொறியியல் முதலிய துறைகள் வளர்ச்சி பெற்றிருப்பதைப்போலவே போதனை முறையும் வளர்ச்சி பெற்றுளது. புதிய புதிய போதனை முறைகள் பல தோன்றியுள்ளன. விளையாட்டு முறை, கிண்டர் கார்டன் முறை, மாண்டிசோரி முறை, தன்னேக்க முறை (Project Method), தனிப் பயிற்சி முறை (Dalton Plan), ஆதாரக்கல்வி முறை என்றெல்லாம் அவைகட்குப் பெயரும் சூட்டியுள்ளனர். குழந்தைகளின் சிரமம், மனவியல்பு முதலியவற்றை அறியாமல் குழந்தைகட்குப் புரிகிறதோ புரியவில்லையோ, அவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ எப்படியேனும் திணிக்க வேண்டும் என்ற முறையில் அக்காலப் போதனை முறை அமைந்திருந்ததாம். அதை மாற்றி மேற்கண்ட முறைகள் மூலம் மாணவர் உளத்திற்கேற்ப அவர்களே விரும்பிக் கற்கும் முறையில் கல்வியில் முன்னேற்றம் கண்டிருப்பதாக இப்போதையர் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். இவ் வளர்ச்சியை நோக்க அக்காலக் கல்வி பின்தங்கிய நிலையிலா அல்லது



வளர்ச்சிபெற்ற நிலையிலா அல்லது எந்த நிலையில் இருந்தது என்பதைக் காண்போம்.

### அக் காலக் கல்விமுறை

அக்காலத்தில் பிள்ளையைப் பள்ளிக்கூடம் அனுப்புவதே பெரிய விழாவாக அவரவர்களின் குடும்ப நிலைக்குத் தக்கபடி கொண்டாடப்பட்டது. அந்த எழுத்தறிவிக்கும் விழாவை (அக்ஷராப்பியாசத்தை) இன்று எங்கே காண முடிகின்றது. மேய்ப்பானிடம் ஆடு மாடுகளை ஓட்டிவிடுவதைப் போலவல்லவா இன்றைய பள்ளிப் பயிற்சி அமைந்துவிட்டது? அன்றைய மாணவர்கட்கு இப்பொழுதிருக்கும் சுதந்திரமும் கிடையாது—சோம்பலும் கிடையாது. மாணவர்கள் வைகறையிலேயே பள்ளிக்குச் சென்றுவிட வேண்டும். முதலில் வந்தவனுக்கு ஓரடி; இரண்டாவது வந்தவனுக்கு இரண்டடி. இப்படி அடிகளின் எண்ணிக்கை ஏறும். இதற்குப் 'படியடி' என்று பெயராம். இந்த அடி உடல் வருத்தும் அடியன்று; காலந் தவறாமையைக் கற்பிக்கும் இனிய அடி. மதிய சாப்பாட்டிற்கே மாணவர்கள் வீடுசெல்ல அனுமதிக்கப் பட்டனர். மற்ற நேரம் ஆசிரியர் வீட்டில்தான்.

அன்றைய ஒவ்வோர் ஆசிரியரும் சர்வகலா வல்லுநராக இருந்தனர். கணிதம், வானியல், சோதிடம், இலக்கியம், இலக்கணம் இவற்றில் புலமை பெற்றவர்கள். இன்றைய ஆசிரியர்களைப்போல் அடிப்படைக் கல்வியைப் பொதுப் படையாகக் கற்றவர்கள் அல்லர். மணிக்கு ஓராசிரியர், பாடத்திற்கு ஓராசிரியர் என்ற நிலை அன்றிருந்தது கிடையாது. மளிகைக் கடையில் வேலை பார்ப்பவர்கள் வருபவர்கட்குப் பொருள் கொடுக்கின்றனர். அதற்காகக் கடை முதலாளி அவர்க்குச் சம்பளம் கொடுக்கின்றார். இந்த

மளிகைக் கடைக்கும் பள்ளிக்கூடங்கட்கும் என்ன வேறு பாடு இருக்கப் போகின்றது? அக்கால முறை இதைப் போன்றதன்று. மாணவர்களைப்பற்றிய எல்லாவற்றிற்கும் ஆசிரியரே பொறுப்பாளி. அவர்களின் வாழ்வு, தாழ்வு எல்லாவற்றிற்குமே ஆசிரியர் நேரடிப் பொறுப்பாளி யாவார். மாணவர்களும் அவர்களுக்கு வேண்டிய தானி யம், காய்கறிகள் (எண்ணெய், எருமுட்டை முதற் கொண்டு) அனைத்தையும் கொடுத்துதவினர்.

பள்ளிக்கூடம், திண்ணை, மரத்தடி முதலியவிடங்களில், நடத்தப்பட்டது. இப்பொழுது, பள்ளியின் அமைப்பு இப்படி இப்படி இருக்க வேண்டும்; அப்படி இருந்தால் தான் தொடங்குவதற்கு உத்தரவு கிடைக்கும். இந்த வரையறையும் கண்டிப்பும் அக்காலத்தில் இல்லை. இந்த வறட்டு முறையில் நம் ஏழை நாடு பின் தங்கியதால் மீண்டும் மரத்தடிக்கே வந்துவிட்டது. தமிழன் முறையில் இயங்கும் தாகூரின் "விசுவ பாரதி" தலைசிமிர்ந்து நிற்கின் றது.

மற்றும், இக்காலத்தில் மாணவரிடம் வலிந்து புகுத்த வேண்டிய நிலையில் உள்ள சில நல்ல முறைகள் அக்காலத் தில் இயற்கையாகவே அமைந்திருந்தன. எடுத்துக்காட் டாக, இக்காலத்தில் பிள்ளைகள் நாட்டுக்கேற்ற குடிமக்க ளாக விளங்கவேண்டும் என்பதற்காகக் குடிமைப் பயிற்சியை (Citizenship) பாடமாக்கியுள்ளனர். பெண் கட்குச் சமையற்கலையைக்கூட பாடமாக்கவேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. பாடங்கள்மூலம் இவற்றைப் புகுத்தவேண்டிய (Injection) நிலை அன்று ஏற்படவில்லை. பழக்கவழக்கங்களிலும் உடையிலும் நாட்டுக்கு அன்னியர் போல் வீட்டுக்கும் அன்னியராய் இன்றைய படித்த இளைஞர்கள் இருப்பதுபோல் அன்று இருந்ததில்லை.



"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்று போற்றிய காலம் அக்காலம். ஆசிரியரைப் பழிப்பதையும் எதிர்ப்பதையும் நாகரிகமாகக் கருதுவதே இக்காலக் கல்வி முன்னேற்ற மாகும். கல்லூரி வேலை நிறுத்தம் அதாவது 'படிப்பு நிறுத்தம் அடிக்கடி நடைபெறுவதற்குக் காரணம் ஆசிரி யனை இறைவனாகக் கருதும் மனப்பான்மை இல்லாததே யாகும்.

> "நுணங்குநூல் ஓதுதல் கேட்டல் மாணுக்கர்
> வணங்கி வலங்கொண்டு வந்து"

என்ற சிறுபஞ்சமூலக் கருத்திற்கிணங்க மனப்பான்மை வளர்ந்தால் இந்த நிலை மாறும்.

அன்று திருமணம் முதலிய நல்ல காரியங்களில் ஆசிரியர்க்கே முதலிடம் கிடைக்கும். இன்று அரசியல் தலைவர்கட்கும் உயர்தர அதிகாரிகட்குமே முதலிடம் கிடைக்கின்றது. அரசியலுக்கும் பதவிக்கும் கிடைக்குமி டம் இனியேனும் கல்விக்குக்கிடைக்குமென நம்பமுடியுமா?

இப்படியாகப் பழங்காலக் கல்வி முறையில் பல நல்ல நடைமுறைகள் இருந்ததல்லாமல், பாட திட்டத்திலும் சில சிறந்த பகுதிகள் இருந்தன. அவற்றுள் தலைசிறந்ததாகத் தமிழ்க் கணக்கைக் கூறலாம். தமிழில் என்ன இருக்கிறது என்று கேட்பவர்கள்கூட, தமிழ்க் கணிதத்தைச் சிறப்பித் துப் புகழ்கின்றனர். செய்யுள் நடையில் உள்ள 'கணக் கதிகாரம்' என்னும் தமிழ்க் கணித நூல் இன்றும் வாழ் கிறது. நம் தமிழ்க் கணக்கில் 'பின்ன' வாய்ப்பாடுகூட உண்டு. இப்பொழுது சிலர் தாளில் போட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் சில பின்னக் கணக்குகளை, அப்போது பின்ன வாய்ப்பாட்டின் துணைகொண்டு மனக் கணக்காகவே போட்டுவிடுவார்களாம். தமிழ்க் கணிதத்தில் சிறுசிறு

பின்னங்கட்குக்கூட தனித்தனிப் பெயர்கள் இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. எடுத்துகாட்டாகச் சில நோக்கலாம் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $\frac{1}{320}$ | — | முந்திரி | $\frac{3}{80}$ | — | முக்காணி |
| $\frac{1}{160}$ | — | அரைக்காணி | $\frac{1}{20}$ | — | ஒருமா |
| $\frac{1}{80}$ | — | காணி | $\frac{1}{10}$ | — | இருமா |
| $\frac{1}{40}$ | — | அரைமா | $\frac{3}{20}$ | — | மும்மா |

இப்படியே இன்னும் பல உண்டு. இவற்றையெல்லாம், கொறுக்கையூர் காரிநாயனார் இயற்றிய கணக்கதிகாரம் என்னும் நூலில் உள்ள.

"இம்மிதான் ஈரைந் தரையெனவே வைத்திதனைச்
செம்மைதரும் கீழ்முந் திரிசெய்து—பின்னவை
மூன்றுபடி பத்திரட்டி முந்திரியே ஒன்றென்றார்
ஆன்ற அறிவி னவர்"

"முந்திரி அரைக்காணி முன்னிரண்டு பின்னிரண்டாய்
வந்ததோர் காணிதான் மாவாக்கி—ஒன்றேடு
நாலாக்கிக் காலாக்கி நன்னுதலாய் காலதனை
நாலாக்கி ஒன்றாக நாட்டு"

என்னும் பாக்களானும் பிறவற்றானும் அறியலாம்.

அடுத்து மற்றொரு கல்வித் திட்டத்தை இங்கே குறிப்பிடாமல் விடமுடியாது. அதாவது, இந்தக் காலத்தில் 'லெக்ஸிகோகிராபி' (Lexicography) என்று சொல்லப்படும் சொற்பொருள் விளக்கம் கூறும் அகராதிக் (Dictionary) கலை அந்தக்காலத்தில் விரிவான முறையில் கையாளப்பட்டு



வந்தது. இன்று அகராதி தேவைப்படுகிறது. சிலருக்கோ அகராதியைப் பயன்படுத்தும் விதமே தெரியாது. மெத்தப் படித்தவர்களும் இன்று அடிக்கடி அகராதியின் உதவியை நாடவேண்டிய நிலையில் உள்ளனர். அன்று கற்றவர்களோ அகராதிப் பொருள் முழுவதையும் மனத்தில் அமைத்து வைத்திருந்தனர். அந்தக்காலத்து அகராதி நூலுக்கு 'நிகண்டு' என்பது பெயர். நிகண்டு செய்யுள் நடையில் இருக்கும். அதனால் மனப்பாடம் செய்வதற்கு மிக எளிது. ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களும் (அர்த்தங்களும்) செய்யுளாகவே சொல்லப்பட்டிருக்கும்; ஒரே பொருளுக்குரிய பல பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, கடலுக்கு எத்தனை பெயர்கள் உண்டோ— காட்டிற்கு எத்தனை பெயர்கள் உண்டோ, அத்தனை பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கும். இந்தநிகண்டுச் செய்யுட்களை மனப்பாடம் செய்துவைத்திருப்பவர்கள், புதுப் புதுச் சொற்களையமைத்துப் பாடல்கள் படைக்கலாம்; பிறர் இயற்றியுள்ள பாடல்களுக்கும் ஆசிரியர் உதவியின்றித் தாமாகவே பொருள் புரிந்துகொள்ளலாம். இன்றுபோல் அகராதி மூட்டையைச் சுமக்கவேண்டியதில்லை. எத்தனை நன்மை பாருங்கள்!

இப்படி உதவும் எண்ணற்ற நிகண்டு நூற்கள் தமிழில் உண்டு—இன்னும் உள்ளன. இப்போது ஆங்கிலத்தில் 'ஆக்சுஃபோர்டு' டிக்ஷ்சனரி (Oxford Dictionary) அந்த டிக்ஷ்சனரி—இந்த டிக்ஷ்சனரி என்று தம்பட்டம் அடித்துத் திரியும் பலருக்குத் தமிழ் நிகண்டு நூற்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இன்னும் சொல்லப் போனால், நிகண்டு என்றால் பணத்துக்கு எத்தனை படி என்று கேட்பவர்களும் இன்று இருக்கக்கூடும். ஆனால் அந்தக்காலக் கல்வி முறையில் நிகண்டு என்னும் இந்த அரிய கலைச்செல்வம்

நடைமுறையில் இருந்தது. இந்நிகண்டின் பயனுக்கு ஒரு சான்று பார்க்கலாம். 'அரி' என்னும் ஒரு சொல்லுக்கு பல பொருள்கள் (அர்த்தங்கள்) உண்டென நிகண்டு நூற்கள் கூறுகின்றன. இரேவண சித்தர் எழுதிய அகராதி நிகண்டு 'அரி' என்னும் சொல்லுக்கு நாற்பத்தாறு பொருள் கூறுகிறது. அதனைக் காண்போம் :

"அரியே யரித்தலும் அருக்கனும் முராரியும்
அரியுஞ் சிங்கமும் பகையும் தேரையும்
பொன்னுங் காற்றும் பொன்னகர்க் கிறையும்
செந்நெற் கதிரும் கிளியும் காந்தியும்
தேருமைம் மையும் சேகும் வரியும்
கூர்மையு நிறமுங் கூற்றும் வண்டும்
வேயும் பன்றியும் விசியும் பகையும்
பாயலுஞ் சிலம்பின் பரலுஞ் சோலையும்
கண்ணினில் வரியும் கடலும் முரசமும்
எண்ணிய திகிரியு மீர வாளும்
தகரும் வலியு மரிசியுங் குரங்குங்
புகரும் நெருப்பும் புரையுஞ் சயனமும்
எறிதரு பறையு மெண்படைக் கலமும்
குறிதரு பச்சையுங் கூறிய மதுவும்
அரிதலு மெனப்பெயர் நாற்பத் தாறே."

இவையெல்லாம் அக்காலத்தவர்க்குத் தண்ணீர் பட்ட பாட்டில் மனப்பாடம். ஆனால் அக்கால நிகண்டுகள் இக்கால அகராதிகள்போல் அகர வரிசையில் இல்லை என்று ஒரு குறை கூறப்படுகிறது. உண்மைதான் — ஒத்துக் கொள்ள வேண்டியதுதான். பெரும்பாலான நிகண்டுகள் அகர வரிசையில் அமைக்கப்படவில்லையென்றாலும், அத்தகு சிறந்த முறைக்குப் பதினாறும் நூற்றாண்டிலேயே வித்திடப்பட்டு விட்டது. அந்த நூற்றாண்டில் புலியூர்ச்



சிதம்பர இரேவண சித்தரால் இயற்றப்பட்ட அகராதி நிகண்டு இதற்குத் தக்க சான்றாகும். ஓரளவு அகராதி முறையில் அமைக்கப்பட்டதனாலேயே அதற்கு 'அகராதி நிகண்டு' என்னும் பெயர் இடப்பட்டது. அடுத்து, இந்த நிகண்டுகளை மனப்பாடம் பண்ணுவது மிகவும் கடினம் என்று ஒரு குறை சொல்லப்படுகிறது. எப்படியோ அந்தக் காலத்தில் ஏதேனும் ஒரு நிகண்டிலுள்ள இன்றியமையாத பகுதிகளையாயினும் அடித்துப் பிடித்து மனப்பாடம் செய்துதான் வைத்திருந்தார்கள்.

அடுத்தபடியாக, வாழ்க்கைக்குப் பயன்படும் பல அறிவுரைகளைக் கூறும் சதகம் என்னும் ஒருவகை நூலும் இன்ன பிற சிற்றிலக்கியங்களும், பின்னர் படிப்படியாகப் பேரிலக்கிய—இலக்கண நூற்களும் கற்கப்பட்டன. உரை நடை (வசன) நூற்கள் இல்லாமல் செய்யுள் நூற்களே இருந்த அக்காலத்தில் — எல்லாக் கல்வியும் செய்யுள் மூலமாகவே கற்ற அக்காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு நிகண்டு, சதகம் முதலிய நூற்களைக் கற்பது மிகவும் எளிதாக இருந்தது. 'கோழி முட்டையிடும்; முட்டை வெள்ளையாக இருக்கும். பசு பால் கொடுக்கும்; பால் வெள்ளையாக இருக்கும்' என்பன போன்றவற்றைப் படிப்பு என்னும் பெயரில் படிப்பவர்க்கு நிகண்டு முதலிய நூற்கள் 'சிம்ம சொர்ப்பன' மாகத்தான் இருக்கும். பழைய கல்வி கற்ற நம் பாட்டனார்கள், பால் வெள்ளையாய் இருக்கும் என்பது ஒரு படிப்பா என்று சொல்லிச் சிரிப்பதை நாம் வெட்கப்படாமல் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

மற்றும், ஆசிரியர் மாணவர்களைக் கோயிலுக்கும் திருவிழாவிற்கும் அழைத்துச் செல்லுதல், விழாக்காலங்களிலும் கொண்டாட்ட நாட்களிலும் கோலாட்டம், பாட்டு,

நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தச் செய்தல் முதலிய உற்சாகமான செயல்கள் அக்காலத்தில் பின்பற்றப் பட்டு வந்தன. இவைபோன்றவற்றை இக்காலத்தினர் 'புறவினைச் செயல்கள்' (Extra Curricular Activities) என்று படாடோபமாக அழைக்கின்றனர். இப்படி இன்னும் பல சிறப்புக்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

எனவே வாழ்க்கைக்குப் பயனளிக்கும் கலையறிவு — நூலறிவு, நல்ல உழைப்பு, நல்ல பழக்க வழக்கங்கள் எளிய உடை, எளிய உணவு, உயர்ந்த சிந்தனை முதலியவற்றையே அக்காலக் கல்வி ஊட்டியது. இன்றைய ஐரோப்பியக் கல்வி, ஆடம்பர வாழ்க்கை, மேதைபோன்ற கர்வமனப் பான்மை, உடலுழைப்பில் வெறுப்பு இவற்றைத்தானே உண்டாக்கியுள்ளது. ஆசிரியர் மாணவர் பிணைப்பும் மளிகைக் கடை துறைபோல் ஆகிவிட்டதல்லவா? இப்பொழுது, எளிமை வாழ்க்கை, சமூகத்தொண்டு, குடிமைப் பயிற்சி முதலியவற்றின் மூலம் பழைய நிலைமைக்குக் கல்வித் தரத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கரடியாகக் கத்துகின்றனர். தமிழன் கண்ட கல்வியின் தரம் தாழ்ந்து விடவில்லையே.

ஒரே ஒரு குறைபாட்டை மட்டும் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். இன்று குழந்தை உளநூல் (Child psychology) வளர்ச்சி பெற்றுள்ளதைப்போல் அன்று வளர்ச்சி பெறவில்லை. அதனால் சில குறைபாடுகள் பயிற்றலில் ஏற்பட்டிருப்பினும் "கொள்வோன் கொள்வகை யறிந்து" நூல் சொல்லிக் கொடுக்கப்பட்டது என்பதற்கு நன்னூல் சிறப்புப் பாயிரம் சான்றாக நிற்கின்றது.



## 11. கட்டாயக் கல்வி

எல்லாரும் படிக்கவேண்டும் என்பதற்காக இன்று அரசியலார் அரும்பாடு படுகின்றனர். அந்தக் காலத்தில் கூட இதற்குத்தான் நம் முன்னோர்கள் பாடுபட்டுள்ளனர். படிக்காதவனை மனிதனாகவே நம் முன்னோர்கள் ஏற்றுக் கொண்டதில்லை. தமிழ் நூல்கள் எல்லாம் "கற்றே தீர வேண்டும்; அப்படிக் கல்லாதவன் ஒட்பம் கழிய நன்றாயினும் ஏற்றுக் கொள்ளோம்" என்று முழங்குகின்றன.

கணக்காயர் இல்லாத ஊரும்...
நன்மை பயத்தல் இல,

என்று திரிகடுகம் ஊர்தோறும் ஓராசிரியர் தேவை என்று முழங்குகின்றது. ஊர்தோறும் ஓராசிரியர் இருந்தால் அங்கு ஒரு பள்ளிக்கூடமும் இருக்கத்தானே வேண்டும். இப்படி நம் முன்னோர் மொழிந்ததைப் பொன்னேபோற் போற்றி,

இன்னருங்கனிச் சோலைகள் செய்தல்,
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்,
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்றுபாரதி கூறியபிறகு, ஊருக்கு ஒன்றில்லாவிட்டாலும் இரண்டு மூன்று ஊருக்கேனும் ஒரு பள்ளி ஏற்பட்டு வருகின்றது.

கீழ்ச்சாதியார் படிப்பதற்கு மேல் சாதியார் வாய்ப்புத் தருவதில்லை. எல்லாரும் படித்துவிட்டால் குறிப்பிட்ட சில

வேலைகளை யார் செய்வது என்ற குறுகிய போக்கு இன்று மறைந்து வருகின்றது. ஆனால் அன்று மறைந்தேயிருந்தது. தோணியியக்குவான் கீழ்ச்சாதி என்பதற்காக யாரும் தோணியில் ஏறாமல் இருப்பதில்லை. அதைப்போல ஆசிரியன் தாழ்ந்த சாதியாக இருக்கின்றானே என்பதற்காக அவனிடம் போகாமலிருப்பதில்லை, என்ற நாலடியார்ச் செய்யுளின் அழகான விளக்கம் இன்றைய சமூகத்திற்கு அறிவுரையாகவும் பயன்படலாம். மற்றைய நூல்களும் கல்விக்குச் சாதி வேற்றுமையில்லை என்றே கூறுகின்றன.

பெண்கள் படிக்கக்கூடாது; அடுப்பூதும் பெண்கட்குப் படிப்பெதற்கு என்பதெல்லாம் பழங்காலக் கொள்கை என்று பழங்காலத்தைப் பழிக்கக்கூடாது. காக்கை பாடினியார், ஔவையார், பொன்முடியார், ஒக்கூர் மாசாத்தியார் போன்ற பெண்பாற் புலவர்கள் அக்காலத்தில் இருந்திருப்பதைக் கொண்டு அக்காலப் பெண்கல்வி வளர்ச்சியை மதிப்பிடலாம். அவைக்களங்களில் நூல் அரங்கேற்றிப் பரிசுபெறும் அளவிற்கேனும் பெண்கல்வி அன்று முன்னேறியது.

இன்று முதியவர்களும் படிக்கவேண்டும்; வாழ்க்கையின் இறுதிக்கு வந்தபின் படிப்பெதற்கு என்று இருந்துவிடக் கூடாது என்று வலியுறுத்தப்படுகின்றது. செயல்படுத்தவும் படுகின்றது. அக்கால மன்றங்களும் கழகங்களும் பட்டி மன்றங்களும் இதையே செய்து வந்தன.

## III. பல கலைகள்

இன்று, படிப்பு பலதுறைகளில் வளர்ச்சி பெற்றுள்ளது. பொருளாதாரம், விஞ்ஞானம், பொறியியல், தத்துவம் என்று பல துறைகள் போதிக்கப்பட்டுப் பட்டங்களும் அளிக்கப்படுகின்றன. இந்தப் பலதுறைகள்



அக்காலத்திலும் இருந்தன என்பதற்குப் "பலதுறைமுகத்தொடு பயிலுதலானும்" என்ற கல்லாடக் குறிப்பொன்றே போதுமானதாகும். மருத்துவக்கலை, வானநூற்கலை, இசைக்கலை, நடனக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக் கலை முதலிய கலைகள் இருந்தமைக்குச் சிலப்பதிகாரம் முதலிய நூற்கள் ஆதாரமளிக்கின்றன. அந்தக் கலைகளைப் பற்றிய நூற்களும் இருந்ததாக, அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்களால் உணர முடிகின்றது.

## மேல்நிலைக் கல்வி

இன்று ஓரளவுக்குமேல் படித்தவர்கள் பின்னும் அதில் புலமைபெற உபகாரச் சம்பளம் முதலியன பெற்று மேல் நாடுகட்குச் சென்று படித்து வருகின்றனர். இந்தமுறை ஆயிரமாயிரமாண்டுகட்கு முன்பே தமிழகத்தில் நடைமுறைக்கு வந்துவிட்டது. வயது வந்த தலைமகன் ஒருவன் தன் தலைவியைப் பிரிந்து படிப்பதற்காகச் செல்வானும். அன்று தமிழ்நாடே பல சிறு சிறு பகுதியாகப் பிரிந்திருந்தது. காஞ்சி, மதுரை, பாகூர் முதலியவிடங்களில் பல்கலைக் கழகங்கள் இருந்ததாகச் சான்றுகள் கிடைக்கின்றன. தமிழ் நாட்டில் அவ்வாறே கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் இல்லாதிருந்தால், 'கருது கல்விக் களப்பேர் கழகம் கல்லூரியாமே' என்று சூடாமணி நிகண்டு சொல்லியிருக்க முடியுமா? எனவே, தமிழகத்தில் பல இடங்கள் இருந்திருக்கலாம். அந்த இடங்கட்கெல்லாம் அச் சிறுசிறு பகுதியிலிருந்து சென்று படித்திருக்கலாமல்லவா? அப்படிச் சென்றவன் மூன்றாண்டுகள் வரை தங்கியிருப்பானும். அதாவது அங்கு அவன் படிப்பு மூன்றாண்டுகள் [illegible] நீடிக்கும். இவற்றை மூவாயிரம் ஆண்டுகட்கு [illegible] தொல்காப்பியத்தின்,

**ஓதல் பகையே தூதிவை பிரிவே,**
**வேண்டிய கல்வியாண்டு மூன்று இறவாது**

என்ற நூற்பாக்களானும்,

**ஓதல் பிரிவுடைத்து ஒருமூன்று யாண்டே**

என்ற நம்பியகப்பொருள் நூற்பாவானும் உணரலாம்.

## IV. சில கல்விக் கொள்கைகள்

### 1. பொருத்தமுறல் (Adjustment)

மாணவனை, வாழ்க்கை, சமூகம், சூழ்நிலை இவற்றிற்கேற்பப் பொருத்தமுறச் செய்வதே கல்வியாகும் என்று இக்காலக் கல்வி வல்லுநர்கள் கூறுவதையே நம் திருவள்ளுவப் பெருந்தகையார்,

**உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்**

என்ற குறளில் கூறிச் சென்றுள்ளார்.

உலகத்தோடு ஒட்டி வாழ்வதற்கே பலவற்றைக் கற்கின்றோம். அப்படிக் கற்றும் உலகத்தோடு ஒட்டி வாழாதவன் அறிவற்றவனே என்ற கருத்து பொருத்தமுறல் முறைக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லையா?

2. கல்வி என்ற பொருளைப் போட்டுவைக்கும் காலிப் பெட்டியல்ல மாணவன். அவன் எல்லா ஆற்றல்களையும் தன்னுள்ளே கொண்டிருக்கும் விதையைப் போன்றவன். அவன் உள்ளே தூங்கிக் கிடக்கும் ஆற்றல்களைத் தூண்டி விடுவதுதான் கல்வி. ஆற்றல்களைத் தொழிற்படுத்தி இயங்கச் செய்வதே பயிற்றல் என்று கல்வி வல்லுநர்கள் கூறுகின்றனர். இதை,



**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு**

'என்று என்றோ நான் கூறிவிட்டேனே! அதைப் புரிந்து கொள்ள இத்தனை நூற்றாண்டுகளா தேவைப்பட்டன?' என்று கேட்காமல் கேட்கின்றார் நம் தெய்வப் புலவர்.

மணற்கேணியில் தண்ணீர் இயற்கையாகவே இருக்கின்றது. யாரும் வெளியிலிருந்து கொணர்ந்து ஊற்றிவிடவில்லை. அவ்வாறே அறிவு தன்னுள்ளேயிருக்கின்றது. அது நூற்களால் தூண்டப்பட்டுச் சிறப்படைகின்றது. தோண்டுவதற்கேற்ப நீர் கிடைப்பதுபோன்று படிப்பதற்கேற்ப அறிவு வளர்கின்றது என்ற வள்ளுவர் கருத்து வெளிநாட்டுக் கல்வி வல்லுநர்கள் கருத்திற்கு அரண் செய்கின்றது. மேலும் நன்னூலில் நான்காம் வேற்றுமைக் கொடைப் பொருளின் பிரிவாகிய "ஏலாது ஏற்றல்" (பெறாமல் பெற்றுக்கொள்ளல்) என்பதற்கு "ஆசிரியன் மாணாக்கர்க்கறிவு கொடுத்தான்" என்ற சான்று கூறப்பட்டுள்ளது. மாணவன் ஆசிரியரிடத்திலிருந்து எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அறிவுதான் அவனிடத்திலேயே அமைந்து கிடக்கின்றதே. இருப்பினும் அவன் எதையோ ஏற்றுக் கொண்டான். அதுதான் தூண்டுதலாகும். இவற்றையெல்லாம் எண்ணிப் பாராமலா அந்தச் சான்றைக் கூறியிருப்பர்.

3. கண்டதைக் கற்றுக் காலத்தையும், பணத்தையும் முயற்சியையும் வீணாக்கக்கூடாது. படிக்கவேண்டியதைப் படிக்க வேண்டும்; வாழ்க்கையோடு தொடர்புடைய, வாழ்க்கைக்குப் பயன்படத் தக்கவற்றையே கற்கவேண்டும் என்று ஆதாரக் கல்விபோன்ற கல்விமுறைகள் கூறுகின்றன. வெள்ளையர், குமாஸ்தா படிப்பு முறையிலே

வாழ்க்கைக்குத் தேவையற்றனவற்றைக் கற்றுப் பெற்ற பாடம் இது. இப்பாடத்தை அன்றே திருவள்ளுவர்,

**கற்க, கசடறக் கற்பவை**

என்று தம் மக்கட்குப் புகட்டினார். நீரை ஒழித்துப் பாலைப் பருகும் அன்னம்போல் நன்மை அமைந்தவற்றையே ஆராய்ந்து படிக்கவேண்டும் என்பதை.

—தெள்ளிதின்

**ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழிய**
**பாலுண் குருகின் தெரிந்து**

என்னும் நாலடியாரால் நன்குணரலாம். பல நூல்களுள் நல்ல நூல்களைக் கற்றலே சிறப்பு என்னும் கருத்தமைந்த

**பல்லவையுள் நல்லவை கற்றலும்...தலை**

என்னும் திரிகடுகப் பாடலும் இவ்விடத்திற்குப் பொருத்த மானதாகும். எனவே இன்றைய கல்வி முன்னேற்றங் களுள் பெரும்பாலன அன்றைய அன்றைய தமிழன் கண் டவையே என்பது இனி புலனாகும்.

## V. பயிற்றும் முறை (போதனு முறை)

### 1. பேச்சுப்பயிற்சி

பயிற்றும் முறையில் இன்றும் பல புதுமைகள் கையா ளப்படுகின்றன. இவற்றின் சாயல் ஏதேனும் அக்காலத் தில் இருந்ததா என்று காண்போம்.

மாணவர்கள் ஆரம்பத்தில் கொச்சையான பேச்சுச் சூழ்நிலையில் பழகியிருப்பர். எனவே அவர்கள் பள்ளிக் கூடம் வந்ததும் தூய்மையாகவும் தெளிவாகவும் பேசச் செய்ய வேண்டும். இல்லையெனில் கொச்சையாகவே பேசு வர் ; எழுதுவர். எனவே ஆரம்பத்தில் அவர்கட்கு முழு



உருவத்துடன் உச்சரிக்கக் கற்பிக்க வேண்டும். அதன் பின்பே வாசிப்பும் எழுத்துப் பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும் என்று மேலைநாட்டுப் போதனு முறை வல்லுநர் கள் கூறுகின்றனர். அவர்களுள் ஒருவரான Greening என்பவர் "எவ்வளவுக் கெவ்வளவு பேச்சு சுத்தமாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு வாசிப்பும் எழுத்தும் சுத்தமாகவும் இருக்கும்" என்று கூறுகின்றார். இத னையே நம்நாட்டு மாண்டிசரியார் "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்றொரு தனிப்பாடலில் கூறி யுள்ளார். நா பழகப் பழகத்தான் செந்தமிழ் சீர் பெறுகின் றது என்ற கருத்து மேல்நாட்டுப் பேராசிரியர்கள் கருத்தை ஒத்திருக்க வில்லையா ?

### 2. வாக்கியமுறை

எழுத்தைக் கற்பித்துப் பின் சொல்லைக் கற்பித்து அதன் பின் வாக்கியத்தைக் கற்பிப்பது ஒரு முறை ; இதனை ஆங்கி லத்தில் Alphabetic method (எழுத்துமுறை) அல்லது Logical method (காரண காரிய முறை) என்று கூறுவர், இந்த முறை அவ்வளவு சரியான முறை அன்று. குழந்தை தனித்தனி எழுத்தாகப் பேசுவதில்லை. தனித்தனி எழுத் திற்கும் பொருளில்லை. அதில் சுவையும், பிடிப்பும் இரா. குழந்தை வாக்கியம் வாக்கியமாகவேபேசுகின்றது. எனவே வாக்கியத்திலிருந்து சொல்லைக் கற்பித்துப் பின் எழுத்தைக் கற்பிப்பதே சரியான முறையென்று மேல் நாட்டு போதனு முறை வல்லுநர்கள் கூறுகின்றனர். இதனை Look and say method (பார்த்துச் சொல்லும் முறை) அல்லது Psycholo- gical method (உளநூல் முறை) என்று பெயரிட்டழைப் பர்.

இம்முறையில் "அ" என்ற எழுத்தைக் கற்பிக்க "அணில் ஓடுகிறது" என்ற வாக்கியத்தைக் கூறிப் பின்

அணில் என்ற சொல்லுக்கு வந்து அதிலிருந்து 'அ' விற்குச் செல்லவேண்டும். அணில் படத்தைக் காட்டி அதன்கீழ் எழுதியுள்ள அணில் என்ற சொல்லைக் கூறி 'அ' என்ற எழுத்தைக் கற்பிக்கலாம். இம்முறை குழந்தைகட்குச் சுவையானது. மேலும் குழந்தை உளநூலுக்கும் ஏற்றது. இந்த முறையை தமிழ் நாட்டு மாண்டிசரி என்று சொல்லக் கூடிய ஔவையார் சிந்தித்துள்ளார்எனக்கருத இடமுண்டு. இக்கால நெடுங்கணக்கட்டையில் படமும் அதன் கீழ் அந்தப் படத்தின் பெயரும் இருக்கும். பெயரிலிருந்து எழுத்தைக் கற்பிக்கும் சொல் முறைப்பாட அட்டை அது. ஆனால் ஔவையோ வாக்கிய முறைப்பாட அட்டை இரண்டு செய்து கொடுத்துள்ளார். அவை ஆத்தி சூடி, கொன்றைவேந்தன் ஆகும். அவை நெடுங்கணக்கு எழுத்துக் களை முதலில் அமைத்துச் செய்யப்பட்டுள்ளன. அறஞ் செயவிரும்பு—'அ'. ஆறுவது சினம் 'ஆ' என்ற வாக்கியத்தி லிருந்து எழுத்திற்குப் போகும் முறை ஔவையால் அன்றே கண்டுபிடிக்கப் பட்டுவிட்டது.

"அறஞ்செய விரும்பு" என்பது செய்யுள் நடையில் உள்ளதே. இவ்வளவு கடினமாக இருக்கலாமா? என்று கேட்கலாம். கோழி முட்டையிடும் என்பதை இன்று எப் படி எளிய வாக்கியமாகக் கொள்கிறோமோ அப்படியே உரைநடையின்றிச் செய்யுளே இருந்த அந்தக் காலத்தில் அது எளிய வாக்கியமாகக் கொள்ளப் பட்டது. அத்தகைய உயர்ந்த தரத்தில் மொழியிருந்த காலம் அது.

இன்று சிறுவர் கல்விக்குப் பாடுபட்டுள்ள இத்தாலி நாட்டு மாண்டிசரி அம்மையாரைப் போன்று அன்று சிறுவர் கல்விக்கு ஔவையார் எவ்வளவோ பாடுபட்டுள்ளார். கல்வி ஒழுக்கம் என்ற நூலைக்கூட இவர் இயற்றியதாகத் தெரிகின்றது. நல்வழி என்ற நூலில் பாடியுள்ள கடவுள்



வாழ்த்தைக்கூடச் சிறுவனே இறைவன் முன் நின்று வேண் டிக்கொள்வதைப் போலவே அவன் மொழியில் அவன் உண்டு சுவைத்த தின்பண்டங்களைக்கூறி,

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா

என்ற பாடலை இயற்றியுள்ளார். அவருக்குப் பின் வந்த புலவர்களும் சிறுவர்க்கேற்ற நூலில் கருத்தைச் செலுத்தி உலகநீதி, வெற்றிவேற்கை, நன்னெறி, நீதிநெறி விளக்கம், நீதி வெண்பா முதலியவற்றை இயற்றிச் சென்றுள்ளனர்.

## 3. ஆசிரியர் கற்பிக்கும் முறை

ஆசிரியர் பாடம் கற்பிக்கு முன் பாடத்தைப் பற்றிய தயாரிப்பைச் சிறப்பாகச் செய்துகொள்ள வேண்டும் என்று பாடத்தயாரிப்பின் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். முன்பும் இப்படித்தான் பாடத் தயாரிப்பிற்குப்பின் பாடம் போதிக்கப்பட்டது. எதைக் கற்பிக்க வேண்டுமோ அதை முன் கூட்டியே உள்ளத்தில் அமைத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை "உரைக்கப்படும் பொருள் உள்ளத் தமைத்து" என நன்னூல் நூற்பா உணர்த்துகின்றது. மாண வன் உள்ளத்திற்கேற்பப் போதிக்கவேண்டும்; அவன் நிலைமையறிந்து போதிக்க வேண்டும்; திணித்தல் முறை கூடாது என்று இக்காலப் போதனை முறை கூறுகின்றது. அதையே 'கொள்வோன் கொள்வகையறிந்து அவன் உளங் கொள'... நூல் கொடுத்தல் என்று நன்னூலும் வற்புறுத்து கின்றது. மேலும் ஆசிரியருக்குத் தான் சொல்லிக்கொடுக்கப் போகும் பாடத்தில்தெளிவும் திறமையும் இருக்க வேண்டும் என்று இக்காலப்போதனை முறை வல்லுநர்கள் கூறுவதைக்

"கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும்" இருக்க வேண்டும் என்று நன்னூலும் ஏற்றுக் கொள்கின்றது. மேலும், 'ஆசிரியன் விரையான் வெகுளான், விரும்பி முக மலர்ந்து' பாடஞ் சொல்ல வேண்டுமென்றும் 'நிறை கோலைப்போல் நடுவு நிலைமையும் மலரைப்போல்' முகமலர்ச்சியும் உடையவனாக இருக்கவேண்டும் என்றும் நன்னூல் கூறுகின்றது. இவற்றைக் காட்டிலும் என்ன போதனா முறை வேண்டிக்கிடக்கின்றது? இவற்றைக் காட்டிலும் என்ன புதிதாகவும் கூறுகின்றார்கள். ஒன்றுமில்லையே.

## 4. புது இயக்கங்கள்

இப்பொழுது சீருடை வழங்கல், மதிய உணவளித்தல், புத்தகம் எழுதுகோல்கள் வழங்கல் முதலிய புது இயக்கங்கள் வளர்ச்சியடைகின்றன. இவற்றிற்கான ஒரு பகுதிச் செலவை அரசும் மற்றவற்றைப் பெருஞ்செல்வர்களும் ஏற்கின்றனர். அன்றும் இந்த இயக்கங்கள் இல்லாமலில்லை. இருந்தன, அதற்கு.

ஊணொடு, கூறை எழுத்தாணி புத்தகம்
பேணொடு மெண்ணும் எழுத்திவை—மாணொடு
கேட்டெழுதி ஓதிவாழ் வார்க்கீய்ந்தா ரிம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து

என்ற ஏலாதியின் பாடலே சான்றாகும். ஓதி வாழும் ஏழை மாணவர்க்கு உணவும், உடையும் எழுத்தாணியும் புத்தகமும் கொடுப்பவர் சிறப்புற வாழ்வார்கள் என்று இப்பாடல் அவர்களை வாழ்த்துகின்றது. இவற்றை வழங்காதவர்கள் இல்லாமலா இப்பாட்டெழுந்திருக்கும்?

மேலும் இக்காலத்தில் 'போர்டிங்' (Boarding), 'ஹாஸ்டல்' (Hostei), 'மெஸ்' (Mess) போன்ற பெயர்களில் பள்ளிக்கூடத்தாரே 'விடுதி'யமைத்து, மாணவர்க்கு



உண்டி, உறையுள் முதலிய வசதிகள் செய்து தருகின்றனர் இதற்கெனப் பணம் வாங்கப்படுகிறது. இந்த வசதிகள் இலவசமாக அளிக்கப்படும் இடங்களும் சில உள்ளன. இதுபோன்ற முறை—இன்னும் கேட்டால், இதனினும் சிறப்பான முறை அந்தக் காலத்திலேயே இருந்தது. அன்று மாணவர்கள் ஆசிரியர் வீட்டிலோ அல்லது அறச்சாலையிலே உண்டு உறைந்து கற்றது உண்டு. இதற்குக் 'குருகுல வாசம்' என்று பெயராம். ஆனால், இத்தகு குருகுலங்களில் இக்கால மாணவர் விடுதிகளில் காணப்படும் 'சிகரெட்' புகை மண்டலத்தைக் காணமுடியாது. எவ்வளவு சிறப்பு!

## VI. மறுமலர்ச்சிக் கவிஞர்கள்

நாம் இதுகாறும், நம்காலத்துக்கு முன்னிருந்த தமிழறிஞர்கள் கையாண்ட கல்விக் கொள்கைகளைக் கண்டோம். இந்நேரத்தில், இந்த இருபதாம் நூற்றாண்டினராகிய பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை, பாரதிதாசன் முதலிய தமிழ்ப்பெரும் புலவர்களின் கல்வித் தொண்டினை நாம் மறப்பதற்கில்லை. இவர்கள் சிறுவர் கல்விக்கும் பெண் கல்விக்கும் சிறந்த படைப்புக்களை நல்கியுள்ளனர். ஈண்டு பாரதியாரின் பாப்பாப் பாட்டினைப் பார்ப்போம் :—

'ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.'

'காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவுகொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.'

‘சோம்பல் மிகக்கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பி யழுங்குழந்தை நொண்டி—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.’

‘தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாய்என்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.’

‘~~சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்~~
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.’

என்றெல்லாம் குழந்தை உள்ளத்தைப் பண்படுத்தப் பாடியுள்ளார் பாரதியார். கவிமணியோ கதைகளையே பாடல்களாக்கிச் சிறுவர் கல்விக்குச் சிறந்த பணியாற்றியுள்ளார். அதில் ஒன்றைக் காண்போம்.

**ஊக்கமுள்ள காகம்**

தண்ணீர் கிடையாமல்—காகமொன்று
தவித்த வேளையிலே
மண்ணாற் செய்தஒரு—சாடியினை
வழியிற் கண்டதம்மா
சாடியின் மீதிருந்து தலையைச்
சாய்த்து நோக்கிடவே
சாடியிலே தூரில்—சற்றே
தண்ணீர் தெரிந்ததம்மா.

காகம் உடனெழுந்து—சிறுசிறு
கற்கள் பொறுக்கிவந்து



ஊக்கமாய்ச் சாடியினுள்—அவற்றை
ஒவ்வொன்றாய் இட்டதம்மா.
இட்டிட வேநீரும்—மேலே
எழுந்து வந்ததம்மா
சட்டமா கக்குடித்துக்—காகம்
தளர்ச்சி தீர்ந்ததம்மா
ஊக்க முடையவர்க்குத்—துன்பம்
உலகில் இல்லையம்மா
ஆக்கம் பெருகுமம்மா—அதைநீ
அறிந்திட வேண்டுமம்மா.

இவ்விதப் பாடல்களால் கதைக்குக் கதையும், நீதிக்கு நீதியும் கிடைக்கின்றனவல்லவா? ‘இளைஞர் இலக்கியம்’ எழுதிய பாரதிதாசன் பெண் கல்விக்கும் பாடல்கள் எழுதியுள்ளார். அவரது ‘இசையமுதம்’ என்னும் நூலிலிருந்து இரண்டு பாடல்களை இவண் பார்ப்போம் :—

**பெண் கல்வி**

“பெண்களால் முன்னேறக் கூடும்;—நம்
வண் தமிழ் நாடும் எந்நாடும்,
கண்களால் வழிகாண முடிவதைப் போலே
கால்களால் முன்னேற முடிவதைப் போல,
பெண்களால் முன்னேறக் கூடும்
படியாத பெண்ணினால் தீமை!—என்ன
பயன்விளைப் பாளந்த ஊமை?
நெடுந்தமிழ் நாடெனும் செல்வி,—நல்ல
நிலைகாண வைத்திடும் பெண்களின் கல்வி
பெண்களால் முன்னேறக் கூடும்
பெற்றநல் தந்தைதாய் மாரே—நும்

பெண்களைக் கற்கவைப் பீரே!
இற்றைநாள் பெண்கல்வி யாலே,—முன்
னேறவேண் டும்வையமேலே!
பெண்களால் முன்னேறக் கூடும்.''

## தந்தை பெண்ணுக்கு

"தலைவாரி பூச்சூடி உன்னைப் —பாட்
சாலைக்குப் போஎன்று சொன்னால் உன் அன்னை
சிலைபோல ஏனங்கு நின்றாய்!—என்றும்
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்—கல்வி
வேளைதோ றும்கற்று வருவதால் படியும்
மலைவாழை அல்லவோ கல்வி—நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!
படியாத பெண்ணா யிருந்தால்;—கேலி
பண்ணுவார் என்னைஇவ் வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன் ஓடு—என்
கண்ணல்ல? அண்டைவீட் டுப்பெண்க ளோடு!
கடிதாய் இருக்குமிப் போது—கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது
கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு—பெண்
கல்வி பெண் கல்விஎன் கின்றதன் போடு!"

பெண் கல்வியை நயமாக வற்புறுத்தும் இப்பாடல்கள் மிகவும் சுவையாக உள்ளன அல்லவா?

இவர்களே யன்றி, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, மயிலை. சிவமுத்து போன்ற பலகவிஞர்களும் புலவர்களும் எழுத்தாளர்களும் ஆசிரியர்களும் அரசாங்க அலுவலாளர்களும் தமிழ்நாட்டுக் கல்வித்துறைக்கு ஆற்றியுள்ள அரும்பணிகள் சில ஈண்டு எண்ணத்தக்கன. இப்படியாக,



அன்றுதொட்டு இன்றுவரை தமிழ்ப் பேரறிஞர்கள் தங்கள் தமிழ்ப் படைப்புக்களின் வாயிலாகக் கல்விவளர்ச்சிக்குச் செய்துள்ள பணிகள் அளப்பரியன.

## 7. உண்மைக் கல்வி

பொதுவாக இப்பொழுது கல்வி என்ற பெயரால் வயிற்றுப் பிழைப்பே நடக்கின்றது. இவற்றைப் படிப்பாகக் கருதுவதைக்காட்டிலும் தொழிற்கல்வியாக அல்லது பிழைப்புக் கல்வியாகக் கொள்வதே பொருத்தமுடையதாகும். எனவே அறிவு பண்படுவதற்கேற்ற நூல்களைக் கல்லாமல் உலகக் கல்வி கற்பதெல்லாம் மேடையேறிப் பேசுவதற்கும் அதைக் கற்றேன், இதைக் கற்றேன் என்று கூவிப் பறைசாற்றிக் கொள்வதற்குமே பயன்படும்.

அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகு நூல் ஓதுவ தெல்லாம்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

என்று நாலடியார் கூறுகின்றது.

இக்கால ஆடம்பரப் படிப்பபைக் கற்றோர் தங்களைப் பெரிய மேதைகளாகவும், தனிச் சாதியினராகவும் கருதிப் பிரிந்து வாழ்கின்றனர். மேலும் படித்தவர்கள் செய்யும் பண்பற்ற செயல்களோ சொல்லிமுடிக்குந் திறந்தினவல்ல. கள்ளத்தனமும் கையூட்டும் படித்தவரிடையே பரவலாகக் காணப்படுகின்றன.

முன்பெல்லாம் தொழிலைப் பரம்பரையாகக் கற்று, மனம் பண்படவே நூற்களைப் படித்தனர். இப்பொழுது ஊதியத்திற்காகவே கல்வி பயில்கின்றனர். இப்படி வயிற்றுப் பிழைப்புக் கல்வியாளர்களின் கொடுமையைக் கண்டு

தான் மணிவாசகப் பெருமான் "கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்" என்று கூறினர் போலும். இத்தகையோரை நாய்களென்றும் நரிகளென்றும் பாரதியார் தம் சுயசரிதைப் பகுதியில் மனம் வெந்து வைதுள்ளார்.

எனவே, இத்தகைய கல்வி முறையினை நம் தமிழ் முன்னோர் உண்மைக் கல்வியாக ஏற்றுக்கொள்ளவில்லை. சிறந்த அறிவு, ஒழுக்கப் பண்பாடுகளுடன் மனிதனை உண்மை மனிதனாக ஆக்கும் கல்வியையே உயர்ந்த கல்வியாக—உண்மைக் கல்வியாக அவர்கள் கூறிச் சென்றுள்ளனர். அதுதான் தமிழர் கண்ட கல்வியாகும்.

— O —

# இவ்வெளியீட்டிற்கு கருத்து வழங்கியுள்ள நூற்கள்

[ஆசிரியர் பெயருடன்]

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| அகராதி நிகண்டு | ... இரேவண சித்தர் |
| அறப்பளீசுரசதகம் | ... அம்பலவாணக் கவிராயர் |
| ஆசிரிய மாலை | ... " |
| ஆத்திச் சூடி | ... ஔவையார் |
| இசையமுது | ... பாரதிதாசன் |
| இலக்கணக் கொத்து | ... சுவாமிநாத தேசிகர் |
| உலக நீதி | ... உலகநாத பண்டிதர் |
| ஏலாதி | ... கணிமேதையார் |
| கணக்கதிகாரம் | ... கொறுகையூர்காரி நாயனார் |
| கயவன் கல்வியருமை யறிந்தது | ... கா. நமச்சிவாய முதலியார் |
| கல்லாடம் | ... கல்லாடர் |
| கம்பராமாயணம் | ... கம்பர் |
| கல்வி யொழுக்கம் | ... ஔவையார் |
| குமரேச சதகம் | ... குருபாததாசர் |
| கொன்றைவேந்தன் | ... ஔவையார் |
| சம்பந்தர் தேவாரம் | ... சம்மந்த நாயனார் |
| சிலப்பதிகாரம் | ... இளங்கோவடிகள் |
| சிறுபஞ்ச மூலம் | ... காரியாசான் |
| சீவக சிந்தாமணி | ... திருத்தக்க தேவர் |
| சுந்தரர் தேவாரம் | ... சுந்தரமூர்த்தி நாயனார் |
| சூடாமணி நிகண்டு | ... மண்டல புருடர் |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| தனிப்பாடல் திரட்டு | ... ஔவையார் முதலியோர் |
| தஞ்சை வாணன் கோவை | ... பொய்யாமொழிப் புலவர் |
| தண்டியலங்காரம் | ... தண்டியாசிரியர் |
| திருக்குறள் | ... திருவள்ளுவர் |
| திருக்குறள் உரை | ... பரிமேலழகர் |
| திரிகடுகம் | ... நல்லாதனார் |
| திருத்தொண்டத் தொகை | ... சுந்தரமூர்த்தி நாயனார் |
| திருவாசகம் | } மாணிக்கவாசகர் |
| திருக்கோவையார் | } |
| திவாகர நிகண்டு | ... திவாகர முனிவர் |
| திருவிளையாடற் புராணம் | ... பரஞ்சோதி முனிவர் |
| திருமந்திரம் | ... திருமூலர் |
| திருவிசைப்பா | ... சேந்தனார், கருவூர்த்தேவர் முதலியோர் |
| தொல்காப்பியம் | ... தொல்காப்பியர் |
| தொல்காப்பியம்— நச்சினார்க்கினியம் | ... நச்சினார்க்கினியர் |
| நல்வழி | ... ஔவையார் |
| நன்னூல் | ... பவணந்தி முனிவர் |
| நன்னெறி | ... நல்லாற்றூர் சிவப்பிரகாசர் |
| நன்னூல் விருத்தியுரை | ... சங்கர நமச்சிவாயர் |
| நம்பியகப் பொருள் | ... நாற்கவிராச நம்பி |
| நான்மணிக் கடிகை | ... விளம்பி நாகனார் |
| நாலடியார் | } சமண முனிவர்கள் |
| நீதிவெண்பா | } |
| நீதிநெறிவிளக்கம் | ... குமரகுருபரர் |
| பழமொழி நானூறு | ... முன்றுறையரையனார் |
| பாரதக் கதை | |
| பாரதியார் கவிதைகள் | ... பாரதியார் |



| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| பிரபுலிங்க லீலை | ... நல்லாற்றூர் சிவப்பிரகாசர் |
| புறநானூறு | } பாண்டியன் அறிவுடை நம்பி, பாண்டியன் நெடுஞ்செழியன், பொன்முடியார் முதலியோர் |
| பெரிய புராணம் | ... சேக்கிழார் |
| மதுரைக் கலம்பகம் | ... குமரகுருபரர் |
| மணிமேகலை | ... சாத்தனார் |
| மலரும் மாலையும் | ... தேசிக விநாயகம்பிள்ளை |
| முதுமொழிக் காஞ்சி | ... மதுரைக் கூடலூர்கிழார் |
| வாக்குண்டாம் | ... ஔவையார் |
| வெற்றி வேற்கை | ... அதிவீரராமபாண்டியன் |